# அறிஞர் ஆர். கே. எஸ்.

UNIVERSITY LIBRARY
3 1 MAY 1957
MADRAS
1048

பி. எஸ். செட்டியார்
முன்னைத் தமிழாசிரியர்
தொண்டைமண்டலம் துளுவ வேளாளர் உயர்கலாசாலை
சென்னை

UNIVERSITY EXTENSION LIBRARY
18 DEC 1957
MADURAI

Approved by the Madras T. B. C.
Class use, Non-detailed study, Page 120 Fort St. George Gazette
Supplement to Part 1-B. Dated 19 - 5 - 54.

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

காமன்வெல்த் பப்ளிஷிங் கம்பெனி
21, அப்பர்சாமி கோயில் தெரு
மயிலாப்பூர் : : சென்னை - 4

[காபிரைட்] 1956 [அணா 14

முதல் பதிப்பு: நவம்பர் 1953
இரண்டாம் பதிப்பு: ஜூன் 1954
மூன்றாம் பதிப்பு: ஜூன் 1955
நான்காம் பதிப்பு: ஜூன் 1956

1399

காமன்வெல்த் பிரஸ், மயிலாப்பூர், சென்னை - 4 (4-9)

# உள்ளுறை


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தமிழ் நாட்டின் தவப் புதல்வர் | ... | 5 |
| 2. | விளையும் பயிர் முளையிலே தெரியும் | ... | 9 |
| 3. | அரசியல் களத்தில் அவரது சேவை | ... | 14 |
| 4. | அயல் நாடுகளில் அறிவுச் சுடர் | ... | 30 |
| 5. | தனிப்பெரும் திவான் | ... | 37 |
| 6. | பொருளாதார நிபுணர் | ... | 52 |
| 7. | தமிழ்ப் பணி | ... | 63 |
| 8. | கல்விக்குச் செய்த தொண்டு | ... | 78 |
| 9. | சில முக்கிய நிகழ்ச்சிகள் | ... | 85 |
| 10. | போற்றத் தகுந்த பண்புகள் | ... | 95 |
| 11. | இறுதிக் காலம் | ... | 110 |

# அறிஞர் ஆர். கே. எஸ்.

---

## 1. தமிழ் நாட்டின் தவப் புதல்வர்

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்பர். மானிடராகப் பிறந்தாலும், இறவாப் புகழ் பெறும் வகையில் செயல்கள் புரிந்து, மனிதருள் மாணிக்க மென விளங்குவது அதனினும் மிகமிக அரிதாகும்.

பிறந்த ஊரிலும், தமது சமூகத்திலும் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழும் பேறு பலருக்குக் கிட்டலாம். ஒரு மாவட்டத்திலோ, தாய் நாட்டிலோ அரிய சாதனை கள் புரிந்து பேரும் புகழும் அடையும் தன்மை பலருக்கு இருக்கலாம். ஆனல், பல நாடுகளும் பல இனங்களும் மொழிவழியாகப் பல மாறுபாடுகளும் கலந்துள்ள தேசம் எங்கும் தன்னிகரற்று மிளிரும் நிலைமையை எய்துவது எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய சிறப்பு அன்று. இங்கிலேயில், பிறந்த நாட்டில் மட்டுமன்றி, சொந்த தேசமளவில் நின்றுவிடாமல், சர்வ தேசங்களிலும் தமது திறமையையும் புலமையை யும் நிலைநிறுத்திப் புகழடைவது ஒருசிலருக்கே வாய்க்கும் பேறுகும்.

கிடைத்தற்கரிய இப் பாக்கியம் பெற்றவர்களுள் அறிஞர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களும்

ஒருவராவர். தமிழ் நாட்டின் தவப் புதல்வரான அவர், இந்தியாவின் இணையற்ற தலைவர்களுள் ஒருவர். அறிவுலகமும் அரசியல் உலகமும் பெருமையுடன் ஏற்று, மதிப்புடன் போற்றிப் புகழக்கூடிய நிலையில் வாழ்ந்த உலக மேதையர் சிலருள் திரு ஆர்.கே.எஸ். அவர்களும் ஒருவர் என்பதை அவரது வரலாறு எடுத்துக் காட்டும்.

பிறப்பிலேயே பெருமை பெறுவோரும் உண்டு. பிறந்த பின்னர்த் தம் முயற்சியாலும், ஊக்கம் நிறைந்த உழைப்பினாலும் வாழ்க்கையில் உயர்ந்து மாண்புறு வோரும் உண்டு. மனித வாழ்வின் உயர்வுக்குச் சூழ்நிலைகளும் சந்தர்ப்பங்களுமே முக்கிய காரணங்கள். இவை நிறைந்து இருப்பினும், இவற்றைப் பயன்படுத்திக் கொள்ளும் திறமையும், தகுதியும், ஆர்வமும், உழைப்பும் மிகவும் இன்றியமையாதவை என்பதை எவரும் மறுக்க இயலாது.

செல்வமும் சிறப்பும் நிறைந்த பெருங்குடியில் பிறந்தார் ஆர். கே. எஸ். அவர்கள். நாட்டுக்கு நல்லன காட்டித் தமது வாழ்வை மாண்புறுத்திக் கொள்ள அவாவினார். இளம் பிராயத்தி லிருந்தே அதற்காக உழைத்தார். வெற்றியும் புகழும் பெற்றார்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்பது பொய்யாமொழி அன்றோ?

பேச்சு வன்மை பெற்று அரசியல்வாதியாகி, இருபத்தாறுவது வயதில் சட்டசபையில் அங்கம்

வகித்து, ஆற்றலால் அரசியலாரின் கவனத்தைக் கவர்ந்து சகல உரிமைகளும் பெற்ற ராஜத் தூதுவராக அயல் நாடுகள் சென்று பல அரிய காரியங்களை முடிக்கும் வாய்ப்புக்களைப் பெற்றார் திரு சண்முகம். நாற்பது வயதிற்குள்ளாகவே இக் கௌரவங்களை ஏற்று, நாட்டுக்கும் தமக்கும் நல்ல கீர்த்தியை அவர் உண்டாக்கிக் கொண்டார். நாற்பதாம் வயதில் இந்திய சட்ட சபையின் சபாநாயகராகவும், நாற்பத்தைந்தாவது வயதில் இந்திய சமஸ்தானம் ஒன்றின் திவானாகவும், ஐம்பத்தைந்தாம் வயதில் சுதந்தர இந்தியாவின் முதல் நிதி அமைச்சராகவும் விளங்கிய பெருமை ஆர். கே. எஸ். அவர்களுக்கே உண்டு.

அரசியல் துறையில் ஈடுபட்ட வேறு எவருக்கும் இத்தகைய அனுபவங்களும் கௌரவங்களும் கிட்டவில்லை என்றே சொல்லலாம். இளம்பருவத்தில், ஆங்கில அரசியல் மேதை கிளாட்ஸ்டனையும், இந்திய ராஜதந்திரி கோபாலகிருஷ்ண கோகலேயையும் லட்சிய மூர்த்திகளாகக் கொண்டு, ஆர். கே. எஸ்., ஆர்வமுடன் உழைத்தார். அரசியல் துறையில் சந்தர்ப்பங்களை நாடினார். வெற்றி பெற்றார். பின்னர்ச் சந்தர்ப்பங்களும் வெற்றிகளும் அவரைத் தேடிவந்தன; புகழ்மாலை சூட்டின. அறிவுக்கும் திறமைக்கும் காலமும் உலகமும் அளித்த கௌரவங்கள் அவை. எக்காலத்திலாயினும் சரி, எத்துறையில் எந்தப் பொறுப்பு ஆயினும் சரி, தொட்டனவற்றைத் துலங்க வைத்தார் அவர். அதற்குக் காரணம் அவர்பால் அமைந்த ஆற்றலே ஆகும். பிறப்பிலே வந்த பண்பு மட்டும் அன்று அது; பயின்று தேர்ந்த சிறப்பும் ஆகும்.

ஆர். கே. எஸ். அவர்களின் அறிவும் ஆற்றலும் ஒரு துறையில் மட்டுமே தேங்கிக் கிடக்கவில்லை. அவர் அரசியல் மேதை. பொருள் துறை நிபுணர். அரசாங்க அமைப்பாளர். ராஜதந்திரி. அறிவுலக வீரர். சமூகச் சிற்பி. கல்வித் துறையில் நலங்கள் புகுத்த விரும்பிய ஞானி. நல்ல ரசிகர். உண்மைக் கலைஞர். தொழில் அதிபரும் ஆவர்.

அவர் பணியாற்றிய துறைகள் பல. அவற்றுள் எல்லாம் அவரது திறமையின் முத்திரைகள் பொறிக்கப் பெற்றன. அவர் தொண்டாற்றிய இடங்கள் பலப்பல. கோவையிலாயினும் கொச்சியில் இருப்பினும், ஒட்டாவா நகரிலாயினும் பிரட்டன் உட்ஸ் நகரிலாயினும், லண்டனில் ஆயினும் டில்லியில் ஆனாலும், வாஷிங்டனில் இருப்பினும் ஜினீவாவில் ஆயினும் அவரது அறிவொளி தன்னிகரற்று மின்னியது. அரசியல் சபைகளிலும், இன்னிசைக் கூடங்களிலும், கல்விச்சாலையிலும் உவமை யில்லா மணி விளக்காகத் திகழ்ந்தது அவரது மேதை.

அவருடைய வெற்றியின் அடிப்படை மாபெரும் ரகசிய மெதுவும் அன்று. சிந்தனை, சொல், செயல் ஆகிய மூன்று சக்திகளையும் மகத்தான துணைகளாக மாற்றிக்கொள்ள அவர் கற்றிருந்தார். ஜன சமுதாயத்தை ஆட்டிப் படைக்கும் அரிய சக்தியான சிந்தனையும், சிந்தனைக்கு உரமளிக்கும் ஆழ்ந்த கல்வியும், இவற்றால் வலிவுறுகின்ற செயல் துணிவும் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களின் பண்புகளாக அமைந்துவிட்டன.

இவற்றின் துணையால் அரும்பெரும் தலைவரான ஆர். கே. எஸ். அவர்களின் வாழ்க்கைச் சரித்திரம் இளைஞர்களுக்கு நல்லதொரு வழிகாட்டியாகும். அரசியல் துறையில் பணி புரிய ஆசைப்படுபவர்க்கு ஒளியூட்ட வல்ல தீபஸ்தம்பம் அறிஞர் சண்முகனாரின் வரலாறு.

நாட்டின் சரித்திரத்திலும் உலக சரித்திரத்திலும் குறிப்பிடத் தகுந்த இடம் பெற்ற ஆர். கே. எஸ், சரித்திரத்தை மாற்றி அமைதத திறல் வீரர்களில் ஒருவராகவும் வாழ்ந்தார். தமிழுக்கும் தமிழகத்திற்கும் பெருமை அளித்து வாழ்ந்த டாக்டர் செட்டியார் அவர்களின் நினைவு, தமிழரால் போறறிப் புகழத்தக்கது என்பதில் ஐயமில்லை.

## 2. விளையும் பயிர் முளையிலே தெரியும்

கோயம்புத்தூருள் சீரும் சிறப்பும் பெற்றிருந்த நற்குடியில் 1892-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17-ஆம் தேதி அன்று சண்முகம் பிறந்தார். அவரது தந்தையார் திரு ரா. கந்தசாமிச் செட்டியார் ஆவர். தாயாரின் பெயர் சீரங்கம்மாள்.

கோவையில் அளவிலும் செல்வாக்கிலும் பெரியதாக விளங்கும் வணிகர் குலத்தில், அக்காலத்தில் உப்பிலியபாளையம் ராமசாமி செட்டியார் மதிப்புடன் வாழ்ந்த பெரியார் ஆவர். அவ்வூரின் பெரும் பணக்காரர்களுள் அவரும் ஒருவர். ஆயினும் 'ஆடம்பரத்தி

ஞல் யாரும் பெரிய மனிதர் ஆவதில்லை. குணத்திஞலும் செயலிஞலுமே பெரிய மனிதர் ஆக முடியும்' எனும் உண்மையை அவர் தமது வாழ்க்கையில் மேற்கொண்டு வந்தவராவர். தாமே உழைத்துப் பெரும் பொருள் சம்பாதித்த நிலைமையிலும், எளிய உடை அணிந்து அடக்கமாக விளங்கியது அவரது சிறப்பாகும். 'எப்போதும் எளிமையே உறுதி' என்பது அவரது நம்பிக்கையாம். இந்த நற்குணக் குன்றுதான் சண்முகஞரின் பாட்டன் ஆவர்.

சண்முகஞரின் தந்தையாகிய திரு கந்தசாமிச் செட்டியார் அவர்கள், தமது சமூகத்தினருக்கு வழி காட்டுபவராகவும், வழக்குகளைத் தீர்த்து நியாயம் நிறுவுகிறவராகவும் விளங்கிஞர். அதற்கேற்ற பெருந்தன்மையும், காருணியமும், தாட்சணியத்திற்கு உடன்படாத உறுதியும் அவரிடம் அமைந்திருந்தன. உப்பிலிய பாளையம் ராமசாமி செட்டியாரின் ஒரே மகஞரான கந்தசாமிச் செட்டியாருக்கு நான்கு நற்புதல்வர் பிறந்தனர். அவர்களுள் ஒருவர்தாம் திரு சண்முகம்.

இள வயதிலேயே கந்தசாமிச் செட்டியார் காலமாகிவிட்டார்; ஆகவே, குழந்தைகளை வளர்த்து நல்ல நிலைக்குக் கொண்டுவரும் பொறுப்புப் பாட்டஞரையே சேர்ந்தது. அவர் ஆற்றிய பணியின் தன்மை சண்முகஞரை 'அவையத்து முந்தியிரு'க்கச் செய்த தன்மையிலிருந்தே புலஞகிவிடும்.

திரு ஆர். கே. சண்முகம் கோயம்புத்தூரில் உள்ள 'லண்டன் மிஷன் ஹைஸ்கூ'லில் கல்வி கற்ருர். இப்

பள்ளிக்கூடம் இப்போது 'யூனியன் ஹை ஸ்கூல்' எனப் பெயர் பெற்றுள்ளது. 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்கிற முதுமொழி சண்முகனாரின் வாழ்க்கையிலும் நன்கு புலனாயிற்று.

உயர்நிலைப் பள்ளியில் கல்வி கற்றுவந்த காலத்திலேயே அவர் கல்வி அறிவு நன்கு பெற்றவராகவும், நல்ல பேச்சாளராகவும் விளங்கினார்.

அவர் உயர்நிலைக் கல்வியில் தேர்ந்ததும், 1910-ஆம் ஆண்டில் சென்னைக்கு வந்து 'மதராஸ் கிறிஸ்டியன் காலே'ஜில் சேர்ந்தார்.

சென்னைக் கிறித்தவக் கல்லூரி பெற்றிருந்த புகழைப் போலவே, அதன் தலைவரான டாக்டர் ஸ்கின்னர் அவர்களின் புகழும் சிறப்புற்றது. அவரது அன்பும் ஆதரவும் மாணவர் உள்ளத்தில் பொது நலப் பணியில் ஆர்வம், கூட்டுறவு முறைகளின் தன்மை போன்ற நற்பண்புகளை விதைத்து வளர்த்தன. இவற்றினால் பிற்காலத்தில் நல்ல பலன் பெற்ற மாணவ மணிகளில் ஆர். கே. சண்முகமும் ஒருவர் ஆவர்.

கல்லூரியில் படித்தபோது, உத்தம மாணாக்கராக விளங்கிய திரு சண்முகம், அறிவை, பிற வழிகளில் விரிவு செய்யும் முயற்சிகளிலும் ஈடுபட்டு வந்தார். கல்லூரிப் பேச்சு மேடையிலும், நகரக் கல்லூரிகளுக்கிடையே நிகழும் சொற்போர்களிலும் அவர் முதல்வராகத் திகழ்ந்தார். எளிதில் பரிசுகளைப் பெற்றுக் கொள்ளும் திறமை அவரிடம் இருந்தது.

அக்காலத்தில், சிறந்த பிரசங்கியாக வாழ்ந்து அரும்பெரும் சேவைகள் ஆற்றிய டாக்டர் அன்னி பெசண்ட் அம்மையார் சென்னை நகரத்தில் 'ஒய். எம். ஐ. ஏ.' (இந்திய இளைஞர் கழகம்) என்கிற கலாசார ஸ்தாபனத்தை நிறுவினர். அங்குப் பழகிப் பயன் பெறத் தவறவில்லை திரு சண்முகம். இதன் மூலம் பெசண்ட் அம்மையாரின் ஆதரவுக்கு இலக்கானர் என்பதும் குறிப்பிடத் தகுந்தது. அவரது ஆசியும் ஆதரவும் சண்முகனரின் வாழ்விலே எவ்வளவு தூரம் துணை நின்றன என்பது பின்னர் விளங்கும்.

அரசியல் பிரமுகர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டும், அரசியல் மேதைகளின் வாழ்க்கை வரலாறுகள், ஆராய்ச்சி நூல்கள் முதலியவற்றைக் கற்றும் வந்த ஆர். கே. எஸ்.ஸின் லட்சியம் தாம் அரசியலில் கலந்து பாடுபட வேண்டும்; பிரசங்கியாக விளங்க வேண்டும் என்ற அளவோடு நிற்கவில்லை. உலக அரசியல் ஞானிகளில் முக்கியமானவர்போல் தாமும் அரசியல் மேதையாகி, நாட்டுக்கு வழி காட்டும் தலைவராக மாற வேண்டும் என்ற இதயத் துடிப்பு அவருக்கு இளம் பருவத்திலேயே உண்டு என்று எண்ண இடமிருக்கிறது.

சண்முகனர் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் மாணவராக வாழ்ந்த காலம், முதல் உலக மகாயுத்தத்திற்கு முந்திய நாட்களாகும். அப்போது உலகம் இன்றுள்ளதுபோல் தொல்லைகள் நிறைந்ததாகவும், குழப்பங்கள் மலிந்ததாகவும், அநித்திய நிலையும் பயங்கரமும் கவிந்த சூழ்நிலை பெற்றதாகவும் இருக்கவில்லை. அமைதி,

சந்தோஷம், வாழ்க்கை முன்னேற்றத்தில் நிச்சயமான வழிகள் எல்லாம் இருந்தன. ஆங்கில ஆட்சி ஒளி வீசி நிலைத்து நின்ற காலம் அது. அந்நாளிலே கூட 'இந்தியா சரியான வழியில் முன்னேற—தனது சரித்திரப் பெருமையை மீண்டும் பெற—நாட்டுக்குத் தேவையானது தகுந்த தலைமைப் பீடம்தான்' என்று சண்முகனார் திடமான கருத்துக் கொண்டிருந்திருக்கிறார். அவரது இதய ஒலி 'ஒய். எம். ஸி. ஏ.' மன்றத்தில் நிகழ்ந்த சொற்போரிலே முழக்கமிட்டிருக்கிறது!

'இந்தியாவுக்குத் தேவையானது' என்னும் பொருள் பற்றி நிகழ்ந்த பேச்சுப் போட்டியிலே 'வேண்டும் தக்க தலைமை' என்று பேசினார் ஆர். கே. எஸ். பரிசு அவருக்கே கிடைத்தது.

அந்த லட்சியத் துடிப்போடு உழைத்த அவருக்குக் காலம், தலைமைப் பதவியையும் பொறுப்புக்களையும் வாழ்வின் பரிசுகளாக வழங்கியது பொருத்தந்தானே!

வறண்ட விஷயங்கள் என்று மற்றவர்களுக்குத் தோன்றுகிற பொருள்களைக்கூடச் சுவைபடப் பேசுவதற்குரியனவாக மாற்றிக்கொள்ளும் திறமை சண்முகனாரிடம் ஆரம்ப காலத்திலேயே இயல்பாக ஒன்றி விட்டது. கேட்போருக்கு அலுப்பு ஏற்படாத வகையில், சொல்லும் பொருள் எவையினும் நயமாகப் பேசும் திறனை அவர் பயின்று வந்திருக்கிறார். ஐரோப்பிய இடைககால வரலாற்றைப் பற்றியும், ஜெர்மானிய அரசியல் முன்னேற்றத்தைப் பற்றியும் ஒரு மணி

நேரம் பேசினாலும், மக்கள் ஆர அமர்ந்து சுவைத்துக் கேட்கும்படி அவர் பேசப் பழகி யிருந்தார். அது தற்பயிற்சியினால் வாய்த்த சொல்வன்மை யாகும். அவர் 1915-இல் பி. ஏ. பட்டம் பெற்றபின் சட்டக் கல்லூரியில் பயின்று பி. எல். பட்டத்தையும் பெற்று விளங்கினர்.

## 3. அரசியல் களத்தில் அவரது சேவை

இக்காலத்தில் அரசியல் என்பது எல்லோருக்கும் எளியதாகத் தோன்றும் விஷயமாகிவிட்டது. தகுதியும் திறமையும் இல்லாதவர்கூடத் தம் விருப்பம் போல் புகுந்து விளையாடும் களம் ஆக அது மாறிவிட்டது.

ஆனால், ஆங்கிலேயர் இந்தியாவை ஆட்சி புரிந்து வந்த காலத்தில் நிலைமை முற்றிலும் வேறு விதமாக இருந்தது. செல்வச் சீமான்களும், பட்டதாரிகளும், வழக்கறிஞர்களும், அனுபவத்திலும் அறிவிலும் உயர்ந்தவர்களுமே அரசியல் துறையில் கவனம் செலுத்தி வந்தனர். அக்காலத்தில், கல்லூரியிலிருந்து வெளியேறிய மாணவர்களும், வாழ்க்கைப் பாதையில் புதிதாக அடி எடுத்து வைக்கும் இளைஞர்களும் அரசியலில் பங்கு கொள்வது என்பது சந்தர்ப்ப வசத்தினால் ஏற்படும் நிகழ்ச்சியாகவே கருதப்பட்டது. திட்டமிட்டு அதையே வாழ்க்கையின் குறிக்கோளாக ஏற்றுக் கொள்ளும் இயல்பு அவ்வளவாக நடைமுறையில் வரவில்லை.

திரு ஆர். கே. சண்முகம் செட்டியார் விஷயத்திலோ அரசியல் நுழைவு தற்செயல் நிகழ்ச்சியாக அமைந்தது அன்று. திட்டமிட்டுக் கைக்கொண்ட லட்சியப் பணியாகவே அது வாய்த்தது. அரசியலில் ஈடுபட்ட அன்னாருக்கு வசதியான வாய்ப்புக்கள் தொடர்ந்து எதிர்ப்பட்டதை அவரது அதிர்ஷ்டம் என்றே சொல்லலாம். அச்சந்தர்ப்பங்களை நன்கு பயன் படுத்திக்கொள்ளும் ஆற்றலும், அறிவும், பயிற்சியும் அவர் பெற்றிருந்தார்; ஆதலால், அரசியலில் ஈடுபட்டுக் குறுகிய காலத்தில் அரிய பெரிய சாதனைகளை வெற்றியுடன் முடிப்பது அவரால் சாத்தியமாயிற்று.

சட்டத் தேர்வில் வெற்றி பெற்ற பிறகு, ஆர். கே. எஸ்., கோயம்புத்தூரில் வழக்கறிஞர் ஆனார். அரசியல் தலைவராக வேண்டும் எனும் அவா இருந்ததனால், அவர் அத்துறை சம்பந்தமான நூல்களை மிகுதியும் படித்து வந்தார். அக்காலத்திலேயே அவரது நூல் நிலையம் சிறப்புடனே விளங்கியது.

அந்நாளின் தலைசிறந்த இந்தியத் தலைவர்களான கோபாலகிருஷ்ண கோகலே, பாபு சுரேந்திரநாத பானர்ஜி, விபின சந்திர பாலர் (பி. ஸி. பால்), சித்த ரஞ்சன தாசர் (ஸி. ஆர். தாஸ்) முதலியோரது விரிவுரைகளும், அரசியல் பணியும் சண்முகனாரின் உள்ளத்தில் கிளர்ச்சி உண்டாக்கி வந்தன. தாம் அரசியலில் புகுவது பற்றி ஆர். கே. எஸ்., தலைவர்கள் பலரது ஆலோசனையையும் கேட்டு, அவர்களது அனுபவ மொழிகளை ஏற்றுப் பயன் அடைந்தார்.

சட்டக் கல்லூரியி லிருந்து வெளிப்பட்ட அடுத்த ஆண்டிலேயே, சண்முகனார் அரசியலில் வெற்றிகர மாகப் பங்கெடுத்துக்கொள்ள ஒரு வாய்ப்புக் கிட்டியது.

## சென்னைச் சட்டசபையில் (1920 - 23)

1920-ஆம் ஆண்டில் ஆங்கில அரசாங்கம் 'மாண் டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம்' எனும் புதிய ஏற்பாட்டை இந்தியாவில் அமுல் நடத்த முன்வந்தது. இந்தியாவின் ஜனநாயக அரசியலில் இதுதான் முதல் படி. இது பெரிய பரிசோதனையும் ஆகும்.

இதன்படி நடந்த தேர்தலில் திரு ஆர்.கே. சண்முக மும் கலந்து கொண்டார். சிறந்த தினசரிப் பத்திரிகை யான 'ஹிந்து'வின் அந்நாள் ஆசிரியராக இருந்த திரு கஸ்தூரிரங்க ஐயங்கார் ஆர். கே. எஸ்.ஸுக்குத், தேர்த லில் போட்டியிடுமாறு ஆலோசனை கூறியவர்களுள் முக்கியமானவர். இந்த யோசனை சண்முகனாருக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்தது.

கோயம்புத்தூர் தொகுதியில் தேர்தலுக்காக நின்றவர் வயதில் முதிர்ந்தவராகவும், சண்முக னாரின் நண்பராகவும் இருந்ததால், அவர் வேறு தொகுதியில் போட்டியிட விரும்பினார். ஆகவே, நீலகிரி மாவட்டத்துக்காகப் போட்டியிட்டார். அங்கு, வடுகர்களின் முடிசூடா மன்னராக விளங்கிய ராவ் பகதூர் பெல்லி கௌடர் என்பவரை எதிர்த்து நிற்க நேர்ந்தது. இது பலத்த போட்டி எனினும், திரு ஆர். கே. எஸ்.தான் அதிக வாக்குகள் பெற்றார். இந்த

முதல் வெற்றி சண்முகனாரின் வாழ்விலேயே முக்கிய மானதொரு கட்டமாகும். வருங்காலத்தில் அரிய சாதனைகள் புரிவதற்குத் துணையாகச் சண்முகனாருக்கு வாய்த்த முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

சென்னைச் சட்டசபையின் அங்கத்தினராக வந்த போது, அவருக்கு வயது இருபத்தெட்டுதான். அச் சபையில் அவர்தாம் இளம் வயதினர்.

அதே சமயத்தில் அவர் கோயம்புத்தூர் நகரசபை உறுப்பினராக இடம் பெற்று, அதன் துணைத் தலைவ ராகவும் பதவி ஏற்றார்.

சட்டசபை அங்கத்தினரான நாளிலிருந்தே ஆர். கே. எஸ்., வன்மையும் சாதுரியமும் நிறைந்த சொற் பொழிவுகள் நிகழ்த்திப் பலரது பாராட்டுக்களையும் பெற்றார். அப்பொழுது சென்னையின் கவர்னராக இருந்த வெல்லிங்டன பிரபு அவரது திறமையை உணர்ந்து வெகுவாகப் பாராட்டினார். புதிய சீர்திருத் தத்தின்படி அமைந்த மந்திரி சபையில் முதல் இந்திய மந்திரியாகப் பதவி ஏற்ற பனகல் ராஜா, 'ஆர். கே. எஸ்.ஸுக்கு ஒளி மிகுந்ததோர் எதிர்காலம் காத்திருக் கிறது' என்று அன்றே உறுதி கூறினார். அன்றைய அரசாங்கக் கட்சியான ஜஸ்டிஸ் கட்சியின் பிரமுகர் பலரது கவனத்தையும் ஆர். கே. எஸ்., கவர்ந்தார்.

விரைவிலேயே சண்முகனார், மந்திரி பனகல் அரசரின் அரசாங்கக் காரியதரிசியாக நியமிக்கப் பெற்றார். ஆட்சி முறைகளைப் பற்றி நன்கு தெரிந்து

கொள்ளவும், நிர்வாகத்தில் நல்ல அனுபவம் பெறவும், ஆளும் கட்சியின் அல்லல்களைப் புரிந்து கொள்ளவும் இச்சந்தர்ப்பம் உதவியது.

இச்சமயத்தில் பல முக்கிய ஆய்வுக் குழுக்களிலும் கலந்து ஆராய்ந்து யோசனை சொல்லும் பொறுப்பு அரசினரால அவருக்கு அளிக்கப்பட்டு வந்தது. 'மிதக் குடிச் சீர்திருத்தம்' பற்றி ஆராய்ச்சி புரிவதற்காக இந்தியாவின் பல மாகாணங்களுக்கும் அவர் அனுப்பப் பெற்றார். "மதுபான வகைகளில் 'ரேஷன் திட்ட'த்தை ஏற்படுத்தலாம்" என்று அக்காலத்திலேயே ஆர். கே. எஸ்., ஆலோசனை கூறியுள்ளார்.

கல்விச் சீர்திருத்தக் கமிட்டி ஒன்றிலும் அவர் முக்கியப் பொறுப்பு ஏற்க நேர்ந்தது. மாகாண ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர் மகாநாட்டிற்குத் தலைமை வகித்திருக்கிறார். ஆரம்ப ஆசிரியர் வாழ்க்கைத் தேவைக்குப் போதுமான அளவு ஊதியம் கொடுக்கப்பட வேண்டும் என்று அப்போதே அவர் வலியுறுத்தினார். புதிய சர்வகலாசாலைச் சட்ட அமைப்பிலும் அவர் முக்கியப் பங்கு கொண்டதுண்டு.

நாட்டை வளப்படுத்தும் திட்டங்களில் அவர் ஆரம்பம் முதலே அக்கறை காட்டத் தவறவில்லை என்பதற்கு இவை நற்சான்றுகள் ஆகும். நாட்டின் வளர்ச்சிக்கு அடிகோலும் திட்டங்களுக்குத் தேசியக் கடன்கள் வசூலித்துச் செலவிடலாம் என்று துணிந்து கூறிய பெருமை ஆர். கே. சண்முகனாரைச் சாரும்.

## மத்திய சட்டசபையில் (1923 - 34)

மிகுந்த ஆற்றலும், உயர்ந்த லட்சியங்களும் படைத்திருந்த ஆர். கே. சண்முகனாருக்குச் சென்னைச் சட்டசபை குறுகிய எல்லையாகத் தோன்றியதில் வியப்பே இல்லை. ஆகவே, அடுத்து வந்த தேர்தலில் அவர் இந்தியாவின் மத்திய சட்டசபைக்குப் போட்டியிடத் தீர்மானித்தார். சென்னைச் சபையில் அங்கத்தினராக இருந்தபோதே அவரது புகழ்ஒளி, பிற மாகாணங்களையும் எட்டிவிட்டது. ஆதலின், அவரது தீர்மானம் நல்ல முடிவாகவே கருதி வரவேற்கப் பெற்றது.

சேலம், கோயம்புத்தூர், நீலகிரி ஆகிய மூன்று மாவட்டங்களையும் கொண்ட தொகுதியில், பிரபல அரசியல்வாதி ஒருவரை அவர் எதிர்த்து நின்றார். அவரது சேவையும் சிறப்புக்களும் நாடு நன்கறிந்தனவாகிவிட்டதனால், இத் தேர்தலில் அவர் வெற்றி பெறுவது சிரமமான காரியமாக இருக்கவில்லை. இதனால் 1923-இல் அவர் மத்திய சட்டசபை அங்கத்தினரானார்.

1923 முதல் 1934 முடிய திரு ஆர். கே. எஸ்., மத்திய சட்டசபையில், அரசியல் மணி விளக்காகவும் அறிவுக் கதிரொளியாகவும் திகழ்ந்தார். இப் பதினோரு ஆண்டுகளும் சண்முகனாரின் சரித்திரத்தில் மாத்திரமன்றி, நாட்டின் வரலாற்றிலேயே மிக முக்கியமான காலமாகும்.

இந்திய சுதந்தரத்துக்காகப் போராடிக் கொண்டிருந்தது காங்கிரஸ் மகாசபை. ஆங்கில அரசாங்கம் தாராள மனத்துடன் அளித்துள்ள ஜனநாயக ஏற்பாட்டில் தீவிரமாகக் கலந்து, சட்டசபையில் இடம்பெற்று, உள்ளே இருந்தவாறே அரசினருடன் போராடி உரிமைகளைப் பெறவேண்டும் என்று சில தலைவர் கருதினர். இந்த நோக்கத்தினலேயே, இந்திய தேசியக் காங்கிரசின் கிளை போல 'சுயராஜ்யக் கட்சி'யை அமைக்கும் பணியில் அவர்கள் முனைந்திருந்தார்கள். அவர்களில் முக்கியஸ்தர்களான ஸி. ஆர். தாஸ், சத்தியமூர்த்தி, அ. அரங்கஸ்வாமி ஐயங்கார் போன்றவர்கள், திரு ஆர். கே. சண்முகம் சென்னைச் சட்டசபையில் அங்கம் வகித்தபோதே அவரது ஆற்றலைக் கண்டு வியந்து வந்தார்கள். ஆகையினுல், அவர் மத்திய சட்டசபையில் அங்கத்தினரானதும், சுயராஜ்யக் கட்சி அவரை வரவேற்றது.

தமது தேசிய நோக்கங்களுக்கும் சுயராஜ்யக் கட்சியின் கொள்கைகளுக்கும் பேதங்கள் அதிகமில்லை என்று திரு சண்முகம் உணர்ந்தார்; அக்கட்சியில் சேர்ந்தார். உறுப்பினராக இருந்து பின்னர் 'கட்சிக் கொரடா' (Whip) ஆகப் பணியாற்றினர்.

தியாகத்திற்கும் சேவைக்கும் கீர்த்தி பெற்ற பண்டித மோதிலால் நேருதாம் சுயராஜ்யக் கட்சியின் தலைவராக இருந்தார். திரு சண்முகம செட்டியாரின் திறமையும், நாட்டுப் பற்றும் தலைவரின் மனத்தைக் கவர்ந்தன. பண்டித மோதிலால் ஆர். கே. எஸ். பால்

தனி அன்பு காட்டினூர்; தமது நம்பிக்கைக்கு உற்ற துணைவராகக் கருதினூர்.

பழுத்த அரசியல்வாதியும் அரும்பெரும் தலைவரு மாய் விளங்கிய மோதிலால் நேருவின் நன்மதிப்பை, சட்டசபையில் புகுந்த சொற்ப காலத்திற்குள்ளேயே ஆர். கே. எஸ்., பெற முடிந்தது என்றூல், அவரது ஆற்றலும் அறிவும் உழைப்பும் மிக உயர்ந்தனவாக அமைந்திருக்க வேண்டு மல்லவா ?

1926-ஆம் வருடத்திய சட்டசபைத் தேர்தலின் போது, தென்னிந்தியாவில் சுயராஜ்யக் கட்சியின் கொள்கைகளைப் பிரசாரம் செய்து ஆதரவு தேடும் முழுப் பொறுப்பையும் மோதிலால் நேரு சண்முகனூரிடமே ஒப்படைத்தார். கட்சிக்கு மதிப்புப் பெற்றுத் தர தவறவில்லை திரு ஆர். கே. எஸ்.

இந்தியச் சட்டசபையின் அங்கத்தினரானதும், முதல் அசெம்பிளிக் கூட்டத்திலேயே ஆர். கே. எஸ்., காட்டிய சொல் வன்மையும் ஆர்வமும் திறமையும் அவருக்கு மிகுந்த மதிப்பைப் பெற்றுத் தந்தன.

அச் சட்டசபையில் அங்கம் வகித்தவர் சாதாரண மானவர் அல்லர். பண்டித மோதிலால் நேரு, பண்டித மதனமோகன மாளவியா, லாலா லஜபதிராய், வித்தல்பாய் பட்டேல், ஸ்ரீநிவாச ஐயங்கார் முதலிய அரசியல் மணிகள் அச்சபையில் ஒளியுடன் திகழ்ந்தனர். அவர்களிடையிலும் சண்முகம் செட்டியார் பேரொளி வீசும் வைரமாக விளங்கினூர். சட்ட ரீதியான

ஜனநாயக அமைப்பில் பற்றுதலும், சிந்தனையில் தெளிவும், செயலில் அசாதாரணத் துணிவும் அவர் காட்டிவந்தார்.

பொதுநலப் பணியில் ஈடுபடுபவர் எவராயினும் தமது தாய் நாட்டுக்கு நல்லது செய்யும் ஆர்வத்தோடு தாம் ஏற்றுக் கொள்ளும் பணிக்குத் தம்மைத் தகுதி யாக்கிக்கொள்ள வேண்டுவது மிக அவசியமாகும்; அதன்பொருட்டு மிகக் கடுமையான பயிற்சிகளில் ஈடுபட்டுத் தேறவேண்டும் என்று கோகலே காட்டிய வழியைத் திரு சண்முகனார் பின்பற்றி வந்தார்.

ஒரு பொருளைப் பற்றிப் பேசுவதற்கு முன்னர், அது சம்பந்தமான முழு விவரங்களையும் ஆராய்ந்து சிந்திக்க அவர் தவறியதில்லை. ஆதலின், அவரது சட்டசபைப் பேச்சுக்களில் விஷயஞானம், ஆராய்ச்சி யின் தெளிவு, மாற்றமுடியாத கருத்துரை, சிந்தனை உறுதி முதலியவை நிறைந்திருந்தன. எதை எப்படிச் சொல்லவேண்டும் என்பதைப் பயின்றிருந்தமையால், அவரது பேச்சில் தெளிவும் நயமும் எளிமையும் தன்னம்பிக்கையும் கலந்திருந்தன.

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து"

எனும் தமிழ் மறைக்கு அவர் ஏற்ற இலக்கியமாக விளங்கினார்.

ஆரம்ப நாட்களில் திரு சண்முகம் செட்டியார் பொருளாதாரத் துறையில் அதிக ஆர்வம் காட்டின

ரில்லை. அரசியல் பாண்டித்தியமே அவரது குறிக்கோள்; ஆனால், காலப்போக்கில் பொருளாதாரம் அவர் கருத்தைக் கவர்ந்தது; அன்புக்கும் மதிப்புக்கும் உரிய விஷயமாக மாறியது; அவருக்கு இணையற்ற புகழை வாங்கித் தந்த சிறப்பும் உடையதாயிற்று.

பொருளாதாரத் துறையில் ஆர். கே. எஸ்.ஸின் கவனம் திரும்பியதி லிருந்து சட்டசபை அரிய விவாதங்களும் அறிவுரைகளும் முழங்கும் மணிமண்டப மாக மிளிரத் தொடங்கியது. பொருள் வரவு செலவு சம்பந்தமான விவாதங்களில் ஆணித்தரமான கருத்துக் களைக் கூறி, அரிய சேவை புரிந்தவருள் சண்முக ருக்கு இணையானவர் அன்றைய சட்டசபையில் வேறு எவரும் இருந்ததில்லை.

சென்னைச் சட்டசபையில் அங்கம் வகித்த காலத் திலும், இந்தியச் சட்டசபையில் அங்கத்தினராக இருந்தபோதும், சண்முகம் செட்டியார் அரசாங்கத்தின் செயல்களைக் குறைகூறி, அச்சமின்றிக் கண்டித்துப் பேசும் வீரராகவே விளங்கினர். விவாத விஷயத்தை நன்கு ஆராய்ந்து, சிக்கலான பிரச்னையைக்கூடத் தெளிவாக விளக்கி, தீர்க்கமும் நியாயமும் நிறைந்த யோசனைகளை அவர் கூறிவந்ததனால், அவர் பேச எழுந்ததுமே அரசினர் அஞ்சுவது இயல்பாயிற்று.

எதிர்க்க வேண்டும் என்பதற்காகப் பேசும் வெற்றுரைகளாகவும், அநாவசியமான மிடுக்குப் பேச்சுக்களாகவும் இருந்தால், ஆளும் இனத்தினர் அலட்சியமாகத் தட்டிக் கழித்துவிடுவர். திரு ஆர். கே.

எஸ்.ஸின் வாக்குவன்மை 'பல சொல்லக் காமுறுவர்' பேசும் பண்பில் அமைந்ததில்லை. அதனால் மந்திரிகள் விழிப்புடனிருந்து கவனித்தனர். திரு ஆர். கே. எஸ்., பேசுகிறார் என்றால், அந்நாள் நிதி அமைச்சரான ஜார்ஜ் ஷுஸ்டருக்கு உள்ளக் கலக்கம் ஏற்பட்டு விடுமாம்!

பல சந்தர்ப்பங்களில் சண்முகனாரின் சொற் பொழிவுகளைப் பாராட்டி, சட்டசபை நிகழ்ச்சிகளின் போதே பலரும் வாயார வாழ்த்தியது உண்டு. அவருடைய சகாக்களும் எதிர்க்கட்சியினரும் திருசெட்டியாரின் நாவன்மையை வியந்து போற்றத் தவறுவதில்லை; விவாத முடிவில் சிறப்பான பாராட்டுரைகள் வழங்கி மகிழவும் முன்வந்தனர் பலர்.

இந்தியாவின் நலனுக்கு ஊறு விளைக்கும் என்று தோன்றிய பொருளாதாரச் சீர்திருத்தங்களை எல்லாம் ஆர். கே. எஸ்., தீவிரமாக எதிர்த்துப் போராடினார். பிரிட்டிஷார் இந்தியாவில் புகுத்திய புதிய நாணய மாற்று விகிதம், ரூபாயை ஸ்டெர்லிங்குடன் இணைத்தல் போன்றவை சண்முகனாரின் கண்டனங்களுக்கு உள்ளாயின. நாட்டின் வாணிபத்தைப் பாதிக்கும் வகையில், அரசாங்கத்தினர் செய்த வியாபார ஒப்பந்த முறைகளையும், அவை சமபந்தமான மசோதாக்களையும் அவர் எதிர்த்தார்; நாட்டை வறுமைப்படுத்தும் அரசியல் வரவுசெலவு திட்டங்களில் உள்ள குறைபாடுகளை அம்பலப்படுத்தினார். சுருக்கமாகக் கூறப்போனால், திரு ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களிடமிருந்து பெற்ற நேர்மையும் நியாயமும் வன்மையுமான

எதிர்ப்பைப் போன்ற வேறென்றைப் பிரிட்டிஷ் அரசாங்கம் எக்காலத்தும் எவரிடமிருந்தும் ஏற்ற தில்லை.

தேசிய விவகாரங்களில் திறமையாகச் செய லாற்றிப் புகழ் பெற்று வந்தபோதே, சர்வ தேசீய ரீதியான செல்வாக்கை அடையவும் சண்முகனுருக்கு வாய்ப்புக்கள் கிட்டின. அயல் நாடுகளில் பல இடங் களுக்கும் அவர் சென்று அரிய சாதனைகள் புரிந்து பெருமை பெற்ருர்.

இந்தியாவிலும் மேல்நாடுகளிலும், இந்தியச் சட்ட சபையின் பிரதிநிதியாக அரும்பெரும செயல்களை ஆற்றிவரும் சமயத்தில்தான், உயரிய கௌரவங்கள் சண்முகனுரைத் தேடிவரத் தொடங்கின. அவரது அரசியல் வாழ்வின் குறிக்கோள்கள் வெற்றிகரமாகப் பூரணம் பெறச் சந்தர்ப்பங்கள் துணைநின்றன.

1923-ஆம் ஆண்டு மத்திய சட்டசபையில் சுயேச்சை அங்கத்தினராகப் பிரவேசித்த திரு ஆர். கே. எஸ்., 1925-இல் சுயராஜ்யக் கட்சியின் சார்பில் கலந்து கொண்டார். லாகூரில் கூடிய காங்கிரஸ் மகாசபை சட்டசபையிலிருந்து கட்சி அங்கத்தினர்களை மீட்டுக் கொள்ளத் தீர்மானித்தது. ஆதலால், திரு செட்டியாரும் பிற காங்கிரஸ் அங்கத்தினர்களோடு சேர்ந்து சட்ட சபைப் பதவியை ராஜினுமா செய்து வெளியேறினுர். அரசியல் ஆர்வமும் திறமையும் மிகுதியாகப் பெற் றிருந்த சண்முகனுர் அரசாங்க அமைப்புக்களில் கலந்து

பணியாற்றுது இருக்க இயலுமோ? ஆகவே, அவர் மீண்டும் சுயேச்சையாக நின்று சட்டசபை உறுப்பின ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவரது அரசியல் அனுபவமும், ஏற்றுக் கொள்ளும் பணியைச் சிறப்புற முடிக்கும் ஆற்றலும் கலங்கரை விளக்கின் ஒளிக்கற்றைபோல் பிரகாசித் தன. அதனுல் 1931-இல் அமைக்கப்பெற்ற புதிய சட்டசபையின் ஆரம்ப நிகழ்ச்சிகளின்போது தலைமை வகிக்கும்படி இந்திய வைஸிராய் திரு சண்முகம் செட்டி யாரைக் கேட்டுக் கொண்டார். அந்தப் பொறுப்பைத் திறம்பட யாவரும் விரும்பும்வண்ணம் நிறை வேற்றியதனுல், அங்கத்தினர்கள் அவரையே சட்ட சபையின் உபதலைவராக ஏகமனதாய்த் தேர்ந்தெடுத் தனர். 1931 ஜனவரியில் அவர் அப்பதவி ஏற்ருர்.

1933-ஆம் வருடம் மார்ச் மாதம் திரு ஆர். கே. எஸ்., இந்திய அரசியல் வாழ்வில் மகோன்னதமான கௌரவம் ஒன்றைப் பெற்ருர். இந்தியச் சட்டசபைத் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அங்கத்தினர் அனைவரும் ஏகமனமாக அவரையே தேர்ந்தெடுத் தனர் என்பது குறிப்பிடத் தகுந்த சிறப்பாகும். சட்ட சபையின் சரித்திரத்தில் அது மாண்பு நிறைந்த சம்பவ மாகும். ஜனநாயக முறையில் நிறுவப்பெற்ற சட்ட சபையின் பதினைன்கு வருட காலத்தில், போட்டியின்றி ஒரு தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டது அதுவே முதல் தடவையாகும். அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் சுயேச்சை அங்கத்தினர்களும் கருத்து வேற்றுமை இன்றி ஏகமனமாகச் சண்முகனுரையே மகிழ்ச்சியோடு

தலைவராக ஏற்றுக் கொண்டனர். இதிலிருந்தே அவர்பால் மற்றவர் கொண்டிருந்த அன்பும் மதிப்பும் நன்கு புலனாயின. இப்பதவிக்குச் சென்னை மாகாணவாசி ஒருவர்—அதிலும், தமிழர்—தேர்ந் தெடுக்கப்பட்டது இதுவே முதல் தடவை என்பது பொதுவாக இம்மாகாணத்திற்கும், சிறப்பாகத் தமிழ் நாட்டிற்கும் அளவிலாப் பெருமை அளிப்பதாகும்.

ஆங்கில ஆட்சியில் இந்தியர் ஒருவர் அடையக் கூடிய மிக உயர்ந்த பதவி சட்டசபைத் தலைமைப் பீடம்தான். அன்றைய அரசியலிலும், செல்வாக்கான ஸ்தானங்களிலும் வட இந்தியர்தாம் முன்னே நின்றனர். ஆங்கிலேயருக்கு அடுத்தபடியாக வட இந்தியர்தாம் என்ற பொதுவான எண்ணத்தை மாற்றும் விதத்தில் சென்னை மாகாணத்திலும் தமிழ் நாட்டிலும் ஒருசிலர் பணியாற்றி உயர்ந்தனர். ஆயினும், தமிழ் நாடு தனிப் பெருமை உடையது என்று புகழ்க்கொடி நாட்டிய மாண்பு திரு ஆர். கே. எஸ். அவர்களையே சாரும்.

இந்திய அரசியலில் ஈடுபடுபவர் பெறக்கூடிய மிக உயர்ந்த பதவி திரு சண்முகம் செட்டியாருக்கு இளம்பிராயத்திலேயே கிடைத்துவிட்டது. அவ்வளவு இளம் வயதில், பொறுப்பும் கௌரவமும் உள்ள பதவிக்கு ஏற்ற தகுதியும் திறமையும் வாய்ந்த சபா நாயகர் ஒருவரைப் பெற்ற பெருமை உலக நாடுகளில் வேறு எச் சட்டசபைக்காவது இருந்ததா என்பது சந்தேகமே.

திரு ஆர். கே. சண்முகம் செட்டியார் சட்டசபைத் தலைவரானதும் எல்லோரும் மகிழ்ச்சி அடைந்தனர். ஆங்கில அரசாங்கத்தின் நிதி மந்திரி ஜார்ஜ் ஷுஸ்டரும் பெரிதும் மகிழ்ந்தார். ஆனால், அவரது மகிழ்ச்சிக்குக் காரணம் வேறு!

திரு சண்முகனாரின் தலைமையில் நடந்து முடிவுற்ற முதல் விவாதத்தின்போது பதிலளிக்கையில் அந்த அமைச்சர், "இன்று எனது வேலை மிகவும் சுலபமாகி விட்டது. அதற்காக நான் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன். ஏனென்றால், எப்போதும் எனக்குத் தலைவலி தரக்கூடிய திரு சண்முகம் இன்று சபைத் தலைவராக வந்துவிட்டார். வழக்கம்போல் அவர் இன்றும் தமது எதிர்ப்புக்களையும் தாக்குதல்களையும் பிரயோகித்திருந்தால், இப்போது நான் இவ்வளவு சந்தோஷமாக எழுந்து நிற்க இயலாது அல்லவா?" என்று குறிப்பிட்டார். ஆர். கே. எஸ்.ஸின் திறமைக்கு இதைவிட வேறு நன்மதிப்பும் வேண்டுமோ?

திரு ஆர். கே. சண்முகம் செட்டியார் சட்டசபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர், வித்தல்பாய் பட்டேல் எனும் 'காங்கிரஸ் சிங்கம்' அப்பதவி வகித்திருந்தார். 'கேசரி இருந்த இடத்திலா ஆர். கே. எஸ்.!' என்று அலட்சியமாக எண்ணிய சிலரும் நாட்டிலே இருந்தனர். ஆனால், ஆர். கே. எஸ். ஸுக்கு அத் தலைமைப் பதவி எவ்வளவு பொருத்தம் என்பதும், அப் பதவிக்கு அவர் எவ்வளவு தகுந்தவர் என்பதும் நாளடைவில் நன்கு புலனாயின. அவர்

அந்தத் தேர்வைக் கடமையின் அழைப்பாக ஏற்ருர். தமது திறமையினுல் உயரிய சரித்திரத்தை அவரால் நிலைநாட்ட முடிந்தது. பதவியின் மாண்புக்குப் பெருமை தேடித் தமது மதிப்பையும் அவர் அதிகமாக உயர்த்திக் கொண்டார்.

சட்டசபையின் தலைமைப் பதவி என்பது பொறுப்பு வாய்ந்தது; அன்றி, ஒருவரின் திறமையை மிகுதியாகச் சோதிக்கும் இடமும் ஆகும். ஆழ்ந்த அறிவு, தகுந்த ஆற்றல், சாதுரியம், நேர்மைக் குணம், பட்சபாதம் இல்லாமை, சிறந்த நகைச் சுவை, அந்தஸ்து, பொறுமை முதலிய உயரிய பண்புகள் பலவும் அப் பதவியாளரிடம் பொருந்தி யிருக்க வேண்டும்.

திரு சண்முகம் செட்டியாரிடம் இப் பதவிக்குத் தேவையான பண்புகள் பலவும் குடியிருந்தன என்பதைச் சட்டசபை நிகழ்ச்சிகள் நிரூபித்துவிட்டன. அவரது தகுதியையும் நேர்மையையும் போற்ருதார் இல்லை. சட்டசபையின் எல்லாக் கட்சியினரும் அவருடைய தீர்ப்புக்களை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டனர். எப் பகுதியினருடனும் அவர் பிணக் குறவே இல்லை. சட்டசபை நிர்வாக முறைகள், பழக்கங்கள் பற்றி எல்லாம் அவர் காட்டிய ஞானம் குற்றங்குறைகள் அற்றதாக இருந்தது. சபைத் தலைவர் என்ற முறையிலே அவர் அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டவராக விளங்கினுர்.

1933 ஜூன் மாதம் திரு சண்முகனுர் 'கே. ஸி. ஐ. ஈ.' பட்டம் பெற்ருர். இளம் வயதில் இப் பட்டம் பெற்றவர் மிகவும் குறைந்த தொகையினர். ஆற்றலும் அறிவும் அனுபவத் தேர்ச்சியும் பெற்றுத் தந்த மற்றுமொரு கௌரவம் இதுவாகும்.

1934-ஆம் ஆண்டு, புதிய சீர்திருத்தத்தின் கீழ், பொதுத்தேர்தல்கள் நடைபெறுவதற்காகச் சட்டசபை கலைக்கப்பட்டது. நாடு முழுவதும் தேர்தல்கள் நடைபெற்றன. மத்திய சபையில் மீண்டும் சபாநாயக ராக வரும் எண்ணத்தோடு அத்தேர்தலில் திரு ஆர். கே. எஸ்., கலந்துகொண்டார். ஆனுல், இம்முறை அவருக்கு வெற்றி கிட்டவில்லை. இது அவர் எதிர்பாராத தோல்வி ; என்ருலும், திரு ஆர். கே. எஸ்., மறுபடியும் சபாநாயகராக வரமுடியாமல் போனதால் நாட்டிற்குத் தான் நஷ்டமே தவிர, அவருக்கு எந்த நஷ்டமும் இல்லை. புதிய கௌரவங்கள் அவருக்காகக் காத்திருந்தன.

## 4. அயல் நாடுகளில் அறிவுச் சுடர்

இந்தியாவின் பெருமையைக் கடல் கடந்த நாடுகளிலும் பரவச் செய்யும் சக்தியும் அரசியல் பயிற்சியும் திரு ஆர். கே. சண்முகம் செட்டியாருக்கு உண்டு என்கிற உண்மையை முதன்முதலாக அறிந்து கொண்டவர் டாக்டர் அன்னி பெசண்ட் அம்மையா ராவர். தாம் இங்கிலாந்துக்கு அழைத்துச் செல்லச்

சித்தமாக இருந்த தேசப் பிரதிநிதிக் குழுவில் கலந்து கொள்ளும்படி அம்மையார் திரு ஆர். கே. எஸ்.-ஐயும் அழைத்தார். அவரும் அந்த அழைப்பை ஏற்று இங்கிலாந்து சென்ருர். அவருடன் சென்றவர்கள் ரைட் ஆனரபிள் வி. எஸ். ஸ்ரீநிவாச சாஸ்திரியும், திரு அ. ரங்கநாத முதலியாரும் ஆவர்.

இங்கிலாந்தில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது லண்டன், மான்செஸ்டர், பர்மிங்ஹாம் முதலிய நகரங்களில் பிரமுகர் பலர் அடங்கிய கூட்டங்களில் திரு ஆர். கே. எஸ்., இந்தியப் பிரச்னைகள் பற்றிச் சொற்பொழிவுகள் ஆற்றிச் சபையினரின் பாராட்டுதல் களைப் பெற்ருர்.

அச்சமயம் அவர் ஐரோப்பாவிலும் சுற்றுப் பிரயாணம் செய்தார். ஒரு மாணவன் பள்ளிப் பாடங்களைக் கற்பது போல், பல நாடுகளின் நடைமுறைகளையும் அவர் கண்ணுங் கருத்துமாக ஆராய்ந்து அறிவை விசாலமாக்கிக் கொண்டார். பொதுவாகவே பிரயாணங்கள் அனுபவத் தேர்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் துணை புரியும் இயல்பை யுடையன. அறிவுப் பசியும் ஆராய்ச்சி மனோபாவமும் படைத்திருந்த திரு சண்முகனருக்கு இந்த யாத்திரை கள் மிக்க நன்மை அளித்தன என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

பின்னர், 1926-ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு ஆர். கே. எஸ்., பிரயாணமானுர். பிரிட்டிஷ் சாம்ராஜ்

யத்தைச் சேர்ந்த எல்லா நாடுகளிலும் உள்ள சட்டசபை அரசியல்வாதிகளுக் கிடையே தொடர்பும், அதிக ஒத்துழைப்பும ஏற்படுவதற்கு வாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன் அங்கு ஒரு மகாநாடு கூடியது. அதற்கு இந்தியச் சட்டசபையின் பிரதிநிதியாகச் சண்முகனார் சென்றார்.

எப்பொழுது, உலகின் எந்தப் பாகத்திற்குச் சென்றாலும இநதியாவின் கீர்த்தி வாய்ந்த கலாசாரம், உன்னத லட்சியங்கள் ஆகியவற்றைப் பிரதிபலித்து, உலக நாடுகளின் உள்ளத்தில் நல்லெண்ணத்தை விதைக்கும் சரியான தூதுவராகவே நம் ஆர். கே. எஸ்., விளங்கினார்.

வெள்ளையர் உயர்ந்தவர் என்கிற எண்ணம் உறுதியாக நிலைபெற்றிருந்த காலத்தில் இந்தியாவின் சமத்துவத்தைச் சுட்டிக்காட்ட விரும்பிய செட்டியார் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற மகாநாட்டில் "சாம் ராஜ்யத்தின் நன்மைக்காக உங்கள் தோளோடு தோள் நின்று யுத்தமிட்டுச் சாவதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது. அதுபோல அருகிருந்தே சமத்துவமாக வாழ்வதற்கும் எங்களுக்கு உரிமை உண்டு" என்று முழக்கம் செய்தார்.

சண்முகனாரின் இக் கூற்றுப் பின்னர்ப் பலராலும் எடுத்தாளத் தகுந்த சுலோகமாக மாறிவிட்டது.

ஆஸ்திரேலியாக் கண்டத்தின் பல பகுதிகளிலும் குடியேறியுள்ள எல்லா இந்தியர்களுக்கும்

ஆஸ்திரேலியப் பிரஜைக்குரிய சகல உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்று திரு ஆர். கே எஸ்., வலியுறுத்தினார்.

'சுதந்தர நாடுகளின் பிரிட்டிஷ் காமன்வெல்த்' என்று ஆங்கிலேயர் பிரசாரம் செய்து உலக நாடுகளின் நம்பிக்கையைப் பெற முயன்று வந்தனர். காமன்வெல்த்தில் ஏறக்குறைய முக்கால் பங்கு உடைய பெரிய நாடாகிய இந்தியா சுதந்தர மின்றி அடிமையாகக் கட்டுண் டிருக்கிறது; ஆங்கிலேயரின் பிரசாரம் அர்த்தமற்ற சொற்சேர்க்கையும் பச்சைப் புளுகுமே ஆகும் என்கிற உண்மையைத் தெள்ளத் தெளிவாகத் திரு ஆர். கே. எஸ்., எடுத்துச் சொன்னார்.

அங்கு மகாத்மா காந்திஜீயின் கொள்கைகளை அவர் விளக்கிப் பேசினார்; "ஆளும் ஆசை காரணமாகப் பழங்காலததைப் போல அடக்கி ஆளும் முறைகளைக் கைவிடாமல் பிடித்துக்கொண்டு இந்தியாவை ஆங்கிலேயர் கட்டுப்படுத்தி வைக்க முயன்றால், சரித்திரம் மீண்டும் ஒலிக்கும்; அமெரிக்காவில் நிகழ்ந்த சம்பவங்கள் இந்திய பூமியிலே பெரிய அளவில் தலை தூக்கும்" என்று சண்முகனார் எச்சரிக்கை விடுத்தார்.

இந்தியாவிலே இந்தியரிடையே பல வீரத் தலைவர்கள் கர்ஜனை புரிந்து வந்தார்கள் என்பது உண்மை தான். ஆனால், ஆங்கிலேயர் ஏற்பாடு செய்திருந்த கூட்டங்களிலும், மகாநாடுகளிலும், ஆங்கில ராஜ தந்திரிகளிடையே—அயல் நாட்டுப் பிரதிநிதிகள்

மத்தியிலே—திரு ஆர். கே. சண்முகம் செட்டியார் இந்தியாவின் இதய ஒலியை எக்காளமிட்டுச் செல்லும் வீர முரசாக விளங்கினர் என்பது முக்கியமாகும்.

மெல்போர்ன் நகரில் ஆஸ்திரேலிய சர்க்கார் ஏற்பாடு செய்திருந்த உபசாரக் கூட்டத்தில் ஆர். கே. எஸ்., நிகழ்த்திய பேச்சு உலகத்தின் பெருமதிப்பைப் பெற்றது. இச் சொற்பொழிவை ஆஸ்திரேலியப் பத்திரிகைகள் மிகுதியும் பாராட்டின. "நேர்மையும் ஆண்மையும் நிறைந்த பேச்சு. நியாயம் தவருத பிரசங்கம். ஆணித்தரமாகச் சொல்லப்பட்ட கருத்துக்கள்" என்றெல்லாம் அவை போற்றிப் புகழ்ந்தன. இதன் விளைவாக, பின்னர்த் திரு ஆர். கே. எஸ்., இந்தியாவிலும் இலங்கையிலும் எந்தப் பகுதிக்குச் சென்ருலும், அமோகமான வரவேற்பைப் பெற்ருர்.

1927 முதல் 1930 வரை, தொடர்ந்து மூன்று ஆண்டுகள் ஜினீவா சென்ற 'எம்ப்ளாயர்ஸ் டெலிகேஷ'னுக்கு ஆலோசகராக உடன் செல்லும் வாய்ப்புக்கள் அவருக்குக் கிடைத்தன.

ஜினீவாவில் கூடிய சர்வதேசத் தொழில் மகாநாட்டில் அவர் இந்தியப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். பின்னர் 'லீக் ஆஃவ் நேஷன்ஸ்' நிகழ்ச்சிகளில் இந்தியாவின் தூதுவராக விளங்கினர்.

1932-ஆம் ஆண்டு ஜூலை மாதம் கனடா தேசத்தில ஒட்டவா நகரத்தில் ராஜீயப் பொருளாதார

மகாநாடு ஒன்று நடைபெற்றது. இந்தியாவுக்கும் கனடா, பிரிட்டன் முதலிய நாடுகளுக்கு மிடையே வாணிப ஒப்பந்தம் செய்து கொள்வதே இதன் நோக்க மாகும். இந்தியாவின் சார்பில் மத்திய சட்டசபையின் பிரதிநிதியாக திரு ஆர். கே. எஸ்., ஒட்டாவா சென்றூர்.

பிரிட்டனின் சுயலாபத் திட்டங்களை அங்கீகரிக்க அவர் மறுத்தார். வாணிபத்திலும் இறக்குமதிகளிலும் இந்தியாவின் நலனைப் பாதிக்காத வகையில், அவர் பிரிட்டனுடன் ஒப்பந்தம் நிறைவேற்றினர். தமது பேராற்றலை எல்லாம் துணையாகக் கொண்டு செய்த இந்த ஒப்பந்தம் பற்றித் திரு சண்முகம் செட்டியாரே பெருமை கொண்டார். விருப்பு வெறுப்பற்ற அரசியல் நிபுணர்களும், கட்சிப் பற்று இல்லாதவர்களும் திரு செட்டியாரைப் பெரிதும் பாராட்டினர்.

ஆனலும், நாட்டிலே அவரது செய்கை பெருங் கண்டனத்திற்கு இலக்காயிற்று. பிரிட்டிஷாருடன் எவ் வகையில் ஒத்துழைப்பதும் சுதந்தர லட்சியத்துக்குப் பாதகமானதாகும் என்று காங்கிரஸ் கட்சியினர் அக்காலத்தில் கருதிவந்தனர். அந்நிய நாட்டு உறவை அடியோடு நீக்கிவிட வேண்டும் என்ற பிரசாரம் பரவி வந்த காலம் அது. ஆகையினல், பிரிட்டனுடன் திரு செட்டியார் செய்த வாணிப ஒப்பந்தம் நாட்டைக் கெடுக்கும் திட்டமே ஆகும் என்று காங்கிரஸ்காரர் கண்டனக் குரல் எழுப்பினா. நாட்டின் மூலைக்கு மூலை நடந்த பிரசங்கக் கூட்டங்களிலும் சட்டசபை களிலும் பலர் வன்மையாகக் கண்டித்துப் பேசினர்.

ஆனாலும், இந்திய சட்டசபை பலத்த மெஜாரிட்டி மூலம் திரு ஆர். கே. எஸ்.ஸின் செயலை அங்கீகரித்தது. 1932 நவம்பர் 7-ஆம் தேதி நிகழ்ந்த சட்டசபைக் கூட்டத்தில் திரு ஆர். கே. எஸ்., தமது செயலின் நேர்மையையும் நியாயத்தையும் அழுத்தமாக விளக்கிப் பேசியதுதான் இதற்குக் காரணமாகும். ஒட்டாவா ஒப்பந்தம் இந்தியாவுக்குத் தீமை பயக்கக் கூடியது அன்று; அதனால், நன்மையே ஏற்படும் என்று ஆணித்தரமாக எடுத்துச் சொன்னார்.

"இநத ஒப்பந்தம் பற்றி இன்று இந்தியாவில் நிலைபெற்றுள்ள அறியாமை, வெறுப்பு மனோபாவம் ஆகிய மேகங்களை நீக்கிவிட்டு, சிந்தனை என்கிற கதிரொளியில் பிரச்னையை ஆராய்ந்தால், இந்நாட்டில் உள்ள உற்பத்தியாளர்களுக்கு இதனால் எவ்வளவு லாபம் வரக்கூடும் என்பது தெளிவாக விளங்கும்" என்று அவர் உறுதி கூறினார்.

அவரது சொல்லும் செயலும் எவ்வளவு தீர்க்க தரிசனம பெற்றவை என்பதைக் காலம் நிரூபித்தது. ஒட்டாவா ஒப்பந்த முறைகள் இன்னும் அனுஷ்டானத்தில் இருக்கின்றன. இந்தியாவுக்கு அதனால் நன்மைகளே ஏற்பட்டு வந்துள்ளன. ஆர். கே. எஸ்., அன்று உறுதியாக நின்று ஒப்பந்தம் செய்திராவிட்டால், இந்தியப் பொருளாதாரம் மிகுதியும் பாதிக்கப்பட்டிருக்கும் என்பதில் ஐயமே இல்லை. 'செயற்கரிய செய்வார் பெரியர்' எனும் வாக்கின் உண்மை சண்முகனாரின் செயல் ஒவ்வொன்றிலும் பிரதிபலித்தது. அவர் சாதனைகளினால் தேசம் நன்மை பெற்றது.

# 5. தனிப்பெரும் திவான்

"வெற்றி, தோல்வி இவை இரண்டும் போலிகளே ஆகும். இரண்டையும் சமமாகப் பாவிப்பதே அறிவுடைமை" என்று அமெரிக்காவின் ஜனாதிபதிகளில் ஒருவராக விளங்கிய உட்ரோ வில்ஸன் என்பவர் கூறியுள்ளார்.

அரசியல் களத்தில் அடி வைத்தபோதே சண்முகனார் இப்பொன்மொழியை மனத்தில் பதித்துக் கொண்டார். வெற்றி மேல் வெற்றி கண்ட அவருக்கு 1934-ஆம் வருடத் தேர்தலில் கிடைத்த தோல்வி எதிர்பாராததே ஆயினும், அது அவரைச் சோர்வடையும்படிச் செய்துவிடவில்லை.

ஆற்றல் மிகுந்தவர்களுக்குத் தோல்வியும் பிறிதொரு வெற்றிக்கு அடிகோலும் அஸ்திவாரமாக அமையும். திரு ஆர். கே. எஸ்., வாழ்க்கையிலும் இது உண்மையாயிற்று. அவரது தோல்வி இந்தியச் சட்ட சபைக்கு மாபெரும் நஷ்டம்தான்; எனினும், அது இந்திய சமஸ்தானமாகிய கொச்சிக்கு வாய்த்த அதிர்ஷ்டம் ஆயிற்று.

கொச்சி மகாராஜா பெரிதும் முயன்று சண்முகனாரைத் திவானாக நியமித்தார். 1935-ஆம் ஆண்டில் திரு ஆர். கே. எஸ்., இப்பதவியை ஏற்றார்.

சண்முகனார் பெற்றிருந்த அனுபவங்களும், அயல் நாட்டு யாத்திரைகளினால் அடைந்த அறிவு விசாலமும்,

அரசியல் களத்திலே எழுந்த பலத்த எதிர்ப்புக்களைச் சமாளித்து எய்திய புகழும் அதுவரை திவான்களாகப் பதவி வகித்த யாருக்கும் கிட்டாதவை. எனினும், திரு ஆர். கே. எஸ்., ஒரு சமஸ்தானத்தின் நிர்வாகப் பொறுப்பு முழுவதையும் கொண்ட இப் பதவிக்கு முற்றிலும் புதியவரே ஆவர். ஆனால், அவர் திவானாகப் பதவி ஏற்றதுமே, நிர்வாகத் திறமையிலும் தாம் சளைத்தவர் அல்லர் என்பதை உலகுக்கு உணர்த்தினர்.

1935 முதல் 1941 முடிய ஆறு ஆண்டுகள் திரு ஆர். கே. எஸ்., கொச்சி திவானாகச் செயலாற்றினர். இக் காலத்தில் அரசாங்க நிர்வாகத்தில் தன்னிகரற்ற தனிப் பெரும் மேதை அவர் என்பது நன்கு விளங்கலாயிற்று. கொச்சி சமஸ்தானத்தில் அவர் புகுத்திய சீர்திருத்தங் களும், வளப்படுத்தும் திட்டங்களும் 'அரசியல் நிபுணர்' என்ற சிறப்பைச் சண்முகனாருக்குப் பெற்றுக் கொடுத்தன.

திரு சண்முகம் செட்டியார் திவானாகப் பதவி ஏற்ற சமயத்தில் கொச்சி சமஸ்தானத்தின் நிலைமை திருப்திகரமாக இல்லை. இந்திய சமஸ்தானங்களிடையே கொச்சி நன்கு நிர்வகிக்கப்பெற்று வந்திருந்தபோதி லும், 1935-ஆம் ஆண்டில் எல்லாத் துறைகளிலும் அங்குத் தேக்கமும் குழப்பமுமே நிலவி நின்றன.

பொருளாதார மந்தம் தீராத பிரச்னையாகவே நீடித்தது. அகில இந்திய அரசியல் களத்தில் ஏற்பட்ட அதிருப்தி சமஸ்தானங்களிலும் பரவியது. ஆங்கிலேய சர்க்கார் தாராள மனத்துடன் புகுத்திய

சீர்திருத்தம் வெறும் கண்துடைப்பு வித்தைதான் என்ற முணுமுணுப்பு நாடு முழுமையும் கிளர்ந்து எழுந்தது. அதன் எதிரொலி சமஸ்தான மக்களின் உரிமை கோரிய குரலிலும் தொனித்தது. ஆகவே, சமஸ்தான அதிபதிகளின் நிலைமை நெருக்கடி நிறைந்த தாகவே விளங்கியது. ஆங்கில அரசினரின் கட்டுப் பாடுகள் ஒரு புறம்; சமஸ்தான மக்களின் உரிமைக் கிளர்ச்சிகள் மற்றொரு பக்கம். 'மத்தளத்துக்கு இரு பக்கமும் இடி' என்பதுபோல், மன்னாகளும் இரு புறத் தாக்குதல்களால் தவித்துக்கொண் டிருந்தனர்.

கொச்சி சமஸ்தானத்திலும் அரசாங்க அமைப்பில் மாறுதல் வேண்டும் என்ற கிளர்ச்சி நடைபெற்று வந்தது. அதனுடன், நிர்வாகப் பூசல்களும் அளவின்றிக் கிளம்பின. சுயநலக் கும்பல்களுக் கிடையே தலை தூக்கிய குட்டிக் கலகங்கள், சின்ன புத்தி படைத்த பெரிய அதிகாரிகளின் போக்கு, சாதிப் பூசல்களும் சமயச்சண்டைகளும், பதவிப் பித்துப் பிடித்தவர்களின் தீராத போராட்டம் எல்லாம் தலைவிரித்துத் தாண்டவ மாடின. இவை அனைத்தும் நிர்வாகப் பொறுப்பு ஏற்பவருக்கு ஓயாத தலைவலி தரக்கூடிய தொல்லைகள் அல்லவா?

சமஸ்தான நிர்வாகத்தில் அங்கம் வகிக்கக் கொச்சியில் ஒரு சட்டசபை இல்லாமல் போகவில்லை. ஆனல், அந்தச் சபைக்கு மதிப்பே கிடையாது. அதை 'வம்பு மடம்' என்றும், 'வெறும் பேச்சு மண்டபம்' என்றுமே மக்கள் கருதினர். சண்டப் பிரசண்டம்

செய்யக்கூடிய வாய்வீச்சு வீரர் இரண்டொருவர் அதன் துணையால் சமஸ்தான சர்க்காரின் கவனத்தைக் கவர முடிந்தது; என்றாலும், பொதுவாகச் சட்டசபையைச் செயல் திறம் இல்லாக் கூட்டம் என்றுதான் சர்க்கார் மதித்திருந்தது. நாட்டின் ஆட்சி முறையில் தீவிரமாகப் பங்கு பெறக்கூடிய தகுதியும் ஆற்றலும் உடையது சட்டசபை என்பதை அங்கு எவரும் உணரவில்லை.

திரு சண்முகம் செட்டியார் திவான் பொறுப்பு ஏற்றவுடன் சட்டசபைக்கு உரிய கௌரவத்தை அளிக்க முன்வந்தார். "சட்டசபையினரின் கூற்றுக்கள் நன்கு கவனிக்கப்பட வேண்டியவை; ஆலோசனைக்கு உட்படுத்தவும் ஆதரவு அளிக்கவும் அவசியம் நேரும்போது, அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளவும் தகுந்தவை" என்று அவர் வற்புறுத்தி வந்தார். மக்களின் அன்பையும் ஆதரவையும் சமஸ்தான நிர்வாகத்துக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று பெரிதும் முயன்றார். அதனால், சமஸ்தானப் பத்திரிகைகளும், அரசியல் பிரசங்கிகளும் கூறி வந்த கருத்துக்கள் தகுந்த கவனிப்பைப் பெறுவது சாத்திய மாயிற்று.

திரு ஆர். கே. எஸ்., பதவி ஏற்றதும், சமஸ்தானத்தைச் சீர்குலைத்த நிர்வாக ஊழல்கள், சில்லறைப் பூசல்களை எல்லாம் அடியோடு அழித்துவிடக் கங்கணம் கட்டி உழைத்தார்; நிலைமைகளை ஆராய்ந்து, பரிகாரத்துக்கு வேண்டிய திட்டங்களை வகுத்து வைத்துக் கொண்டு, உறுதியோடு முன்னேறினார்; அரசியலையே மாற்றி அமைத்துவிட்டார்.

சமஸ்தான மக்கள் அரசியல் நிர்வாகத்தில் நேரடியான பொறுப்பு ஏற்றுக்கொள்ள உதவும்படி, 'ஜனநாயக பூர்வமான பொறுப்பாட்சி'யை அங்கு அவர் நிறுவினார். அது ஏனைய சமஸ்தான அதிபரும் திவான்களும் செய்யத் துணியாத தீரச் செயலாகும். சமஸ்தானங்களிலேயே முதன்முதலாக ஜனநாயகப் பொறுப்பாட்சி கொச்சியில்தான் ஏற்பட்டது என்ற பெருமை மாத்திரம் அன்று; இந்தியாவிலேயே எதிர்காலக் குடியரசு அமைவதற்கு முன்னோடியாகக் கொச்சி சமஸ்தானம் ஜனநாயகப் பொறுப்பாட்சி பெற்றது. சரிததிரத்தில் நிலையான இடம் பெற்ற இச் சாதனையை நிறைவேற்றியதிலிருந்தே ஆர். கே. எஸ்.ஸின் ஜனநாயகப் பற்றும், அரசியல் தீர்க்கதரிசனமும் நன்கு புலனாகும்.

அக்காலத்தில் சண்முகனாரின் இச் செயல் அரும் பெரும் சீர்திருத்தமாக மதிக்கப்பட்டது. வயதில் முதிர்ந்த கொச்சிவாசிகள் பலர் 'புரட்சிகரமான போக்கு இது' என்று முணுமுணுத்தாலும், உலக மக்கள் திவானின் திறமையைப் போற்றிப் புகழ்ந்தனர்.

ஏனைய சமஸ்தானங்களில் மன்னர்களின் எதேச்சாதிகாரமோ, திவான்களின் சர்வாதிகாரமோதான் நடைபெற்று வந்தது. 'அரசியல் நிர்வாகத்தில் நேரடியான பங்கு பெறுவது' என்பதை அங்குள்ள மக்கள் கனவில்கூடக் கருத இயலாத நிலைமையே இருந்தது. அங்கிலையில், சமஸ்தானத்தின் தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய முக்கிய பொறுப்புக்களையும் சர்க்கார்

இலாக்காக்களையும் மக்களின் பிரதிநிதிகளிடமே திரு ஆர். கே. எஸ்., ஒப்படைத்தார்.

ஆரம்பத்தில் புகுத்தப்பட்ட சீர்திருத்தம் இனி வரப்போகும் முற்போக்கு முயற்சிகளின் முதற்படி தான்; காலப்போக்கிலே மக்களிடமே முழுப் பொறுப்பும் வந்து சேரும்; மன்னர், சட்டத்தின் பெயரளவில் சமஸ்தானாதிபதியாக இருப்பார் என்று சண்முகனார் உறுதி கூறிச் சமஸ்தான மக்களுக்கு நம்பிக்கை ஊட்டினார்.

அரசாங்க அலுவலகங்கள் அவருடைய கண் காணிப்பில் முழுவதும் மாற்றி அமைக்கப்பட்டன. சமஸ்தானத்தில் நிலவிய பூசல்களுக்கும் ஊழல்களுக்கும் அடிப்படைக் காரணம் பதவி விநியோகத்தில் இருந்த கோளாறுகளே என்பதை ஆர். கே. எஸ்., உணர்ந்தார். இதனாலேயே சமஸ்தானத்தில் வசித்த பல சாதியின ரிடையிலும் குரோதம், அவநம்பிக்கை, குமுறல், கோஷ்டிச் சண்டைகள் பிறந்து வளர்ந்தன; நாட்டில் எவ்விதமான முன்னேற்றமும் ஏற்பட விடாது தடுத்து வந்தன என்பதைத் திரு சண்முகனார் தமது கூரிய நோக்கினால் சரியாகக் கணித்துவிட்டார். சீரழிவை ஒழித்துக் கட்ட அவர் தம் மதி நுட்பத்தால் தகுந்த வழியும் கண்டு அமுல் நடத்தினார்.

உத்தியோகங்களை விருப்பம்போல் இஷ்டப்பட்ட வர்களுக்கு வழங்கும் நிலைமையை மாற்றி, தகுந்த நபர்களைத் தேர்ந்து எடுக்க ஒரு தேர்வுக் குழுவை அவர் அமைத்தார். அனுபவம் வாய்ந்த மூன்று

அதிகாரிகள் அதில் அங்கம் வகித்தனர், அதனுடன், இந்த இனத்திற்கு இவ்வளவு உத்தியோகம், உத்தியோகத் தேர்வு எம்முறையில் நடைபெற வேண்டும என்று வரையறுத்து இனவாரித் திட்டம் ஒன்றையும் வகுத்தார். தேர்வுக் கமிட்டியின் அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட பதவிகளுக்கு நபர்களை நியமிக்கும் போதும், சகல இனங்களுக்கும் உயர்வு தாழ்வு இன்றி, நியாயமான விகிதாசாரம் வழங்க அவர் தவறவில்லை.

தீராத தொல்லையாகவும், ஒடுக்க முடியாத பிரச்னையாகவும் நீடித்து வந்த சிரமமான காரியம் திரு சண்முகம் செட்டியாரின் திறமையால் அடக்கப் பட்டது. சமஸ்தானத்தில் நிலவிய பூசல்களும், வெறுப்புத் தரும் குழப்பங்களும், வெறித்தனமான பத்திரிகைச் சண்டைகளும் இல்லா தொழிந்தன.

சமஸ்தானத்தின் நிர்வாகத் துறைகள், நியாயப் பிரிவுகள், பொருளாதார இலாக்காக்கள் ஆகியவற்றில் அவர் நிலையான சீர்திருத்தங்களைச் செய்தார். விவசாயிகளுக்குப் பொருளுதவி செய்ய வசதியான நிதி ஏற்பாடுகளை நிறுவினார். மக்களுக்கும் சர்க்காருக்கு மிடையே சுமுகமான உறவு நீடிக்கத் துணை செய்யும் ஆலோசனைக் குழு ஒன்றை நிறுவினார்.

அவர் பணியாற்றத் தொடங்கி ஆறு மாதங்கள் முடிவதற்குள்ளாகவே இவற்றில் பெரும்பாலான செயல்களைச் சாதித்து முடித்தார் என்றால், சண்முகனாரின் ஆற்றலும் உழைப்பும் எத்தன்மையவாக இருந்திருக்க வேண்டும்!

மந்தப் பண்பு நிறைந்த நிர்வாக முறையில் வேகத்தையும் விழிப்பையும் ஆர். கே. எஸ்., புகுத்தினார். சுறுசுறுப்பாகக் காரியங்கள் நிகழ அவர் வழி வகுத்தார். அதற்கேற்ற திறமையாளரைத் தேடிப் பிடித்துப் பொறுப்பான பதவிகளில் அமரச் செய்தார். தகுதி அற்றவர்களைக் களைந்தெறிந்தார். 'காக்கா பிடித்தல்', 'குல்லாப் போடுதல்' முதலிய குறுக்கு வழிகளை அவர் ஆதரிக்கவில்லை. திறமையின்மை, சோம்பித் திரிதல், உழையாது எத்தல், வீண் பொழுது போக்குதல் போன்றவற்றைக் கலையாகவும் தொழிலாகவும் மேற்கொண்டவர் யாராக இருந்தாலும் சரி—அவர்களுக்குத் தயங்காமல் சீட்டுக் கொடுத்து வீட்டுககு அனுப்பினார் நம் சண்முகனார்.

அதே சமயத்தில் தகுதியும் திறமையும் அறிந்து பாராட்டக்கூடிய விரிந்த மனப்பண்பும் அவரிடமிருந்தது. அவரது நிர்வாகத்தில், உண்மையான உழைப்பும் திறமையும் உரிய வெகுமானம் பெறாமல் போனதே யில்லை.

இவ்வித உயரிய தன்மைகளினாலும், அரிய செயல்களினாலும் மக்களின் அன்பையும் மதிப்பையும் அவர் பெற்றார். அவரைத் திவானாக நியமித்தபோது விரும்பாதவரும் வெறுப்புக் காட்டியவரும் மனம் மாறி, சண்முகனாரைப் போற்றத் தொடங்கினர்.

இவ்வாறு பல சீர்திருத்தங்களின் வழியாகச் சமஸ்தானங்களின் சரித்திரத்திலே கொச்சிக்குத் தனியானதோர் இடம் ஏற்படுத்திய திரு ஆர். கே. எஸ்.,

மற்றுமொரு பெருஞ் செயலை வெற்றிகரமாக முடித்தார். அதனால், இந்தியாவின் தேசப் படத்திலே கொச்சிக்கு அழியாத இடம் அவர் அமைத்துவிட்டார். அது மட்டுமோ? அச் சமஸ்தானத்தின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தி, லாபகரமான வருவாய்க்கும் வழி அமைத்தார். 'தென்னிந்தியாவின் தலைவாசல்' என்றும், 'அராபிக் கடலின் அழகு ராணி' என்றும் கொச்சி புகழ் அடையும்படி அங்குத் துறைமுகம் அமைத்த சாதனையே அது.

திரு சண்முகம் செட்டியார் திவானாக வந்த சமயத்தில் கொச்சித் துறைமுகம் பூரணத்துவம் பெற்றிருக்கவில்லை. துறைமுகத்தை நிர்மாணிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்த ஸர் ராபர்ட் பிரிஸ்டோ என்பவர் கவலையில் ஆழ்ந்துவிட்டார். அநாவசியமான காலதாமதமும் அக்கப்போரும் சேர்ந்து துறைமுக அமைப்பு வேலையில் தேக்கத்தை ஏற்படுத்திவிட்டன.

துறைமுகத்தின் மூலமாக வரக்கூடிய நிதியைப் பங்கிடுதல், நிர்வாகப் பொறுப்பில் உரிமை பெறுதல், எல்லைகளைத் தீர்மானிப்பது போன்ற விவகாரங்களில், சம்பந்தப்பட்ட சர்க்கார்களினால் திட்டமான முடிவுக்கு வர இயலவில்லை. இவை திருவாங்கூர், கொச்சி, சென்னை, டில்லி சர்க்கார்கள் சேர்ந்து முடிவு கட்ட வேண்டிய பிரச்னைகள். சென்னை சர்க்கார் அளவுக்கு மீறிய எச்சரிக்கையோடு 'பிரச்னையை அணுகினர். திருவாங்கூர் சர்க்கார் தயக்கம் காட்டினர். இவற்றால், இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் இயற்கையாக

அமைந்த துறைமுகத்தை உயரிய முறையில் விஸ்தரிக்கும் திட்டம் தடைப்பட்டு வந்தது. பலப்பல வருடங்களாக இந்நிலை நீடித்தது. இதனால் தேசத்தின் பொருளாதார வளர்ச்சியும் குந்தகப்பட்டுக் கிடந்தது.

திரு ஆர். கே. எஸ்., பதவி ஏற்றவுடனேயே, மிக முக்கியமான இந்த ஆக்க வேலையைப் பூர்த்தி செய்யும் பணியில் ஊக்கமாக முனைந்தார். அவருடைய தனி மாண்பு, காரணகாரிய விளக்கங்களில் அவர் காட்டிய சொல்வன்மை முதலியவற்றினால சென்னை, திருவாங் கூர், டில்லி வட்டாரங்களில் உறைந்து கிடந்த தடங்கல்கள் பலவும், சூரிய கிரணங்கள் பட்ட பனிக் கட்டிகள் போல் மறைந்து போயின.

இச் சந்தர்ப்பத்தில், ஆற்றலிலும் அறிவிலும் கீர்த்தி பெற்ற ஸர் சி. பி. ராமசாமி ஐயர் திருவாங் கூரில திவானாக இருந்தார். இது ஆர். கே. எஸ்.ஸுக்கு அனுகூலமாக முடிந்தது. நாட்டு நன்மையை முக்கிய மாகக் கருதும் பண்பும், அரசியல் தீர்க்கதரிசனமும் பெற்ற இரண்டு திவான்களின் ஒன்றுபட்ட சக்தியைச் சமாளிக்கும் வல்லமை சென்னையிலும் டில்லியிலும் இருந்த ஆங்கில அரசினருக்கு இல்லாமல் போய் விட்டது. கொச்சித் துறைமுகம் முழு உருப் பெற்றது.

உடனடியாக உலக யுத்தம் தலைதூக்கியது. கீழ்த் திசையில் ஜப்பான் ஆக்கிரமித்துக் கொண்டதால், உலகக் கப்பல்களின் போக்குவரவுகளை இந்தியாவின் மேற்குக் கடற்கரையி லிருந்து கண்காணிக்க

வேண்டியது அவசியமாயிற்று. இந்த ஏற்பாட்டின் மூலம் துறைமுகத்தின் நிதி வசூல் அமோகமாகப் பெருகியது. துறைமுகம் முடிவுற்ற இரண்டு ஆண்டு களுக்குள்ளாகவே, போட்ட முதலுக்கும் அதிகமான தொகையை எடுத்துவிட முடிந்தது. பிறகு கொச்சி, திருவாங்கூர் கஜானுக்களுக்கு நிரந்தரமான ஒழுங்கான வருவாய் கிட்ட வசதியும் ஏற்பட்டது.

இத் துறைமுகம் நிர்மாணிக்கப் பெற்றதனுல், கொச்சியின் தகுதி உயர்ந்தது; அதன் வாணிபமும் பொருள் நிலையும் பெருகியது.

அச் சந்தர்ப்பத்தில் கொச்சித் துறைமுகம் உருவடையாமல் விடப்பட்டிருக்குமாயின், பிறகு எக் காலத்திலும் அது பூரணத்துவம் பெருமலே போயினும் போயிருக்கலாம். உலக மகாயுத்தம் தலையெடுத்து நீடித்த காலத்தில் கைவிடப்பட்ட நிர்மாணத் திட்டங்கள் பலவற்றின் கதியையே கொச்சித் துறை முகத் திட்டமும் பெற்றிருக்கக் கூடும். அச் கதி ஏற்படாதவாறு காதத புண்ணியம் திரு ஆர். கே. எஸ். அவர்களையே சாரும். இந்தியாவின் பொருளாதார வரலாறு விரிவாக எழுதப்படுகின்ற காலத்தில், கொச்சித் துறைமுக வளர்ச்சி பற்றிக் கூறும் பகுதியில் சண்முகனுரின் செயல் திறமும் அதன் பலனும் முக்கிய இடம் பெறும் என்பது திண்ணம்.

கொச்சி சமஸ்தானத்திற்கு வளமும் நன்மைகள் பலவும் அளிக்கக்கூடிய வேறு பல திட்டங்களையும் சண்முகனுர் செயற்படுத்தினுர்.

அந்தச் சமஸ்தானத்தில் ஈழவர்கள் தாழ்த்தப் பட்ட வகுப்பினராக மதிக்கப்பெற்று வந்தனர். சமூகத்தில் தாராளமாகப் பழகும் உரிமைகள் இல்லாது அவ் இனத்தினர் துன்புற்றனர். சாலைகள் உபயோகிக் கும் சுதந்தரம் கூட அவர்களுக்கு இல்லாமல் இருந்தது. திரு ஆர். கே. எஸ்., ஈழவர்களின் குறைகளைக் கவனித்து அவர்களுக்கு எல்லா உரிமைகளையும் வழங்கினார்.

உலகத்தில் ஜனத்தொகை மிக அதிகமாக உள்ள நகரங்களில் கொச்சியிலுள்ள மட்டஞ்சேரியும் ஒன்றாகும். அங்கும் பூமிக்கு அடியில் குழாய்கள் பதித்து, நகரத் தண்ணீர் விநியோகத்தைச் சுகாதார முறைப்படி ஒழுங்குபடுத்தும் திட்டம் நிர்வாகிகள் பலரையும் திணறச் செய்து வந்தது. இச் சிக்கலான பிரச்னையையும் திரு சண்முகனார் எளிதாகத் தீர்த்து வைத்தார்.

சாலக்குடியில் உள்ள கற்சாமான்கள் தயாரிக்கும் தொழிற்சாலை திரு ஆர். கே. எஸ்.ஸின் யோசனைப்படி சீர்திருத்தப்பட்டது. 'கொச்சின் டெக்ஸ்டைல்ஸ்' என்கிற உயரிய நெசவுத் தொழிற்சாலையும் அவரது ஆலோசனையின்மேல் நிறுவப்பட்டது.

கொச்சித் துறைமுகத்தை உள்நாட்டுடன் இணைக்கும் திருச்சூர்—கொல்லங்கோடு ரயில் பாதை சிறப்புற அமைவதற்குக் காரணமாக இருந்தவர் திரு சண்முகம் செட்டியார்தாம். தென்னிந்தியாவுக்கும் கொச்சித் துறைமுகத்துக்கும் போக்குவரவு தொடர்பு

உண்டாக்குவதற்காக, ஒரு நீண்ட கால்வாய் வெட்டப்பட்டது. தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய கால்வாய் இதுவே என்று கருதப்படுகிறது. கொச்சியின் போக்குவரவுச் சரித்திரத்தில் பெரும் புரட்சியை உண்டுபண்ணிய இத் திட்டத்தை முடிக்கக் காரணமாய இருந்த ஆர். கே. எஸ்.ஸின் பெயரையே அதற்குச் சூட்டி 'சண்முகம் கால்வாய்' என்று அழைக்கலாயினர்.

கொச்சி சமஸ்தானத்தின் நகரங்களை அழகு படுத்துவதில் திரு ஆர். கே. எஸ்., தீவிரமான ஆர்வம் காட்டினர். அவர் உலகின் பல நாடுகளிலும் சுற்றி முக்கியமான பெரு நகரங்களை எல்லாம கண்டு வியந்தவர். கீழ்த்திசை நாடுகள் நகரச் சீரமைப்பில் மேல்திசை நாடுகளைப் பின்பற்ற வேணடியது அவசியம் என்ற எண்ணம் அவருக்கு இருந்தது; ஆகவே, அதிகாரமும் வசதிகளும் கிட்டியவுடன் தமது கனவுகளை நனவில் திகழும் அழகுகளாக மாற்றிவிட அவர் அரும்பாடு பட்டார். அவரது முயற்சியின் இணையிலா வெற்றிகளாக எர்ணுகுளமும், திருச்சூரும் திகழ்கின்றன.

கொச்சித் துறைமுகத்தை அடுத்து அமைந்துள்ள எர்ணுகுளத்தை 'கீழ்த்திசை வெனீஸ்' என்று சிறப்புப் பெயர் பெறும்படிச் செய்த பெருமை சண்முகனாரைச் சார்ந்ததே. அந்நகரின் அழகுக்கு உயர்வு தரும வகையில் கடற்கரையை எழில் 'மெரீனு'வாக அவர் மாற்றினர். நகர மக்கள் தங்கள் அன்பைக் காட்டும் வகையில் அம் மெரீனுவுக்குச் சண்முகனர் பெயரையே சூட்டி மகிழ்ந்தார்கள்.

எர்ணுகுளத்தின் இன்றைய நாகரிக நிலைமையைப் பார்க்கின்றவர், முன்பு அது எவ்வளவு மோசமாகக் கிடந்தது என்கிற உண்மையைச் சொன்னால் நம்பவே மாட்டார்கள். அவ்வளவு தூரம் அற்புத நகரமாக அது மாறிவிட்டது. இவ்விதம் கொச்சிப் பிரமுகர்களே பெருமையுடன் கூறிக் கொள்கிருர்கள் என்ருல், சண்முகனரின் சாதனை மகத்தானதன்ருே!

திரு ஆர். கே. எஸ்.ஸின் கலை உள்ளம் கட்டட நிர்மாணக் கலைஞர்களுக்கு ஊக்கம் அளிக்கத் தவற வில்லை. எர்ணுகுளத்தில் உள்ள ராம் மோகன் மாளிகை, திருச்சூர் 'டவுண் ஹால்' போன்றவை திவான் சண்முகத்தின் ஆதரவினல் உருவான அழகு நிலையங் களாம்.

பெரிய பெரிய திட்டங்களில் மட்டுமே அவரது சிந்தனை சஞ்சரித்துக் கொண்டிருக்கவில்லை. சிறு விஷயங்களையும் அவர் கருத்துடன் கவனித்தார். கொச்சி சமஸ்தானத்தின் சிறு நகரங்கள்கூட மின்சார விளக்குகள் பெறும்படி அவர் ஏற்பாடு செய்தார்.

"திவான் சண்முகம் செட்டியார் இந்த ஏற்பாட் டைக் கவனித்து முடித்திராவிடில் கொச்சியிலுள்ள பல சிறு நகரங்கள் இன்றும் மின்சார விளக்குகளைக் காணும் பாக்கியம் பெற்றிரா" என்று சமஸ்தானத்தின் பிரபலஸ்தர் ஒருவர் குறிப்பிட்டிருக்கிருர்.

இத்தகைய செயற்கரிய செயல்களைச் செய்து திரு சண்முகனர் சமஸ்தான மக்களின் உள்ளத்தில்

அழியாத இடம் பெற்றார். அதே போல் மன்னரின் மதிப்பையும் அடைந்தார்.

திரு ஆர். கே. எஸ்.ஸைத் திவானாக நியமித்தவர் ஸர் ஸ்ரீ ராமவர்மா எனும் மன்னர் ஆவர். அவர் வயது முதிர்ந்தவர்; புராதனக் கோட்பாடுகள் மத நம்பிக்கை முதலியவற்றில் பற்று மிகுதியும் உடையவர். அவருக்குப் புதிய அரசியல் விவகாரங்களில் அனுபவம் இருந்ததில்லை; எனினும், அவரது கடவுள் பக்தியும் குடிமக்களிடம் காட்டிய ஆதரவும் சமஸ்தான மக்களின் அன்பை அவர்பால் ஈர்த்துவிட்டன. சமஸ்தான மக்களின் நன்மையையும் சமஸ்தானத்தின் முன்னேற்றத்தையும் கருதி, திரு ஆர். கே. எஸ்., செய்து வந்த காரியங்களினால், கொச்சி மகாராஜா மிகவும் மகிழ்வுற்றார். சண்முகனார் திவானாகப் பணியாற்றத் தொடங்கி சில ஆண்டுகள் ஆவதற்குள்ளாகவே, அவரைத் தமது மகன் போலப் பாவித்து மகாராஜா அன்பு செலுத்தி வந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. சண்முகனாருக்கு 'மகாவீரர்' எனும் பட்டம் சூட்டியும் கௌரவித்தார் அவர்.

ஸ்ரீ ராமவர்மா மகாராஜா 1941-ஆம் வருடம் காலமானார். அவருக்குப் பிறகு ஸ்ரீ கேரளவர்மா மகாராஜா பட்டத்துக்கு வந்தார். அம் மன்னர் விரும்பியும், சண்முகம் செட்டியார் ஆறு ஆண்டுகள் திவானாகப் பதவி வகித்த பிறகு விலகிக் கொள்வதாகக் கூறினார். அவரது முடிவு சமஸ்தான மந்திரிகளுக்கும், மக்களுக்கும் எதிர்பாராத துயரச் செய்தியாகவே

தோன்றியது. சண்முகனார் செய்த தீர்மானம் முடிந்த முடிவுதான என்று நிச்சயமாகத் தெரிந்துவிடவும், எர்ணுகுளம்-மட்டஞ்சேரி நகரங்களில் உள்ள பிரமுகர் பலர் கூடிச் சண்முகனாருக்குத் தகுந்த முறையில் பிரிவுபசாரப் பத்திரம் வாசித்தளித்தனர். அப் பததிரங்களில் செட்டியாரின் அருங்குணங்களையும், அரிய திறமைகளையும், பெரிய சாதனைகளையும் உளமாரப் பாராட்டி யிருந்தார்கள்.

"நீங்கள் எப்பணி ஏற்றாலும் அதை அணி செய்யத் தவறியதே இல்லை. நீங்கள் தொட்ட எதுவும் தங்கமாக மாறி ஒளிவிடாது போனதுமில்லை" என்று முடிவுரை கூறியிருந்தனர். அது சண்முகனாரின் ஆற்றலுக்கு ஏற்ற பாராட்டுரையே.

## 6. பொருளாதார நிபுணர்

திரு ஆர். கே. எஸ்., திவானாகப் பணி புரிந்து வந்த காலத்திலும மேல் நாடுகளுக்குப் போக வேண்டிய அவசியம ஏற்பட்டது. 1938-ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஜினீவாவில் கூடிய 'சர்வதேச சங்கம்' ('லீக் ஆஃப் நேஷன்ஸ') நிகழ்ச்சிகளில் பங்குபெறச் சென்ற இந்தியப் பிரதிநிதிகளில் சண்முகனாரும் ஒருவரானார். 'சர்வதேச சங்கம' இந்தியா விஷயத்தில் திருப்திகர மாக நடந்து கொள்ளாததைக் குறித்து அச் சபையி லேயே சண்முகனார் துணிகரமாகத் தம் கருத்தை அறிவித்தார். மேலும் தமது நாவன்மையால் அச்

கூட்டத்தில் இந்தியாவுக்குச் சிறந்த கௌரவத்தை நிலைநாட்டினர்.

திரு ஆர். கே. எஸ்., ஜினீவாவிலிருந்து இங்கிலாந்து சென்றார். இங்கிலாந்தில அவருக்கு அளவற்ற வரவேற்பு நிகழ்ந்தது. கொச்சியில அமுல் நடததப் படும் புதிய அரசியல் சீர்திருத்தங்களினால பிரிட்டிஷ் மக்களுக்கு எவ்வளவு நன்மை ஏற்பட வசதி உணடு என்பதை விளககிப் பேசி, அந் நாட்டினரின் பாராட்டு தல்களைப் பெற்றார்.

இந்தியா திரும்பும் பாதையில், அவர் ரோமாபுரி யில் போப்பாண்டவர் வசிக்கும் 'வாட்டிக்கன் ஸிட்டி' சென்றார். ஆர். கே. எஸ்.ஸுக்குப் போப் அதி விசேஷப் பேட்டி அளித்துக் கௌரவித்தார். அந்நகரிலுள்ள 'ப்ரபகண்டாக் காலேஜ்' (பிரசாரக் கல்லூரி)யில 32 மொழிகளில் வரவேற்புரைத் தயாரித்துத் திரு சண்முகனுருக்கு அளித்தனர். இத்தகைய கௌரவம பெற்ற இந்தியர் மிகவும் குறைவாகவே இருப்பர்.

திரு சண்முகம் செட்டியார் திவான் பதவியி லிருந்து விலகிக்கொண்ட பிறகு, பொருளாதாரத் துறையிலும் தொழில் துறையிலும் பல அரிய சேவை கள் செய்வதற்கு வசதியான வாய்ப்புக்கள் அவரைத் தேடி வந்தன.

கொச்சியிலிருந்து கோவை வந்த ஒரு சில மாதங் களிலேயே திரு சண்முகனுருக்கு இந்திய சர்க்காரிட மிருந்து ஓர் அழைப்புக் கிடைத்தது. 1941-இல்

அமெரிக்கா செல்வதற்குத் தயாரான இந்தியக் கொள்முதல் குழுவின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள உரிய அழைப்பே அது.

அமெரிக்காவிடமிருந்து இந்திய சர்க்காரின் சார்பில் யுத்த தளவாடங்களை வாங்குதல்; அங்கிருந்து ஏற்றுமதிக் கப்பல்களுக்கு வசதியான ஏறபாடுகள் செய்தல்; இந்திய சர்க்காருக்கு முதல் சலுகை காட்டும்படி வேண்டுதல்; வாங்கும் பொருள்களுக்கு உரிய விலையை உடனடியாகச் செலுத்தாமல் கடன் திட்டத்தில் பெறுவதற்கு அமெரிக்க அரசினரின் அங்கீகாரம் பெறுதல் ஆகிய முக்கிய காரியங்களை முடிப்பதுதான் இக் குழுவினரின் கடமையாக அமைந்தது.

இப்பொறுப்பைத் திரு ஆர். கே. எஸ்., வெற்றி யுடன் முடித்தார். யுத்தத்தின்போது இந்தியா எத்தகைய கேந்திர ஸ்தானமாகத் திகழக்கூடியது என்பதையும், இந்தியாவில் கிடைக்கக்கூடிய மனித பலம், போர்க் கருவிகளுக்குத் தேவையாகக் கிடைக்கும் இயற்கைப் பொருள்கள், நாட்டின் தொழில் திறமை ஆகிய எல்லாவற்றையும் அமெரிக்காவுக்கு விளக்கி, அமெரிக்க அரசியல் தலைவர்களின் மனத்தில் நல்லெண் ணத்தை உண்டாக்கினர். சண்முகனாரின் சாமர்த்தியத் தினல் பிரிட்டிஷார் பெற்ற சலுகைகளை எல்லாம் இந்தியாவும் அமெரிக்காவிடமிருந்து பெற முடிந்தது.

இந்தச் சிரமமான பணியில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே, நியூயார்க் நகரில் கூடிய சர்வதேசத்

தொழில் ஸ்தாபனத்தினரின் மகாநாட்டு நிகழ்ச்சிகளில் இந்திய சர்க்காரின் பிரதிநிதியாகக் கலந்துகொள்ளும் பொறுப்பும் திரு சண்முகனுருக்கு ஏற்பட்டது. இந்தியா போன்ற விவசாய நாட்டில் விவசாயிகளின் பிரச்னைகள் முதன்மையாகக் கவனிக்கப்பெறவேண்டிய அவசியத்தை அவர் வலியுறுத்திப் பேசினுர். ஜன நாயகம் பற்றி மேல்திசையினர் கொண்ட தந்திரக் கருத்துக்களை அவர் வன்மையாகச் சாடினுர். சுயாட்சி யும், சிறப்புற வாழ வழிவகுத்தலும் மேல்நாட்டினரின் ஏகபோக உரிமைகள் என்று எண்ணிவரும் அவர்களது மனுேபாவத்தைக் கணடித்து, உலகநிலை உயரவேண்டு மானுல் மேலை நாட்டினர் ஆசியாவை அலட்சியப் படுத்தும் போக்கை விட்டுவிடுதல் வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினுர்.

அதே காலத்தில், நியூயார்க் நகரில் ' இந்திய-சீன நல்லுறவு நாள் ' கொண்டாடப்பட்டது. பேர்ள் பக் எனும் நாவலாசிரியையும், வெண்டல் வில்கி எனும் அரசியல் நிபுணரும் சிறப்புறுத்திய அவ் விழாவில் திரு ஆர். கே. எஸ்.ஸும் கலந்துகொண்டார். ஆசிய மக்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் ஆசையை மேலைநாட்டினர் விட்டொழித்தல் வேண்டும்; கீழ்த் திசை நாட்டுப் பிரச்னைகளை அந்நாட்டினரே தீர்த்துக் கொள்ள முடியும் என்று திரு ஆர். கே. எஸ்., முழக்கம் செய்தார். " இந்தியன் என்கிற முறையிலே சொல் கிறேன்—என் தாய்நாடு பூரண விடுதலை பெற வேண்டும். எனது தேசத்தின சுதந்தர விஷயத்தில் விதிகளும் கட்டுப்பாடுகளும் இடுவதை நான் விரும்ப

வில்லை" என்று அவர் முழங்கினர். திரு சண்முகனரின் தேசப் பற்றுக்கு இதுவும் நல்ல ஓர் உதாரணம் அன்ருே?

1942-ஆம் ஆண்டு திரு ஆர். கே. எஸ்., அமெரிக்காவிலிருந்து இந்தியா திரும்பினர். அவர் வரும்பொழுதே இந்தியாவில் யுத்தக் கருவிகள் உற்பத்தி செய்யத் திட்டமிடுவதற்காகவும், தேவையான இயந்திரங்களை அமெரிக்கா விநியோகிப்பது பற்றி ஆராய்ச்சி நடத்தவும் சித்தமாக அமெரிக்கத் தொழில் நிபுணர்கள் கோஷ்டி ஒன்றையும் உடன் அழைத்து வந்தது குறிப்பிடத் தக்கதாகும்.

1944-ஆம் வருடம் அமெரிக்காவில் பிரிட்டன் உட்ஸ் நகரில் சர்வதேச நாணய மாநாடு ஒன்று கூடியது. இந்திய சர்க்காரின் சார்பில் சண்முகனரே அம் மாநாட்டில் கலந்துகொண்டார். சர்வதேச நாணய மாற்று விவகாரங்களில் காணப்பட்ட குறைகளைத் தவிர்க்கும் வழிகளை வகுத்தல்; அதனமூலம சர்வதேச வாணிபம் வளமடையத திட்டமிடுதல்; சர்வதேச நாணய நிதி அமைத்தல் போன்ற முக்கியப் பிரச்னைகள் பலவற்றை ஆராய்வதே அம் மாநாட்டின் நோக்கம் இந்தியப் பொருளாதாரத்தை வளப்படுத்தும் வகையில் பிரிட்டன் இந்தியாவுக்குத் தரவேண்டியிருந்த யுத்தக் கடன் நிதி நிபந்தனைகளில் முகிய மாறுதல்கள் செய்யவேண்டும் என்று திரு ஆர். கே. எஸ்., வாதாடினர். அவர் முயற்சி முழு வெற்றி பெறவில்லை; ஆயினும், இந்தியா 'உலக பாங்க்', 'சர்வதேச நாணய நிதி' ஆகியவற்றிலிருந்து பொருள் உதவி பெற

முடிந்தது. இவ் உதவிகள் இன்றும் நடைமுறையில் பலனளித்து வருகின்றன.

1945-இல் 'சேம்பர் ஆஃவ் பிரின்ஸஸ்' எனும் அமைப்பின் சான்ஸ்லருக்கு ஆலோசகராகத் திரு ஆர். கே. எஸ்., நியமிக்கப்பட்டார்; பின்னர், சில மாதங்களுக்குள்ளாகவே 'இந்தியன் டாரிப் போர்டு' எனும் ஸ்தாபனத்தின் தலைவர் ஆனார். 1947 வரை அவர் இப் பதவி வகித்தார். நாட்டில உளள எல்லாத் தொழில்களின் நிலைமையையும் அராய வேண்டிய பொறுப்பு அவருக்கு ஏற்பட்டது. அவ் விதம் ஆராய்ந்து, நாட்டின் தொழில்துறை முன்னேறறத்திற்காக எவ்வெத் தொழில்களுக்குச் சர்க்காரின பாதுகாப்பு அவசியம் என்று தோன்றியதோ, அதுபற்றி உரிய சிபாரிசுகளை அவர் வழங்கினார்.

கோவையில் மிக நன்றாக நிர்வகிக்கப்படுகின்ற நெசவாலைகளில் ஒன்றான 'வசந்தா மிலஸ்' சொந்தக்காரர் என்ற முறையிலும், சிமிண்டுத் தொழிலில் தொடர்பு கொண்டிருந்ததாலும், நேரடியான தொழில் அனுபவம் அவருக்கு உண்டு. இவ் அனுபவத்தால் இந்தியத் தொழில் அமைப்புக்களின பலமும் பலவீனங்களும் அவருக்கு நன்கு புரிந்திருந்தன. அவர் ஏற்றுக் கொண்ட கடமையைச் செவ்வனே ஆற்ற இவை துணை நின்றன. சுதந்தர இந்தியாவில் இந்த ஸ்தாபனம் முக்கிய அங்கம் பெறறது. திரு ஆர். கே. எஸ்.ஸின் ஆற்றல் மிகுந்த நிர்வாகததினாலும், அனுபவம் நிறைந்த ஆலோசனைகளினாலும் தொழில் ஸ்தாபனங்

களும் நற்பலன் பெற்றன; நாட்டு மக்களும் நன்மை எய்தினர்.

1947-ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 15-ஆம் தேதி இந்தியா சுதந்தரம பெற்றது. பாகிஸ்தான் பிரிக்கப் பட்டதால், இந்தியப் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்ற அச்சம் நிலவியது. புதிதாகத தோன்றிய சுதந்தர நாட்டின் சிக்கலகள் நிறைந்த பொருளாதாரப் பிரச்னை களைச் சமாளித்து, நாட்டை நனனிலைப்படுத்தக்கூடிய பேராற்றல் நிறைந்த ஒருவரைச் சுதந்தர சர்க்காரின் நிதி மந்திரியாக அமர்த்துவது அவசிய மெனத் தலைவர் உணர்ந்தனர். பொருளாதார நிபுணரும், அரசியல் மேதையும், அரும்பெரும் செயல்கள் ஆற்றிய அறிஞருமான திரு ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களே இப் பொறுப்பைத் திறம்பட வகிக்கக் கூடியவர் என்ற எண்ணம் தலைவர்களுக்கு எழுந்தது அதிசயம் இல்லையே! ஆகவே, அவருக்கு டில்லியி லிருந்து அவசர அழைப்பு வந்தது.

இப் பதவி வேண்டும் என்று திரு ஆர். கே. எஸ்., அவாவியவரும் அல்லர். அது தமக்கே வரும் என்று எண்ணி எதிர்பார்த்தவரும அல்லர். ஆனால், மாண்புறு பதவி அவரைத் தேடிவந்தது. அப் பொறுப்பை அறிஞர் சண்முகத்துக்கு அளிக்கும்படி யோசனை கூறியவர் இந்திய சுதந்தரத் தந்தை மகாத்மா காந்தி அடிகள்தாம் என்று அச்சமயம் பேச்சுப் பரவியது. அதன் உண்மை எவ்வாருயினும், சுயராஜ்யக் கட்சியில் முக்கியப் பொறுப்பு வகிக்கும்படி அழைத்துத் திரு ஆர். கே. எஸ்.ஸைக் கௌரவித்தவர் கட்சித் தலைவர்

பண்டித மோதிலால் நேரு ஆவர். சுதந்தர சர்க்காரில் முக்கியப் பொறுப்பு ஏற்கும்படி திரு சண்முகனாரை அழைத்து அவரைக் கௌரவித்தவர் மோதிலாலின் புதல்வர் பண்டித ஜவஹர்லால் நேரு ஆவர். இதில் உள்ள பொருத்தமும் சிறப்பும் எண்ணி எண்ணி வியப்பதற்கு ஏற்றனவேயாம்!

கடமையின் அழைப்பை அறிஞர் சண்முகம் என்றும் தட்டிக் கழித்தவர் அல்லர்! ஆதலின், 'சர்' பட்டத்தைத் துறந்து பதவி ஏற்றார்; சுதந்தர இந்தியாவின் முதல் நிதி மந்திரி ஆனார்.

திரு ஆர். கே. எஸ்.ஸின் தேர்ந்த ஞானமும் திறமையும் புதிய குடியரசின் பொருளாதாரத்தைச் சீருற அமைப்பதில் பெரிதும் பயன்பட்டன. சுதந்தர அரசாங்கம் அமைக்கப்பட்டதும் 'தற்கால வரவு செலவுத் திட்டம்', 'முதல் வரவுசெலவுத் திட்டம்' ஆகிய இரண்டையும் கணித்த சிறப்புத் திரு சண்முக னாருக்குக் கிட்டியது. அத் திட்டங்களைச் சமர்ப்பித்த போது அவர் நிகழ்த்திய பிரசங்கங்கள் நாட்டு மக்களுக்கு நம்பிக்கை ஊட்டின. இந்தியாவின் பொருளாதாரம் அசைக்கமுடியாத நிலைமை வாய்ந்தது; ஆகவே, அஞ்சுவதற்கு எதுவும் இல்லை என்ற உண்மையை அவரது சொற்பொழிவுகள் நாட்டின ருக்கும் உலகுக்குப் தெளிவுபடுத்திவிட்டன.

திரு சண்முகனார் நிதி மந்திரியாகச் செயலாற்றியது சொற்ப காலமே; எனினும், அக்கால எல்லையினுள்

1399.

நாட்டை எதிர்த்து நின்ற சிக்கலான பிரச்னைகள் சிலவற்றை அவர் சுலபமாகத் தீர்த்து வைத்தார்.

பிரிட்டிஷார் இந்தியாவுக்குத் தரவேண்டிய கடன் பாக்கிகளுக்கு 'வழி காண' முயற்சிகள் நடைபெற்றன! மகாயுத்தத்தினல் பிரிட்டன் பாதிக்கப் பெற்றிருந்த விஷயம், யுததத்துக்குப் பிந்திய விளைவுகள் பற்றி எல்லாம பிரிட்டிஷார் காரணம் காட்டிவந்தனர். தர்ம நியாயங்கள் எல்லாம் பேசி, ஸ்டெர்லிங் நிதியைக் குறைக்க வேண்டும் என்று சர்ச்சில் துரை வாதாடினர். இந்த விவகாரத்தை முடிவு செய்வதற்காக திரு ஆர். கே. எஸ்., 1948-ஆம் ஆண்டில் லண்டன செனருர்.

சுதந்தரம பெற்ற நாட்டையும், அதன் நிதி மந்திரி யான தம்மையும் எதிர்தது நினற பெரிய பொருளா தாரப் பிரச்னையைத் திரு சண்முகனர் சுலபமாகத் தீர்த்தார். ஸ்டெர்லிங் விவகாரம் ஒரு நாட்டுச் சர்க்காருக்கும் மற்ருெரு நாட்டுச் சர்க்காருக்கும் இடையே ஏற்பட்ட கொடுக்கல் வாங்கல் அன்று; ஒரு நாட்டுப் பாங்கியும் இன்னெரு நாட்டுப் பாங்கியும் நடத்திவந்த வாணிபததினல விளைந்த கடன்பிரச்னையே ஆகும். இது 'இங்கிலாந்து பாங்கு'ம் இந்தியாவின் 'ரிசர்வ் பாங்கு'ம் சம்பந்தப்பட்ட விஷயம். ஆதலால், பிரிட்டிஷ் சர்க்காரைக் கட்டுப்படுத்தும யுத்தக் கடன் அன்று. யுத்ததத்தினல் இந்தியாவும், அதன பொருளா தாரமும் வெகுவாகப் பாதிககப்பட்டிருக்கின்றன. தார்மீக முறைப்படி பார்த்தாலும், இந்தியா நிதியைக் குறைத்து வாங்கிக்கொள்ள வேண்டிய அவசியமே

இல்லை. இப்படி மறுக்க முடியாத வகையில் உறுதியான காரணங்களும் விளக்கங்களும் கூறி, ஸ்டெர்லிங் விவகாரத்தைத் திரு ஆர். கே. எஸ்., சுமுகமாகத் தீர்த்து வைத்தார்.

திரு ஆர். கே. எஸ்., உறுதியாக நின்றிராது போயின், இந்தியா அதிக நஷ்டம் அடைந்திருக்கும். பிரிட்டிஷாருடன் நடந்த இப் பேரத்தில் திரு சண்முகனார் நாட்டுப் பற்று மிக்கவராக வாதாடினார்; ஆற்றல் நிறைந்த ராஜதந்திரியாக வெற்றி பெற்றார். இன்னும் சில நாணயமாற்றுப் பிரச்னைகளைக் குறித்தும் பிரிட்டனுடன் இந்தியாவுக்குச் சாதகமான ஒப்பந்தம் நிறைவேற்றினார்.

இவ்வாறு, நிகரில்லாப் பொருளாதார ஞானத்தாலும், அனுபவ அறிவாலும், உறுதியான ஆற்றலாலும் நிதி மந்திரி பொறுப்பில் அமர்ந்து நலன்கள் பல செய்துவந்த திரு சண்முகனாரின் மன அமைதியைக் குலைக்கும் வகையில் 'புயல' ஒன்று டில்லியில் வீசியது. இதன உண்மை எவருக்கும் திட்டமாகத் தெரியவில்லை. எனினும் நிர்வாகத்தில் ஏற்பட்ட கருத்து வேற்றுமையின் பெயரால், சட்ட சபையில் அறிக்கை விடுதது. திரு ஆர். கே. எஸ்., பதவியை ராஜிநாமாச் செய்தார். அவரது நிர்வாகத்தால் அளவற்ற நனமைகள் பெறலாம் என எண்ணியிருந்த நாட்டினர், எதிர்பாராத இம் முடிவைக் கேட்டு வியப்பில் ஆழ்ந்தனர்.

மந்திரி சபையை விட்டு விலகி வந்த திரு ஆர். கே. எஸ்., சில அரசியல் தலைவர்களைப் போல் கசப்பான

அறிக்கைகளோ, வெறுப்பூட்டும் விளக்க உரைகளோ, ஆத்திரம் அளிக்கும் சொல்மாரிகளோ விடுக்கவில்லை. 'நன்றல்லது அன்றே மறப்பது நன்று' என்று எண்ணி, கண்ணியமும் கௌரவமும் நிறைந்த முறையில் அமர்ந்துவிட்டார். திரு சண்முகனாரின் தனி மனித மாண்புக்கு இதுவும் ஒரு சான்றாகும்.

இந்தியப் பாராளுமன்றத்தில் தமக்கு இருந்த அங்கத்தினர் பொறுப்பையும் அவர் 1949-இல் ராஜிநாமாச் செய்துவிட்டார்.

ஆயினும், அவரை அரசியல் துறவு பூணும்படி சென்னை சர்க்கார் விட்டுவிடவில்லை; 'சென்னை ராஜ்யத் தொழில் வளர்ச்சிக் கார்ப்பரேஷ'னுக்குத் தலைவராக இருக்கும்படி கோரினர். 1950-இல் திரு ஆர். கே. எஸ்., அப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

பொதுவாக இந்தியா முழுமையும் தொழில் துறைகளில் தீவிரமாக முன்னேறவில்லை என்பது உண்மைதான். இங்கிலையிலும், வட இந்தியாவோடு ஒப்புநோக்கும்பொழுது, தென்னிந்தியா மிகவும் பின் தங்கியே நிற்கிறது. சென்னை ராஜ்யமும் தொழில் துறையில் முன்னேற்ற மடைவதற்குத் தேவையான ஆலோசனைகளும் செயல் திட்டங்களும் வகுக்கத் திரு ஆர். கே. எஸ்.ஸின் திறமை பெரிதும் பயன்பட்டது. தகுந்த தொழில் ஸ்தாபனங்களுக்குப் பொருள் உதவியும், புதிய தொழில் முயற்சிகள் வளரப் பேராதரவும் கிட்ட அவர் வழிகாட்டினார்.

பின்னர், 1951-இல் திரு ஆர். கே. எஸ்., அண்ணுமலைச் சர்வகலாசாலையின் துணைவேந்தராளுர்.

## 7. தமிழ்ப் பணி

சில ஆண்டுகளாகவே நம் தாய் மொழியாகிய தமிழ், உரிய கவனிப்பையும் போற்றுதலையும் பெற்று வருகிறது. முன்பெல்லாம தமிழா்ர தமிழைப் புறக் கணித்தனர். தமிழ் நாட்டில் தமிழ் அலட்சியப்படுத்தப் படடது. தமிழனோடு தமிழில் பேசவேண்டும் என்கிற உணர்ச்சியை ஆங்கில மோகம் கொண்டவர் இழந்துவிட்டனர். பட்டதாரிகளும், உத்தியோகம் தேடுவோரும், பதவிப் பிததரும் ஆங்கிலத்துக்கு அடிமைப்பட்டுக் கிடந்தனர். நாடாள்வோர் ஆங்கிலேயராக இருந்ததுதான் இந்நிலைக்கு முக்கிய காரணமாகும். அரசியல் சுதந்தரம் பெற வேண்டும் என்ற விழிப்பு முதலில் எழுந்தது. அதன் பயனாகத் தாய் மொழிக்கு உயர்வு எனும் துடிப்பும் பிறந்தது.

திரு சண்முகம் செட்டியார் பட்டம் பெற்று, அரசியல் களத்தில் புகுந்து, பதவிகள் பல ஏற்றுத் திகழ்ந்த காலத்தில் எல்லாம் ஆங்கில மோகம் பெறறவ ராகவே விளங்கினர். அவருடைய அந்நாள் நிலைமை பற்றி அவரே எழுதியிருக்கிறுர், பாருங்கள் :

"நான் பள்ளியிலும் கல்லூரியிலும் படித்த காலத்தில் தாய் மொழிக்கு மதிப்பில்லை. அந்தக் காலத்து மாணவருள் பெரும்பான்மையோர்க்குத்

தமிழ் உணர்ச்சியுமில்லை. ஆகவே, நான் சர்வகலாசாலைப் பட்டம் பெற்று வெளியேறியபோது, தமிழ்க் கல்வியைப் பொறுத்தமட்டில் என் அறிவு இருள் அடைந்திருந்த தென்றுதான் சொல்லவேண்டும். தமிழ் நாட்டில், தமிழ் மக்கள் இடையில் குருடனைப் போல் வாழ்ந்து வந்தேன்."

"பல ஆண்டுகள் கழிந்தன. மெல்ல மெல்ல என் அறிவுக் கண்கள் திறந்தன; இருள் மாறி வெளிச்சமும் உண்டாயிற்று. நான் வாழும் நாடு தமிழ் நாடென்று உணர்ந்தேன். இது இளங்கோவடிகளும், கம்பனும் பிறந்த நாடு; ஷேக்ஸ்பியரும், மில்டனும் பிறந்த நாடன்று என்று அறிந்தேன். சுற்றிலும் பார்த்தேன். வறண்ட முட்செடிகள் என்று நான் கருதியிருந்த செடிகளில் மலர்ந்த பூக்கள் நிறைந்திருந்தன. எங்கு நறுமணம் வீசியது. இதுவே, தமிழின் மறுமலர்ச்சி, எங்கும் கமழும் தமிழ் மணம் என்று உணர்ந்தேன்."

இந்த உணர்ச்சி திரு சண்முகனாருக்கு ஏற்படக் காரணமாக இருந்தது ஒரு சிறு நிகழ்ச்சிதான். அவர் ஒரு சிற்றூரிலே பிரசங்கம் செய்யச் சென்றார். அங்குத் தமிழில் பேச நேர்ந்தது. அப்பொழுது அவருக்குப் பேச்சு ஒழுங்காக வரவில்லை. பேரறிஞராய் உலக நாடுகள் எங்கும் பலப்பல மாநாடுகளில் எல்லாம் ஆங்கிலச் சொற்பொழிவுகள் புரிந்து நாவன்மையால் பெரும் புகழ் பெற்றவர்தாம் அவர். ஆனால், அவரால் தமிழ் நாட்டின் சிற்றூர் ஒன்றில் தமிழரிடையே தாய்மொழியில் நேர்மையாகப் பேச முடியவில்லை. அவர் பெரிதும் வெட்கம் அடைந்தார். வீட்டுக்கு வந்து சிந்தித்தார்.

வீட்டிலும் தாம் ஓர் அந்நியர் போல் வாழ்வதாக உணர்ந்தார். தமது படிப்பு முறையிலும் நடை முறையிலும் ஏதோ ஓர் குறை இருப்பதாக எண்ணினர். உற்ருர் உறவினரிடமும் நாட்டு மக்களிடமும் நம்மை இணைத்து ஒன்றுபடுத்தும் சக்தி நம் தாய் மொழிக்கே உண்டு என உணர்ந்தார். ஆனல், தமிழ் நாட்டிலே நிலைமை எப்படி இருந்தது? தமிழின் நிலைமையை எண்ணி அவர் மனம் புழுங்கினர்.

"வயிற்றுப் பிழைப்புக்கு, அதாவது உத்தியோகம் பார்க்க வேண்டுமானல், ஆங்கிலம் படிக்க வேண்டும். கலியாணம்முதலியவை செய்வதானல் சம்ஸ்கிருதத்தில் செய்ய வேண்டும். தேசாபிமானி என்று பெயரெடுக்க வேண்டுமானல் ஹிந்தி படிக்க வேண்டும். சங்கீதம் பாடத் தெலுங்கு படிக்க வேண்டும். சாதாரணமாகப் பேசும்போது, மணிப்பிரவாளமாகப் பேச வேண்டும். இப்படியிருந்தால் தமிழுக்கு நாம் கொடுத்திருக்கும் இடம்தான என்ன?" என்று திரு ஆர். கே. எஸ்., சிந்தித்தார்.

உடனே, பழந்தமிழ் நூல்களைப் படிக்க வேண்டும் என்ற ஆசை அவருக்கு ஏற்பட்டது. தமிழ் இலக்கியங் களையும் சமய நூல்களையும் அவர் கற்கத் தொடங்கினர். நன்ருகப் புரிந்து கொள்வதற்காகப் பண்டிதர் உதவியையும் அவர் பெற்ருர். இப்படித் தேவாரம், திருவாசகம், திருக்குறள், சிலப்பதிகாரம், கம்ப ராமாயணம், சங்க நூல்கள் முதலியவைகளை ஆராய்ந்து ரசித்துச் சுவைத்து அவற்றின் உயர்வை அவர் உணர்ந்தார். பலருக்கும் எடுதது்ச் சொல்லி மகிழ்ந்தார்.

பெரிய விஷயங்களை எளிய நடையில் தெளிவுற எழுதும் பயிற்சியும் அவர் அடைந்தார். 'உள்ளத்தில் ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாம்' என்பது பொய்யாகுமா? அறிவொளி நிரம்பிய திரு ஆர். கே. எஸ்., தாம் பெற்ற தமிழ் இன்பத்தை எல்லோருக்கும் அளிக்க வேண்டும் என்ற ஆர்வத்தால் நல்ல முயற்சிகள் செய்து வெற்றி கண்டார்.

பழந் தமிழ் நூல்களைப் படிக்க ஆரம்பித்தபோது, திரு சண்முகனாருக்கு மனச் சோர்வு உண்டாயிற்று. காரணம் என்ன? "பொருள் சரியாய் விளங்கவில்லை. பாட்டைச் சரளமாய்ப் படிக்கவும் முடியவில்லை. பதங்களின் சந்தியைப் பிரித்துப் படிக்கப் போதுமான இலக்கண அறிவு எனக்கில்லை. நூலைவிட உரை கடினமாய்த் தோன்றியது" என்று அவர் 'சிலப்பதிகார முகவுரை'யில் குறிப்பிட்டிருக்கிறார்.

வித்துவான் ஒருவரின் உதவியால், பாடம் கற்றுக் கொள்ளவும் அவருக்குச் 'சிலப்பதிகாரம்' சுலபமாய்த் தோன்றியது.

"பாட்டைப் பதம் பிரித்துப் படிக்கும்போதே பொருள் ஏறக்குறைய விளங்கிவிட்டது......நூலைப் படிக்கப் படிக்க என் உள்ளத்தில் மகிழ்ச்சியும் துக்கமும் கலந்து எழுந்தன. உலகில் பல மொழிகளில தோன்றிய சிறந்த பெருங் காப்பியங்களில் 'சிலப்பதி காரம்' ஒன்றல்லவா என்று அறிந்து மகிழ்ந்தேன். நம் தமிழ் முன்னோர் நமக்குத் தந்த இப் பெருஞ் செல்வத்தை இத்தனை காலம் அறியாமலும் அனுபவிக்

காமலும் இருந்துவிட்டோமே என்று துக்கப் பட்டேன்" என்று அவர் குறித்திருக்கிருர்.

இன்னும் பலரும் இப்படித்தானே பொருள் விளங்காமல் கஷ்டப்படுவார்கள் என்ற துக்கமும் அவர் உள்ளத்தில் எழுந்தது. ஆகவே, 'சிலப்பதிகாரம்' புகார்க் காண்டத்தைச் சந்தி பிரித்து எழுதி, எளிய உரையும் சேர்த்து, திரு ஆர். கே. எஸ்., அழகிய புத்தகமாகப் பதிப்பித்தார்.

பழந் தமிழ் நூல்களைப் பதிப்பிக்கும்போது. படிக்கிறவருக்கு எளிதில் புரியும் விதத்தில் சந்தி பிரித்து எழுதுவதே நல்லது என்று அவர் தமிழறிஞ ரிடம் சந்தர்ப்பம் நேரும்போதெல்லாம் சொல்லி வந்தார்.

'பத்துப் பாட்டு' எனும் தமிழ் இலக்கியத்தில் 'குறிஞ்சிப் பாட்டு'ம் ஒன்று. இந்நூலைச் செய்யுளின் பொருள் கெடாது, இனிய உரைநடையில் அவர் எழுதி வெளியிட்டார்.

சண்முகனருக்குத் 'திருக்குறள்' மீது நல்ல மதிப்பு இருந்தது. யாவர்க்கும் பயன்படக்கூடிய 'வாழ்க்கைத் துணை நூல்' அது என்பது அவரது நம்பிக்கை.

"எல்லாச் சமயத்தாரும், எல்லா நாட்டினரும் ஒப்புக்கொள்ளக்கூடிய வாழ்க்கை நூல் ஏதாவது உண்டா? உண்டு. அப்படிப்பட்ட நூலை உலகிற்கு அளித்தது தமிழ். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்

தமிழ் நாட்டில் பிறந்த திருவள்ளுவர் இந்தக் குன்றுச் சிறப்பை அடைந்தவர். அவர் தந்த 'திருக்குறள்' தலைசிறந்த வாழ்க்கைத் துணை நூல். மனித வாழ்க்கையில எக்காலத்திலும், எந்நாட்டிலும் மாருத அடிப்படையான உண்மைகளைத்தான் திருவள்ளுவர் குறளில் கையாண்டிருக்கிருர். குறளில் காணும் வாழ்க்கை விதிகள் மக்களில் ஒருசிலர் மட்டும் கையாள வேண்டியவை யல்ல. உலக மக்கள் எல்லோரும் கையாள வேண்டியவை; கையாளக் கூடியவை......வாழ்க்கையில என்றும் அழியாமல் நிலைபெற்ற உண்மைகள் நிறைந்த நூல் திருக்குறள். மக்களில் பெரும்பான்மையோர் கடைப்பிடிக்க வேண்டிய இல்லற வாழ்க்கையின் பெருமையை வலியுறுத்தும் நூல்களுள், திருக்குறளை விடச் சிறந்த நூல் எந்த மொழியிலும் இல்லை என்று துணிவுடன் சொல்லலாம்...உலக நாகரிகம் எவ்வளவு மாறுதல் அடைந்தபோதிலும், திருக்குறள் எல்லாக் காலத்திற்கும் பொருத்தமான வாழ்க்கைத் துணை நூல் என்பது நன்ருய் விளங்கும்.''

திரு சண்முகனுரின் இக் கருத்துரையி லிருந்து அவர் திருக்குறளை எவ்வளவு தூரம் போற்றினுர் என்பது புலனுகிறது அல்லவா? இத்தகைய உயரிய நூலை எல்லோரும் கற்றுப் புரிந்து பின்பற்றுவதற்கு உரிய வகையில் எளிய உரை ஒன்றை எழுதி வெளியிட வேண்டும் என்று அவர் விரும்பினுர்.

கம்ப ராமாயணத்தில் பல பதிப்புக்கள் உள்ளன. எவ்வளவோ பாட பேதங்களும், இடைச் செருகல்

களும் காணக்கிடக்கின்றன. இவற்றை எல்லாம் ஆராய்ந்து, திருந்திய பதிப்பு ஒன்று அச்சிட வேண்டும் என்ற ஆர்வமும் அவருக்கு இருந்தது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக வந்தவுடன் திரு ஆர். கே. எஸ்., 'பன்னிரு திருமுறை'களையும், 'கம்ப ராமாயண'த்தையும் நன்கு ஆராய்ந்து பதிப்பித்து வெளியிடுவதற்கு வேண்டிய திட்டங்கள் வகுத்தார்.

'தமிழ் வளர்ச்சிக் கழகம்' எனும் ஸ்தாபனத்தைத் தொடங்குவதற்கு முக்கிய காரணமாக இருந்தவருள் திரு ஆர். கே. எஸ்.ஸும் ஒருவராவர். 'தமிழ்க் களஞ்சியம்' பதிப்பிக்கும் பெரும் பணியை இக் கழகம் ஏற்றுக்கொண்டபோது சண்முகனார் இந்திய சர்க்காரின் நிதி மந்திரியாக இருந்தார். இம் முயற்சிக்கு நிதி உதவி புரிவதற்கு மத்திய சர்க்காரை இசையும்படி அவர் செய்தார். கழகத்திற்கு மூன்று லட்ச ரூபாய் அளிக்கச் சர்க்கார் முன் வந்ததற்குத் திரு ஆர். கே. எஸ்.ஸின் முயற்சியே முக்கிய காரணமாகும்.

மதுரை மாநகரில் நடைபெற்ற தமிழ் வளர்ச்சிக் கழக முதல் திருவிழாவிற்குத் திரு ஆர். கே. எஸ்., தலைமை வகித்தார். திருவாரூரில் நிகழ்ந்த தமிழ்த் திருவிழாவின் பொருளாதாரப் பிரிவிற்கும் அவர் தலைமை தாங்கினார். 1950-ஆம் வருடம் கோவையில் நடைபெற்ற தமிழ் விழாவின் வெற்றிக்கும் சிறப்புக்கும் திரு சண்முகனாரின் ஆர்வமும் தூண்டுதலுமே பொறுப்பாகும். பிறகும் கழகத்தின வளர்ச்சியில் கருத்துக் கொண்டு அவ்வப்போது ஆலோசனைகள் கூறிவந்தார்.

ஆயினும், 'தமிழ் வளர்ச்சிக் கழகம்' போன்ற ஒரு ஸ்தாபனத்தை அமைத்துத் தமிழ் நாட்டில் தமிழைப் பரப்புவதும் வளர்ப்பதுமே பெருமைப்படுவதற்குரிய காரியங்கள் என அவர் எண்ணவில்லை. மற்றைய மாகாணங்களிலும், வேறு நாடுகளிலும் தமிழின் உயர்வை எடுத்துச் சொல்வதற்காக இப்படி ஒரு கழகம் தோன்றிப் பாடுபட்டால், பெருமை கொள்ளலாம் என்பது அவரது கருத்து. இந்த எண்ணம் 'தமிழக மகாநா'ட்டில் அவர் நிகழ்த்திய தலைமையுரையில் நன்கு ஒலித்தது. அது பின்வருமாறு:

"தமிழ் மொழிப் பற்றுடையவர் தமிழர். உலக சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தோமாயின், தாய் மொழியைப் பாராட்டிப் போற்றி வந்ததில தமிழர் முன்னணியில் இருந்து வந்திருப்பது புலனாகும். நாட்டிற்கு மொழியின் பெயரில் தமிழகம் எனப் பெயரிட்டனர். இத்தனை பெருமை தமிழரைத்தான் சாரும். மொழியின் பெயரை நாட்டிற்கு வைத்த வேறு நாடு எது?

அம் மொழியைப் பல காரணங்களால் நாம் மறந்துவிட்டோம். தேசீய உணர்ச்சி வந்தது ஆங்கில மொழியினால் என்ற நிலை ஏற்பட்டது. வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் தாய் மொழிக்கு இடமில்லை என்றால் சுதந்தரத்தால் பயனில்லை. தமிழ் நாட்டில் தமிழ் வளர்ச்சிக் கழக மென ஒன்றிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. பம்பாய், கல்கத்தா போன்ற வெளி இடங்களில் இது இருந்தால் அதற்குப் பொருளுண்டு.

இந்நிலை ஏற்படக் காரணமென்ன? தாய் மொழியை மறந்து, அம் மொழியில் எண்ணவும் சக்தி யற்றுப் போயிருப்பதே; இந்நிலை மாற வேண்டும்.

தமிழை—தாய் மொழியை—ஒவ்வொருவரும் உணர்ச்சியோடு வளர்க்க வேண்டும். வாழ்க்கையில் ஒவ்வொரு துறையிலும் அதை உபயோகிக்கவேண்டும். அரசாங்கம் தமிழில் நடக்க வேண்டும். சட்டசபையில் நாம் தமிழில்தான் பேசவேண்டும். பொருளாதாரத்தைத் தமிழில் ஆராய வேண்டும். விஞ்ஞானத்தைத் தமிழில் கற்கவேண்டும்.''

திரு சண்முகனாரின் இவ்வுரையால் அவரது தமிழ்ப் பற்று நன்கு புலனாகிற தல்லவா?

தமிழுக்கு இவ்வகைகளில் ஆக்கம் தேடிய திரு ஆர். கே. எஸ்., மற்றுமொரு பெரும் பணியும் புரிந்தார். அதுதான் தமிழிசை வளர்ச்சிக்கு அவர் செய்த மாபெரும் சேவையாகும்.

தமிழ் நாட்டில் பேச்சிலும் எழுத்திலும் தமிழ் சீர்குன்றிச் சிதைவுற்றிருந்தது போலவே, இசையிலும் ஒடுக்கப்பட்டுக் கிடந்தது. சங்கீதத்திற்கு ஏற்றது தெலுங்குதான் என்ற எண்ணத்தை ஒரு சாரார் வளர்த்தனர். பாடியவர் எல்லோரும் தெலுங்கிலேயே பாடினர். பொருள் விளங்காமலே அவர்கள் பாடிய பாடல்களை எல்லாம், பொருள் புரியாமலே பெரிய மனிதர் சுவைத்து மகிழ்ந்தனர். சுவைப்பதுபோல் வேஷம் போடுவதுதான் கௌரவம் என்று மற்றவர்

எண்ணினர். இந்தப் போலி மனப் பண்பு 'தமிழில் இசைப் பாடல்களே கிடையா; சங்கீதமும் தமிழும் ஒத்து வரா' என்று சிலர் கூச்சலிடக்கூடிய அளவுக்கு விஞ்சிவிட்டது.

தமிழ் நாட்டில் உண்மையான பெரிய மனிதர் ஒருவர் தமிழ் இசையை மீண்டும் பரப்பத் திருவுளம் கொண்டார். தமக்குப் புரியாததைப் புரியவில்லை என்று துணிந்து சொல்ல முன் வந்தார். அவர்தாம் செட்டிநாட்டு ஸ்ரீ 'ராஜா. சர்' மு. அ. அண்ணாமலைச் செட்டியார்.

"தமிழ் நாட்டில் தமிழர் கேட்டு இன்புறுவதற்குத் தமிழிசைப் பாடல்கள் அல்லவா பாடப்பெற வேண்டும்? பொருள் தெரியாத வேற்று மொழிப் பாடல்களால், தமிழர் பொருள் அறிந்து இசையின்பத்தை நுகர இயலவில்லையே! தமிழகத்தில் தனியாட்சி புரிந்த தமிழிசைக்கு உரிய இடத்தைப் பிற மொழிப் பாடல் கவர்ந்துகொண்டதே!" என்று அவர் ஏங்கினார்.

தனி ஒருவர் செய்தற்கரிய செயல் என்று பலரும் பாராட்டும் முறையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்துத் தமிழுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த பெருந்தகை அன்றோ செட்டி நாட்டரசர்? "தமிழ் நாட்டில் நடக்கும் இசை அரங்குகளில் பெரும் பகுதி தமிழ்ப் பாடல்களே முழங்க வேண்டும். தமிழிசையை உயர்நிலையில் வைத்தல் வேண்டும்" என்று 'ராஜா. சர்' எண்ணினார். அதற்

குரிய முயற்சிகளைத் தொடர்ந்து செய்து இடையருது பேரூக்கத்துடன் உழைத்த அறிஞர் ஆர்.கே.எஸ்.ஸைத் துணையாகக் கொண்டார். இருவரும பெரியதொரு தொண்டில் ஈடுபடத் தொடங்கினர்.

1943-ஆம் ஆண்டில் இவர்கள் சென்னையில் 'தமிழ் இசைச் சங்க'த்தை நிறுவினுர்கள். முதலில் தாங்களே பெரும் பொருள் வழங்கிப் பிறகு தக்க பெருமக்களை அணுகிப் பொருள் சேர்த்தனர். பல நகரங்களில் தமிழ் இசை பற்றிச் சொற்பொழிவாற்றினர். நாட்டின் பல இடங்களிலும் தமிழர் நடத்திய தமிழ் இசை மாநாடுகளைத் திறந்து வைத்தும், அவற்றிற்குத் தலைமை தாங்கியும், தமிழ் இசைக் கல்லூரிகளுக்கு உதவி புரிந்தும், இடைவிடாது இவ்விருவரும் பணிகள் பல புரிந்தனர்.

தமிழில் இசை யமைப்புக்கு ஏற்ற பாடல்கள் இல்லை என்று சொன்னவர்க்கு அறிவு புகட்டும் முறையிலே, பழையனவும புதியனவுமாகிய தமிழிசைப் பாடல்கள் அடங்கிய இருபத்தொரு நூல்களை அண்ணுமலைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுப் பேருதவி புரிந்தது.

தமிழ் இசைச் சங்கத்தின் சார்பில் சென்னையில் 1943-ஆம் ஆண்டு டிசம்பரில் தமிழ் இசை மாநாடு கூடியது. 'ராஜா, சர்' அண்ணுமலைச் செட்டியார் இம் மாநாட்டைத் திறந்து வைத்தார். "தமிழ் மக்களுக்குத் தமிழ் இசைதான் வேண்டும்" என்று அவர் வலியுறுத்திப் பேசினுர்.

அம் மாநாட்டின் மூதற் சொற்பொழிவை நிகழ்த்திய திரு ஆர். கே. எஸ்., "தமிழில் என்ன இசை இருக்கிறதோ அந்த இசை எனக்குப் போதும். என்னுடைய தமிழில் ஒரு பாட்டைக் கேட்கும் பொழுது என்ன ஆத்ம திருப்தி உண்டாகிறதோ அந்தத் திருப்தி எனக்கு வேறு எந்த மொழியில் பாட்டுக் கேட்டாலும் உண்டாகாது. ஆதலால், தமிழனுகப் பிறந்த எனக்குத் தமிழிசைதான் வேண்டியிருக்கிறது" என்று அழகாகவும் ஆணித்தரமாகவும் குறிப்பிட்டார்.

இஃதன்றே உண்மைத் தமிழ் உள்ளம்! உண்மைத் தமிழன் ஒவ்வொருவனுடைய உள்ளத்திலும் பொங்கி எழும் உணர்ச்சி மொழி அல்லவா அவர் அன்று கூறிய கூற்று!

இசையைப் பற்றி திரு ஆர். கே. எஸ்., கூறியுள்ள கருத்தும் போற்றத் தகுந்ததுதான் :

"உள்ள நெகிழ்ச்சியையும் பக்தி உணர்ச்சியையும் எடுத்துக்காட்டவே உலகத்திலே இசை பிறந்தது. சிறப்பாகத் தேவாரப் பண், பக்தி உணர்ச்சி ததும்பும் அரிய களஞ்சியம். எனவே, அதைப் பாடுபவரும், கேட்பவருமே அதே உணர்ச்சியில் மூழக வேண்டுவது அவசியம். அப்படி உணர்ச்சி வயப்பட வேண்டும் என்ருல் பண்களை மட்டும் ஆராய்ந்தால் போதாது. பாடல்களிற் பொதிந்து கிடக்கும் அரிய கருத்துக்களையும் உணர வேண்டும். பொருள் தெரியாமல இசை பாடுவதில் பயனே இல்லை; இசைவாணர் பொருளை

உணர்ந்து அனுபவித்துப் பாடினால்தான் கேட்பவரும் உணர்ச்சி வயப்பட்டு இசையைப் பூரணமாக அனுபவிக்க முடியும்.''

இதை யாரே மறுக்க முடியும்?

ஆற்றலும், தமிழ்ப் பற்றும், ரசிக உள்ளமும், உழைக்கும் பண்பும், ஊக்கமும், பொருட் சுவையும் பெற்ற மாபெரும் தலைவர் இருவர் ஒன்றுபட்டுப் பணி புரியத் தொடங்கியதால் தமிழ் இசை இயக்கம் குறுகிய காலத்தில் மிகச் சிறந்த வெற்றியைக் கண்டது. இசை அரங்குகளில் எல்லாம் தமிழ் முழங்கும் நல்ல காலமும் வந்தது. பொதுமக்களும் இசை யினபத்தை அனுபவித்து மகிழ்வதும் சாத்தியமாயிற்று.

திரு சண்முகனாரின் தமிழ்ப் பற்றும், தமிழ் நாட்டின் பண்டைப் பெருமையில் அவர் கொண்டிருந்த மதிப்பும் வேறு பல வழிகளாலும் புலனாயின.

தமிழ் இலக்கியச் செல்வமான 'சிலப்பதிகார'த்தை வியந்து போற்றத் தொடங்கிய திரு ஆர். கே. எஸ்., முற்காலத்தில் சிறப்புடன் திகழ்ந்த காவிரிப்பூம் பட்டினத்தில் சிலப்பதிகார மகாநாடு ஒன்றை நடத்துவதில் ஆர்வம் காட்டினார். அவர் ஆதரவில் சிலம்பின் கதையும் இலக்கியச் சிறப்பும் பூம்புகார் நகரில் மீண்டும் முழங்கின.

புராதன நகராகிய காவிரிப்பூம்பட்டினம் தன் சிறப்புக்களைக் கடலுக்குப் பலியிட்டுவிட்டது என்பது யாவரும் அறிந்த உண்மையே. சரித்திரச் சான்றுகளைக்

கடலினுள் கண்டுபிடிக்க, தகுந்த முறையில் ஆராய்ச்சி நடத்த வேண்டும் என்பதும் திரு சண்முகனாரின் ஆசை. அவர் பெருமுயற்சி செய்தும், இந்திய சர்க்காரின் ஆதரவு கிடைக்கவில்லை.

அதே போல, வஞ்சி நகரையும் தோண்டிப் புதை பொருள் ஆராய்ச்சியாளர் உண்மையைக் கண்டு பிடிக்க வேண்டும என்ற எண்ணமும் அவருக்கு இருந்தது. அவர் கொச்சியில் திவானாக இருந்த காலத்திலேயே இதில் அதிக ஆர்வம் காட்டினார்.

கொச்சி சமஸ்தானத்தில் உள்ள திருவஞ்சிக்குளம் எனும் ஊர் அருகில் இருக்கும் சேரமான் பரம்பு என்ற இடத்தைத் தோண்டி ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. அதனால் பல உண்மைகள் தெரியவந்தன. 'வஞ்சி - கருவூர் விவாதம்' மிகவும் பிரசித்தமானது. சேர நாட்டின் தலைநகராகத் திகழ்ந்த வஞ்சிமாநகர் திருச்சி ஜில்லாவில் உள்ள கரூர் தான் என்றொரு கட்சி உண்டு. "அது முற்றிலும் தவறு. கருவூர் என்றும் வஞ்சிமா நகர் என்றும் பெயர் பெற்றிருந்த வஞ்சி கொச்சியில் உள்ள திருவஞ்சிக்குளம்தான" என்பது மற்றொரு கட்சி. பிந்திய கருத்தே சரியானதாகும என்பது திரு ஆர். கே. எஸ்.ஸின் கருத்தாகும். இதை உறுதியாகத் தீர்த்து வைக்கக் கூடிய ஆதாரங்கள் பூமியினுள் புதையுண்டு கிடக்கலாம் என்றும், ஆதலின் பெரிய அளவில் ஆராய்ச்சி செய்ய வேண்டுவது அவசியம் என்றும் அவர் நினைத்தார். இந்த எண்ணம் செயலுறு வதற்குரிய சந்தர்ப்பம் கிட்டவில்லை என்பது வருந்தத் தக்கதே.

இது சம்பந்தமான மற்ளுெரு நிகழ்ச்சியும் குறிப்பிடத்தக்கதே. 'திருவஞ்சிக்குளம்' என்பதைத் 'திருவஞ்சைக்களம்' என்றும் கூறுவர். அங்குச் சைவ உலகிற்கு முக்கியமான சிறந்ததொரு பெருந் திருநாள் நடைபெறுவது வழக்கம். சுந்தரமூர்த்திகள்—சேரமான் பெருமாள் நாயஞர் திருநாளாகிய ஆடிச்சுவாதி நாளில் வழிபடும் விழா அது. அந் நாயன்மார் இருவரும் யானை மேலும் குதிரை மேலுமாகத் திருக்கயிலை சேர்ந்த திருநாள் அது.

முன்பு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்த இவ் விழாவின் வரலாற்றையும் சிறப்பினையும் மலைநாட்டினர் மறந்துவிட்டனர். மொழி வேறுபாடு, கோயில் நுழைவு முதலிய சிரமங்களால் தமிழ் நாட்டாரும் அங்கே போய் இவ் விழாவைக் கொண்டாடுவதை நிறுத்தி விட்டனர். திரு ஆர். கே. எஸ., கொச்சியில் திவான் பொறுப்பு ஏற்றுக் கொள்வதற்கு முந்திய வருடத்தில், தமிழ் நாட்டைச் சேர்ந்த சிவநேசச் செல்வர் சிலர் திருவஞ்சைக்களம் சேர்ந்து மிக்க முயற்சியும் சிரமமும் கொண்டு முதல் முறையாக அவ் விழாவைக் கொண்டாடினர். ஆனல், அதைத் தொடர்ந்து அடுத்த ஆண்டு விழா நடத்த இயலாதபடி சமஸ்தான அரசாங்க அதிகாரிகளால் பெருந் தடைகள் ஏற்பட்டன.

அப்போதுதான் திரு ஆர். கே. எஸ்., பதவி ஏற்றிருந்தார். சைவ அன்பர் பலர் அவரிடம் முறையிட்டனர். சண்முகனர் அவர்களுக்கு ஏற்பட்ட தடைகளை நீக்கினர். அதனுடன், கோயில் சார்பிலேயே ஆண்டு

தோறும் அத் திருநாளின் வழிபாடும் நடைபெறத் திட்டம் வகுத்துப் பதிவு செய்து ஆணையிட்டார். அன்று முதல் இன்று வரை, அக் கோயிலில் அவ் வழிபாடு சிறப்பாக நிகழ்ந்து வருகின்றது. தமிழ் அன்பரும் ஆண்டுதோறும் திரளாகச் சென்று விழாவில் கலந்து கொள்வதற்கு எளிதாயிற்று.

## 8. கல்விக்குச் செய்த தொண்டு

தமிழ் மொழி வளர்ச்சியில் நாட்டம் கொண்டு, செட்டிநாட்டு அரசர் சர் அண்ணாமலைச் செட்டியார் 'அண்ணாமலைச் சர்வகலாசாலை'யை நிறுவினார். 'ராஜா, சர்' அவர்களிடம் பெருமதிப்புக் கொண்டிருந்த திரு ஆர். கே. எஸ்., அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சியில் ஆர்வம் காட்டி வந்ததில் வியப்பு எதுவுமில்லை.

"தமிழ்ப் பெரியார் ஒருவருடைய பெருங் கொடையால் தமிழ் நாட்டில் நிறுவப்பட்ட இப் பல்கலைக் கழகம் தமிழ்ப் பண்பாட்டின் நிலைக்களம் என எதிர்பார்ப்பது மிகையாகுமா?" என்று அவர் கேட்டார். "ஒரு பல்கலைக் கழகத்தைத் தனிப்பட்ட ஒருவர் நிறுவுதல் என்பது நாள்தோறும் காணும் காட்சியன்று. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை நிறுவிய இந் நலலறத்தின் பொருட்டுத் தென்னிந்தியராகிய நாம் அனைவரும் 'ராஜா, சர்' அண்ணாமலைச் செட்டியார் அவர்களுக்குப் பெரிதும் கடமைப் பட்டுள்ளோம். ஈட்டிய பெருஞ் செல்வத்தைப் பொது

மக்களின் நன்மைக்காகச் செலவிடுவதைக் காணும் பொழுது செல்வர் பொருளீட்டுதல் தகும் என்றே தோன்றுகிறது. இந்தக் கலைக் கோயிலைக் கண்ட இப் பெரியாரின் நினைவை நாம் மாத்திரம் அன்று, நமக்குப் பின் வரும் பல தலைமுறை மக்களும் கொண்டாடுவர் என்பது உறுதி'' என்றும், "செட்டிநாட்டரசர் தமிழ் நாட்டிற்குச் செய்த தொண்டைத் தமிழ் மக்கள் எந்நாளும் மறவார். தமிழ்க் கலைகளைப் போற்றி வளர்த்த வள்ளல்களுக் கிடையே அவர் முதன்மை யிடத்தைப் பெற்றுவிட்டார்'' என்றும் அவர் குறிப்பிட்டிருககிறுர்.

தமக்குச் சமயம் வாய்க்கும் காலத்தில், இப் பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்தில் நேரடியான பொறுப்பை ஏற்றுக்கொள்வதாகத் திரு ஆர். கே. எஸ்., செட்டிநாட்டு அரசரிடம் முன்பே வாக்களித் திருந்தார். அது நிறைவேறுவதற்குரிய வாய்ப்பு 1951 நவம்பரில் கிட்டியது. அவர் அச் சர்வகலாசாலையின் துணைவேந்தர் ஆனுர்.

திரு ஆர். கே. எஸ்., தமது வாழ்நாள் முழுவதுமே கல்வி அறிவை வளர்ப்பதில் கண்ணும் கருத்து மாக இருந்தார். அவரது கல்வி ஞானத்தையும் நாட்டிற்குச் செய்த சேவையையும் பாராட்டும் முறையில், அண்ணுமலைப் பல்கலைக் கழகம் 1948-ஆம் ஆண்டில் திரு சண்முகம் செட்டியாருக்கு 'டாக்டர்' எனும் கௌரவப் பட்டத்தை அளித்தது. 1940-இல் சென்னைச் சர்வகலாசாலையும், 1943-இல் அண்ணுமலைச்

சர்வகலாசாலையும் மாணவருக்குப் பட்டமளிக்கும் விழாவின்போது பிரசங்கம் செய்யும் சிறப்பை அவருக்கு ஏற்படுத்திக் கொடுத்தன.

ரைட் ஆனரபிள் வி. எஸ். ஸ்ரீநிவாச சாஸ்திரி ஞாபகார்த்தப் பிரசங்கத் திட்டத்தினபடி சொற் பொழிவு ஆற்றும் வாய்ப்பைச் சென்னைச் சர்வகலாசாலை 1945-ஆம் ஆண்டில் திரு சண்முகனாருக்கு அளித்தது. இதனால் திரு ஆர். கே. எஸ்.ஸின் அறிவும், நாட்டு நடவடிக்கைகள் பற்றி எல்லாம் அவர் பெற்றிருந்த ஆராய்ச்சி அனுபவங்களும் எண்ணிலா மாணவருக்குப் பயன்படுவது எளிதாயிற்று.

தமிழ் மறுமலர்ச்சி, தமிழ் மொழி, தமிழ்க் கலை— இசை வளர்ச்சிகள் முதலியவற்றில் ஆர்வம் காட்டி, அரிய பல தொண்டுகள் புரிந்த திரு ஆர். கே. எஸ்., தமிழ்க் கலைக்கூடமான அண்ணாமலைச் சர்வகலாசாலை யின் துணைவேந்தரானது மிகவும் பொருத்தமானதே ஆகும்.

திறமையும் தகுதியும் ஆர்வமும் நிறைந்த அரசியல் நிபுணர், அறிஞர், நிர்வாகிகளைத் தேர்ந்து துணை வேந்தராக நியமிப்பதில் 'ராஜா, சர்' அண்ணாமலைச் செட்டியார் புகழ் பெற்றிருந்தார். அவர் காலமான பின்னர், தந்தையின் வழிகளைப் பின்பற்றி அரிய பெரிய தொண்டுகள் ஆற்றிவரும் 'ராஜா, சர்' முத்தையாச் செட்டியார் அவர்களும் பல்கலைக் கழகத் தின் நலன்களில் மிகக ஆர்வம் காட்டி வருகின்றார். அதன் சிறப்பையும் சேவையையும் நினைவில் நிறுத்தி,

அதன் மாண்புகள் மேலும் ஓங்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு அவர் முயன்று திரு ஆர். கே. எஸ்.ஸைத் துணைவேந்தர் ஆக வேண்டினார்.

திரு சண்முகனார் பொறுப்பு ஏற்றுக்கொண்டவுடனேயே பல நன்மைகளைச் செய்தார். கல்வி புகட்டும் ஆசிரியர் மகிழ்ச்சியோடு வாழ முடிந்தால்தான் அவர்களது சேவையும் நன்றாக அமையும் என்ற எண்ணம் அவருக்கு உண்டு; ஆகவே, ஆசிரியர் வாழ்க்கைத் தரத்தின் உயர்வுக்கான நல்ல ஏற்பாடுகளை அவர் செய்தார்; பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் ஆசிரியர் குழந்தைகள், கல்லூரிக்குச் சம்பளம் செலுத்த வேண்டுவதில்லை என்று திட்டமிட்டார்; பின்னர், பல்கலைக் கழகத்தில் அலுவல் புரியும் அனைவரது குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி கிடைக்குமாறு ஏற்பாடு செய்து முடித்தார்.

தமிழ் இலக்கியங்களைநன்கு ஆராய்ந்து பதிப்பிக்கக் கூடிய ஆராய்ச்சிப் பிரிவைத் தனியாக அமைத்த பெருமையும் திரு சண்முகனாரையே சாரும்.

இந்தியாவில் உள்ள வேறு எந்தப் பல்கலைக் கழகமும் செய்யத் துணியாத ஒரு திட்டத்தைத் திரு ஆர். கே. எஸ்., அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடைமுறைக்குக் கொண்டு வந்தார்.

இந்தியா விவசாய நாடு; எனினும், ஆங்கிலேயர் ஆட்சியில் நிறுவப்பட்ட பல்கலைக் கழகம் எதுவும் நாட்டின் முக்கிய பிரச்னையைப் பற்றியோ, மக்களின்

நலன்களைப் பற்றியோ அக்கறை காட்டியதில்லை. விவசாய விஷயமாகக் கவனம் செலுத்தப்பட்ட ஒருசில பல்கலைக் கழகங்களிலும், அது பொதுப் பாடமாக இருந்ததில்லை. ஆசிரியரின் ஆராய்ச்சிக்குப் பயன் படும் சிறப்புப் பாடமாகவே இருந்தது.

அமெரிக்காவில் நிலைமை இவ்விதம் இல்லை. அங்குப் பல்கலைக் கழகங்கள் விவசாய அபிவிருத்தியில் அதிகக் கவனம் செலுத்துகின்றன. சர்க்காரும் அவ் விதம் செய்யும்படி தூண்டிப் போதிய ஆதரவு காட்டி வருகின்றனர். இதனால், நன்கு பயிற்சி பெறும் விவசாயி களும், ஆராய்ச்சியாளரும், அபிவிருத்தியாளரும் தோன்றி நாட்டின் விவசாய முன்னேற்றத்திற்குச் சிறந்த தொண்டு புரிவது அங்கு எளிதாக இருக்கிறது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவிய செட்டி நாட்டு அரசர் நம் நாட்டிலும் அத்தகைய திட்டத்தைச் செயலிற் கொணர எண்ணினார். பல்கலைக்கழக அமைப்பு விதிகளில் அதற்கான சட்ட ஏற்பாடுகளையும் பொறித்து வைத்தார். ஆயினும், இந்தியா சுதந்தரம் பெற்ற பிறகே அவரது ஆசை நிறைந்த திட்டம் நடைமுறைக்கு வரலாயிற்று.

மொழி, கலை, விஞ்ஞான சாஸ்திரங்களில் மாணவர் போதிய அறிவு பெறுவதற்குப் பயிற்சி அளிக்கப்படுவது போலவே, விவசாயமும் கற்பிக்கப் படுவதற்கு அப் பல்கலைக் கழகத்தில் அதன் நிர்வாகிகள் வசதிகள் செய்தனர். 'தமிழ் நாட்டின் தானியக் களஞ்சியம்' எனும் புகழ் பெற்ற தஞ்சாவூர்.

ஜில்லாவில், சிதம்பரம் தாலூகாவில், கொள்ளிடக் கரையின் வளமான இடத்தில், கிராமியச் சூழ்நிலையில் அண்ணுமலைப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. அதனுடன் விவசாயத்திற்கு உதவியாக இருநூற றைம்பது ஏக்கர் பூமி அதற்குச் சொந்தமாக உள்ளது. இக் காரணங்களினுல், பரந்த அளவில் விவசாயப் பயிற்சிகள் அளிக்கவும், பரிசோதனைகள் புரியவும் நல்ல வசதிகள் வேறு பல உள்ளன. ஆகவே, 1951-இல் பல் கலைக் கழக நிர்வாகிகள், தீவிர ஆலோசனைகள் நடத்தித் தகுதியானதொரு பாடத் திட்டம் வகுத்து விருப்பப் பாடமாக அதை அமைத்தனர். இதன் மூலம், புத்தகப் படிப்பும் நேரடியான அனுபவப் பயிற்சியும் மாணவர் பெற முடியும்.

1951 நவம்பர் மாதம் திரு ஆர். கே. எஸ்., அப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் ஆனவுடன், விவசாயமும் விஞ்ஞான ரீதியான பாடமாகத் திட்டத் தில் சேர்க்கப்பட்டுள்ளதைப் பாராட்டிப் பேசினுர். அவரது ஆதரவினுலும் ஊக்கத்தாலும் இத் திட்டம் விரைவாக வளர்ச்சியுற்றது. ஆரம்பத்தில் விவசாயம் 'பீ. எஸ்ஸி.' வகுப்பு மாணவருக்கு உரிய பாட மாகப் புகுத்தப்பட்டிருந்தது. பிறகு, 'இண்டர்மீடியட்' வகுப்பு மாணவருக்கும் அது விருப்பப் பாடமாக்கப் பட்டது.

நாட்டின் அபிவிருத்திக்கும், மக்களின் முன்னேற் றத்துக்கும் பயன்படாத பாடத் திட்டங்கள், எவ்வளவு உயர்ந்தனவாக இருந்தாலும், பயனற்றவை என்பது

திரு ஆர். கே. எஸ்.ஸின் எண்ணம். பல்கலைக் கழகத்தினரின் ஆராய்ச்சியும் அறிவாற்றலும் எளிய விவசாயிகளுக்கும் பயன்பட வேண்டும் என்று அவர் விரும்பினார். அதனால், அவர் இந்நாட்டுப் பல்கலைக் கழகச் சரித்திரத்திலேயே முற்றும் புதிதான, தீவிரமானதொரு திட்டம் கண்டார்.

ஆண்டுதோறும் சுமார் நாற்பது குடியானவருக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். ஒவ்வொரு விவசாயிக்கும் நாலு ஏக்கர் நிலம் கொடுக்கப்படும். அந்த விவசாயி ஓர் ஒப்பந்தம் எழுதிக் கொடுக்க வேண்டும். விதைகள், நோயிலிருந்து பாதுகாத்தல், புதிய முறை விதை தெளித்தல், நாற்று நடவு, உரம் போடுவது போன்ற எல்லாவற்றிலும் பல்கலைக் கழகத்தின் விவசாய ஆராய்ச்சிப் பிரிவினர் வகுத்துள்ள முறைகளையே அந்த விவசாயி கையாள வேண்டும். இவற்றுக்கான செலவுகளில் பாதியைப் பல்கலைக் கழகம் ஏற்றுக்கொள்ளும். முடிவில், விளைச்சலில் பாதிப் பங்கை விவசாயி பல்கலைக் கழகத்திற்குக் கொடுத்துவிட வேண்டும்.

பயிற்சி பெறும் விவசாயிகளுக்கு, நாட்டின் விவசாய முன்னேற்றத்திற்காகச் செய்யப்பட்டு வரும் புதிய ஆராய்ச்சிகள், விவசாயத் திட்டங்கள் பற்றிப் போதிக்கப்படும். சர்க்கார் விவசாயப் பண்ணைகளுக்கு அவர்கள் அடிக்கடி அழைத்துச் செல்லப்படுவர். சினிமா, ஒலிபெருக்கி ஆகியவற்றின் துணைகொண்டும் விவசாய முறைகளைப் பயிற்சியாளருக்குக் கற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகளும் செய்யப்படும்.

இத் திட்டத்தின்படி முதல் ஆண்டு நாற்பத்து மூன்று விவசாயிகள் பல்கலைக் கழகத்தில் பயிற்சி பெற்றனர்.

திரு ஆர். கே. எஸ். அவர்களின் முற்போக்கு எண்ணங்களும், செயல் ஆற்றும் துணிவும், நன் முயற்சிகளுக்குக் காட்டும் ஆதரவும் ஊக்கமும் எவ்வளவு சிறந்தவை—நாட்டுக்கும் மக்களுக்கும் எத்தகைய பலன் அளிக்கக் கூடியவை—என்பதற்கு இது நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.

## 9. சில முக்கிய நிகழ்ச்சிகள்

திரு ஆர். கே. எஸ்., அன்பு உள்ளம் பெற்றவர்; நேர்மையும் துணிவும் நிறைந்து விளங்கியவர்; தமக்குச் சரி என்று பட்டதைத் தயங்காது சொல்லும் தன்மை வாய்ந்தவர். இவற்றை நிரூபிக்கும் சில நிகழ்ச்சிகள் அவரது வரலாற்றை அணி செய்கின்றன.

**நட்பு உள்ளம்**

கோவையில் வாலாங்குளம் என்றொரு குளம் உண்டு. அது புகைவண்டிப் பாதைக்கு அருகே வால் போல் நீண்டு வளைந்து கிடக்கிறது. அக் குளம் ஆறு மாத காலம் வறண்டு கிடக்கும். அப்போது அதனை மாணவர் விளையாடும் இடமாகப் பயன்படுத்திக் கொள்வர். திரு ஆர். கே. எஸ்., பள்ளியில் படித்து வந்த காலத்தில், உயர்தரப் பள்ளிகளில் கற்கும் மாணவர்க்குத் தனியாகப் பந்து விளையாடும் இடங்கள்

இல்லை. ஒவ்வொரு பள்ளியும் அக் குளத்தில் ஒரு பகுதியைத் தத்தமக்கு என்று வைத்துக்கொள்வது உண்டு.

விளையாட்டில் சேர மனம் இல்லாத பிள்ளைகள் அக் குளத்தில் புல்தரை மீது அமர்ந்து பேசிப் பொழுது போக்குவது வழக்கம். அங்கே காற்று நன்றாக வீசும். நாள் முழுவதும் படித்துக் களைத்த பிள்ளைகளுக்கு அக் குளம் ஆறுதல் அளித்து வந்தது. 'கோவைக் கடற்கரை' (பீச்) என்று மாணவர் அதைக் குறிப்பிட்டு மகிழ்வர்.

குளத்தின் கரைகளில் அக்காலத்தில் பெரு மரங்கள் பல இருந்தன. நல்ல குளிர்ச்சியான அவற்றின் நிழலிலும் மாணவர் உட்கார்ந்து பேசி மகிழ்வர். இன்று கோவை நகரின் பிரமுகருள் ஒருவராக விளங்கும் ராவ்பகதூர் திரு சி. எம். இராமசந்திரன் செட்டியார் மாணவராக இருந்த காலத்தில் நடை பெற்ற சம்பவம் இது. அவரும் அடிக்கடி மாலை வேளைகளில் வாலாங் குளத் தருகில் உலாவச் செல்வ துண்டு. நண்பர் கிடைத்தால் அங்கே அவர்களுடன் அமர்ந்து பேசி வருவதும் வழக்கம்.

ஒரு நாள் யாரும் துணை கிடையாமையால் இராம சந்திரன் செட்டியார் தன்னந்தனியாகச் சென்றுகொண் டிருந்தார். தெரிந்த நண்பர் கிடைக்கவில்லை. குளிர்ந்த மரம் ஒன்றின் விரிந்த நிழலில் ஒரு சிறு கூட்டம் கூடிப் பேச்சில் மூழ்கியிருந்தது. அவர்கள் வேறு பாடசாலையைச் சேர்ந்தவர் என அறிந்து,

அவர் நேராகச் சென்றுவிட்டார். சிறிது தொலைவு நடந்து பார்த்தும் நண்பர் ஒருவரும் எதிர்ப்படாத தால் திரும்பி வந்தார். அந்தக் கூட்டம் அப்படியே பேச்சில் ஆழ்ந்து இருந்தது.

அவர்களிடையே இருந்த நெட்டை மாணவர் ஒருவர், " இதோ பாருங்கள். இந்தப் பையன் சிறிது நேரத்திற்கு முன் கிழக்கே போனான், என்ன செய்தானோ தெரியவில்லை. அதற்குள் இந்த வழியாகத் திரும்பி வருகிறான் " என்று சொன்னார்.

நடந்து வந்த மாணவர், "நான் சும்மா செல்ல வில்லை. உலாவுவதற்கோ, உட்கார்ந்து பேசுவதற்கோ என் நண்பரை எதிர்பார்த்தேன். ஒருவரும் கிடைக்க வில்லை; அதனால் திரும்பிவிட்டேன் " என்றார்.

" சரி, நாங்கள் நட்பு பெறக்கூடிய மனிதராகத் தோன்றவில்லையோ ?" என்று கேட்டார் முதலிற் பேசியவர்.

" தோன்றுகிறது; ஆனால் அறிமுகம் இல்லை. அறிந்தால் தங்கள் நட்பை மிக்க ஆவலுடன் பெற முயல்வேன் " என்று இராமசந்திரன் செட்டியார் சொன்னார்.

அதற்கு முன் மாணவர் சொன்னார்: " ஆங்கிலேயர் தாம், அறிமுகம் செய்து வைக்க யாராவது இருந்தா லன்றி, ஒருவருக்கொருவர் பேசிப்பழகாமலே இருப்பர். நாம் அப்படி இருக்க வேண்டுவதில்லை அல்லவா ?"

"நீங்கள் சொல்வது சரியே; உங்கள் நட்பைப் பெற முடிந்ததற்காக மகிழ்கிறேன். பள்ளிகள் வேருனாலும் நட்புச் சிறந்ததுதான்" என்று சொல்லி, இராமசந்திரன் செட்டியாரும் அக் கூட்டத்தில் சேர்ந்துகொண்டார்.

இவ்விதம், நல்லவர் எனக் கண்டு அறிந்து தாமாகவே பேச்சுக் கொடுத்து நண்பராக ஆக்கிக் கொண்ட மாணவர் வேறு யாரும் இல்லை; திரு ஆர். கே. எஸ்.தான்.

**நேர்மையும் செயல் திறமும்**

திரு ஆர். கே. சண்முகம் செட்டியார் மாணவராக இருந்தபோதே செயல் திறம் பெற்றுத் திகழ்ந்தார்; நியாயத்திற்காகப் போராடும் நேர்மையாளராக விளங்கினர். இதற்கு இச் சம்பவம் ஓர் எடுத்துக்காட்டாகும்.

அக்காலத்தில் திருப்பூரில் மாவட்ட அரசியல் மாநாடு ஒன்று நடைபெற்றது. அங்கு வந்த பிரதிநிதிகளைக் கவனித்துக்கொள்ளும் சாரணக் குழுவிற்குத் திரு ஆர். கே. எஸ்., தலைமை வகித்தார். கவனிக்கும் பணியில் குறை எதுவும் நிகழவில்லை; ஆனல், அகந்தையுள்ள பிரதிநிதி ஒருவர் வீண் பழியை ஒரு சாரணர் மீது குறையாகக் கூறினர். அவர் வழக்கறிஞராக இருந்தவர். சாரணர் மீது பொய்யாகப் பழி கூறியதைக் கேட்டு, சாரணத் தலைவரான திரு சண்முகனர் உடனே இளைஞர் எல்லோரையும் அழைத்துக்கொண்டு

வெளியேறிவிட்டார். விவரம் அறிந்த மாநாட்டுத் தலைவர் தீர விசாரித்து, வீண் குற்றம் சுமத்திய பிரதிநிதியை அழைத்துச் சாரணப் படையிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும்படிச் செய்தார். அவர் மன்னிப்புக் கேட்கும்போது, "இனியாவது தமது நடத்தையை இவர் ஒழுங்கு செய்துகொள்ளட்டும்; இவரை விடப் படிப்பிலும் மரியாதையிலும் மதிப்பிலும் சிறந்தவர் சாரணருள் பலர் இருக்கின்றனர்" என்று திரு சண்முகனார் சொன்னார்.

**விவாதத் திறமை**

சுயராஜ்யக் கட்சி டில்லி சட்டசபையில் அங்கம் வகித்த காலம். பண்டித மோதிலால் நேரு, லாலா லஜபதி ராய், மதனமோகன மாளவியா போன்ற பெருந் தலைவர்கள் சட்டசபை அங்கத்தினருள் இளைஞரான திரு ஆர். கே. எஸ்.ஸிடம் அன்பும் மதிப்பும் நம்பிக்கையும் கொண்டிருந்தனர். அக்காலத்தில் நிதி மந்திரியாக இருந்த சர் பேஸில் பிளாக்கெட் எனும் ஆங்கிலேயருக்கும் திரு சண்முகனாரிடம் அன்பும் மதிப்பும் உண்டு; அதே அளவு அச்சமும் இருந்தது. புள்ளிவிவரங்கள் கூறி, மறுத்துப் பேச முடியாதவாறு, விவாதிக்கும் ஆற்றல் சண்முகனாருக்கு இருந்ததுதான் காரணம். அந்நாள் ரயில்வே நிர்வாக விஷயமாய் ஒரு விவாதம் சட்டசபையில் நடைபெற்றது. அநாவசியமாகச் செலவு செய்யப்படுகிறது என்று திரு ஆர். கே. எஸ்., குற்றம் சுமத்திப் பேசினார். வயதிலும் ஆளும் முறையிலும் முதிர்ச்சி உற்றிருந்த பேஸில் பிளாக்கெட் 'இது சிறுபிள்ளைத்தனமான

பேச்சு' என்று குறிப்பிட்டார். சட்டசபையில் பரபரப்பு ஏற்பட்டது. ஆனால், திரு ஆர். கே. எஸ்., சோர்வு அடையவில்லை.

தகுந்த ஆதாரங்கள் காட்டித், தமது குற்றச் சாட்டைத் திரு ஆர். கே. எஸ்., அழுத்தமாக எடுத்துச் சொன்னார்; "வயது முதிர்ந்த நிதி மந்திரியின் பேச்சு இரண்டாவது குழந்தை வயதின் விளைவே யாகும். செயல் திறம் இழந்துவிட்டவரின் சொல்லே அது" என்று முழங்கினார்.

கிழப்பருவத்தை 'இரண்டாம் குழந்தைப் பண்பு' என்று குறிப்பிடுவது வழக்கம். தமது பேச்சைச் 'சிறுபிள்ளைத்தனம்' என்று கூறிய மந்திரியின் கூற்றைக் 'கிழத்தனத்தின் வெறும் பேச்சு' என்று சுட்டிக் காட்டியது சண்முகனாரின் நாவன்மையை மட்டுமா காட்டுகிறது? அஞ்சாநெஞ்சையும் அளவிடு கிறது அல்லவா?

உடனேயே சர் பிளாக்கெட் பணிந்துவிட்டார். வருத்தம் தெரிவித்துச் சண்முகனாரிடம் மன்னிப்புக் கோரினார் என்பது இங்கே குறிப்பிடத் தகுந்த தாகும்.

**நகைச்சுவை**

திரு ஆர். கே. எஸ்.ஸின் பேச்சில் நளினமான நகைச்சுவை அடிக்கடிக் கலந்து வரும். அவர் மத்திய சட்டசபையில் சபா நாயகராக இருந்தபோது நிகழ்ந்த சம்பவம் இங்கே குறிப்பிடப்படுவது:

சபாநாயகர் தலையில் 'பொய்முடி' (wig) அணிந்தே சட்டசபைக்கு வரவேண்டும் என்பது வழக்கம். ஒரு நாள் திரு சண்முகனார் தலையினை அணி செய்யும் சுருள் கூந்தல் இன்றிச் சட்டசபைக்கு வந்தார். அப்படி வரலாமா என்று ஓர் அங்கத்தினர் கேட்டார்.

"சபையின் தலைவருக்குத் தலை பத்திரமாக இருக்கிற வரையில், பொய்முடி அதிகப்படியான அலங்காரம்தானே!" என்று திரு ஆர். கே. எஸ்., நயம்பட உரைத்தார்.

திரு சண்முகனாரின் நகைச்சுவைத் திறமைக்கு மற்றுமோர் உதாரணம் கூறலாம்.

அமெரிக்காவில் பிரட்டன் உட்ஸ் நகரில் ஒரு மகாநாடு நடந்தது. அதற்குத் திரு ஆர். கே. எஸ்., இந்தியாவின் பிரதிநிதியாகச் சென்றிருந்தார். நாணய மாற்று, ஸ்டெர்லிங் விவகாரத்தில் இந்தியாவுக்குப் பாதகம் ஏற்படும் போலிருந்த காலம் அது. இப்பிரச்னை பற்றி மகாநாட்டில் விவாதிக்க வேண்டும் என்று திரு சண்முகனார் பெரிதும் முயன்றார்.

ஆனால், அதை விவாத விஷயங்களில் ஒன்றாக ஏற்றுக்கொள்ளவே மகாநாட்டின் நிர்வாகிகள் மறுத்து விட்டனர். தங்கள் முயற்சி வீணானதைப் பற்றி எண்ணியபடி இந்தியப் பிரதிநிதிகளிடம் திரு ஆர். கே. எஸ்., 'பணம் போயாலும் சட்டம் மனஸிலாயி!' என்று வேடிக்கையாகச் சொன்னார். 'பணம் போய்

விட்டது ; என்றாலும், சட்டத்தைப்பற்றி நாம் அறிந்து கொண்டோம்!'' என்பதுதான் இதன் பொருள்.

**உண்மை உணர்வு**

திரு சண்முகனார் மெய்ம்மையில் பற்றுதல் கொண்டிருந்தார். எதிரே இருக்கும் நபரின் முகத்திற்காகவோ, அவ்வேளைக்குச் சமாளித்துவிடலாம் என்ற எண்ணத்தினாலோ அவர் பொய் சொல்ல எண்ணியதே இல்லை. தம்மால் ஆகாது என்று தெரிந்தால், அதை மறைக்காமல் கூறிவிட அவர் தயங்கியதுமில்லை. மகாத்மா காந்திஜிக்கும் திரு சண்முகனாருக்குமிடையே நிகழ்ந்த இரு நிகழ்ச்சிகள் திரு சண்முகனாரின் உயரிய பண்பை விளக்கும் நல்ல உதாரணங்களாகும்.

கோவையில் திரு ஆர். கே. எஸ்., வீட்டில் காந்திஜீ தங்கியிருந்தபோது நடந்த சம்பவம் இது: காந்திஜியிடம் அவரது போட்டோ ஒன்றில் கையெழுத்திட்டுத் தரும்படி திரு சண்முகனார் விரும்பினார்.

"என்னுடைய கையெழுத்து வேண்டுமானால், அதற்குச் சரியான விலையைக் கொடுக்க நீர் தயாராக இருக்கிறீரா?'' என்று காந்திஜீ கேட்டார்.

திரு சண்முகனார் தயங்காமல் "விலை கொடுக்கத் தயார். எவ்வளவு பணம் வேண்டும்?' என்றார்.

"எனக்குப் பணம் ஒன்றும் தரவேண்டா ; நான் கேட்கும் வாக்குறுதி ஒன்று கொடுத்தால் அதுவே சரியான விலையாகும்'' என்றார் காந்திஜீ.

திரு ஆர். கே. எஸ்., 'என்ன கேட்பாரோ!' என்று தயங்கினார். "என்னால் என்ன ஆகவேண்டும்?" என்று கேட்டார்.

"ஒவ்வொரு நாளும் அரை மணி நேரத்துக்குக் குறையாமல், கைராட்டையால் நூல் நூற்பதாக எனக்கு வாக்குறுதி அளிக்க வேண்டும்" என்றார்.

திரு ஆர். கே. எஸ்., யோசித்தார். "இது என்னால் முடியாத காரியம்" என்று தெரிவித்தார்.

திரு சண்முகனாரின் பதில் காந்திஜீக்கு மகிழ்ச்சியே தந்தது. "நீர் சொன்ன உண்மையான பதிலைக் குறித்துப் பாராட்டுகிறேன். எனக்கு வாக்குறுதி அளித்துவிட்டு அப்புறம் தவறுவதைவிட, உம்மால் முடியாது என்பதை ஒப்புக்கொண்டதே மேல்" என்றார் அவர்.

திரு ஆர். கே. எஸ்., மகிழ்ச்சியுடன் "நான் ஒளியாமல் உண்மை பேசியதையே விலையாக வைத்துக் கொண்டு கையெழுத்து இடக்கூடாதா?" என்றார்.

காந்தி அடிகள் சிரித்தார். "நான் ஒரு பனியா; நீரும் ஒரு பனியா. வணிகத்திலே நீர் வெற்றிபெற்று விட்டீர்!" என்று சொல்லி, படத்தில் கையெழுத் திட்டுக் கொடுத்தார். (பனியா - வணிகன்)

மற்றொரு சம்பவம் டில்லியில் நடந்தது. அப் போது திரு ஆர். கே. எஸ்., இந்திய சர்க்காரின் நிதி

அமைச்சராக இருந்தார். காந்திஜீ வங்காளத்திலிருந்து டில்லிக்கு வந்திருந்தார். பிர்லா மாளிகையில் தங்கியிருந்த அவரைச் சண்முகனார் காணச் சென்றார்.

அவரைக் கண்டதும், "வாருங்கள் ஐயா! உட்காருங்கள். க்ஷேமம்தானா!" என்று தமிழில் கூறிக் காந்திஜீ வரவேற்றார்.

"க்ஷேமம்தான் சுவாமி! இன்று முதல் என்னிடம் தமிழிலேயே பேச வேண்டும்" என்று தமிழிலேயே திரு ஆர். கே. எஸ்., கேட்டுக்கொண்டார்.

காந்திஜீ சிரித்தார். அவர் சில தமிழ்ச் சொற்களை மட்டுமே கற்றிருந்தார். ஆகவே, ஆங்கிலத்தில்தான் பேசினார்.

"சுதந்தர இந்தியாவில் நீர் அமைச்சராக இருக்கிறீர். உம்முடைய சகாக்களாகிய மற்ற அமைச்சர்களுக்கு நீர் தமிழ் கற்றுக் கொடுக்க வேண்டும். அது உம்மால் முடியாமற் போனால் நீர் இந்துஸ்தானி கற்றுக்கொள்ள வேண்டும்" என்று காந்திஜீ சொன்னார்.

திரு சண்முகனார் தலையாட்டவில்லை. 'சரி' என்று சொல்லவுமில்லை. "நான் இந்துஸ்தானி கற்றுக்கொள்வது எளிது என்று எனக்குத் தோன்றவில்லை. தங்களுடன் முப்பது வருடங்களாக நெருங்கிப் பழகும் ராஜாஜியே சரியாக இந்துஸ்தானி பேசக் கற்றுக் கொள்ள முடியவில்லையே; என்னால எப்படி முடியும்?" என்று தயங்காமல் விடை கூறினார்.

**தமிழ்ப் பற்று**

குஜராத்தி அன்பர் ஒருவர் பம்பாயில் திரு ஆர். கே. எஸ்.ஸிடம் பேசிக்கொண்டிருந்தபோது, "உங்கள் தமிழில் பழைய இலக்கியங்கள் இருக்கின்றனவா?" என்று கேட்டார்.

"இருக்கின்றன" என்று சண்முகனார் சொல்லவும், "எங்கள் குஜராத்தி பாஷையில் இருப்பதுபோல் அவ்வளவு பழைய இலங்கியங்கள் இருக்கின்றனவா?" என்று அந்த அன்பர் மறுபடியும் கேட்டார்.

"உங்கள் குஜராத்தி பாஷையில் எத்தனை வருடங்களுக்கு முந்திய இலக்கியம் இருக்கிறது?" என்று திரு ஆர். கே. எஸ்., விசாரித்தார்.

"500 வருடம்" என்ருர் மற்றவர்.

"எங்கள் தமிழ் மொழியில் கி. மு. 500 வருடங்களுக்கு முந்தின இலக்கியங்கள் உண்டு" என்று பெருமையோடு சொன்ஞர் திரு ஆர். கே. எஸ்.

## 10. போற்றத் தகுந்த பண்புகள்

பொது வாழ்விலும், அரசியல் வாழ்க்கையிலும் சிறப்புற்றுத் திகழ்ந்த திரு சண்முகஞரிடம் போற்றத் தகுந்த பண்புகள் பல குடிகொண்டிருந்தன. அவருடைய நாட்டுப் பறறும தாயமொழிப் பறறும், நேர்மையும் உண்மைஉணர்ச்சியும் அவரது வரலாற்றில் ஆங்காங்கே குறிக்கப்பட்டுள்ள விவரங்களிலிருந்து நன்கு விளங்கும்.

இனி வேறு சில விவரங்களைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

திரு. ஆர். கே. எஸ்.ஸின் சொற்பொழிவுகளில் சிந்தனைத் தெளிவும், தகுந்த ஆதாரங்களும், நேர்மையும், உண்மைத் துடிப்பும் கலந்து

**சொல் வன்மை**

ஒளிரும். எதை எப்படிச் சொல்ல வேண்டும், விரிவுரையை எவ்வாறு முடிக்க வேண்டும் என்பதை அவர் நன்கு தெரிந்து வைத்திருந்தார்.

சொல் வன்மைக்கு இலக்கணம் அதிகமாகப் பேசுதல், மணிக்கணக்கிலே பேசுதல் என்று சில சொற்பொழிவாளர் எண்ணுகின்றனர். சண்முகனார் அந்த எண்ணத்தை ஆதரிப்பவர் அலலர்.

“பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்ரு தவர்”

என்பதுதானே திருவள்ளுவர் காட்டிய வழி. எனவே, திரு சண்முகனாரின் பேச்சுச் சுருக்கமாக அமையும்; ஆனால், எப்பொழுதும் தெளிவாகவும், விளக்கமாகவும் திகழ்ந்தது.

திரு ஆர். கே. எஸ்., தம்மிடம் ஆலோசனை கேட்டவருக்கும் தெளிவாகவும் பயிற்சியோடும் பேச முன்வர வேண்டும் என்றே வழி காட்டினார். “எல்லாப் பொருள்களையும் பற்றிப் பேசத் துடிக்க வேண்டா. மனத்திற்குப் பிடித்த சில விஷயங்களைத் தேர்ந்து கொள்ளுங்கள். அவற்றைப் பற்றி நன்கு

ஆராய்ந்து தெளிவாகப் பேசக் கற்றுக்கொள்வது நல்லது. இரண்டாவதாக, முன்னதாகவே தயார் செய்துகொண்டுதான் பேச வர வேண்டும். ஒவ்வொரு பிரசங்கத்திற்கும முன்பு நனகு பயின்று தேர்ச்சி பெறுதல் அவசியம்'' என்று அவர் சொல்லி வந்தார்.

தம் வாழ்க்கையிலும் இம் முறைகளை அவர் கடைப்பிடிக்கத் தவறியதே இல்லை. எப் பொருள் பற்றி எங்குப் பேச நேரிட்டாலும், 'அந்தச் சமயத்தில் தோன்றும் எண்ணங்களைக் கொண்டு பேசிவிடலாம்' என்று அவர் நினைததே இல்லை. மேடையில் பெயர் பெறச் சந்தர்ப்பமும் சூழ்நிலையும் துணை புரியும் என நம்பி அவர் சும்மா இருந்துவிடுவதில்லை. எந்த விஷயம் பற்றிப் பேச வேண்டுமோ, அது சம்பந்தமாக உள்ள எல்லா விவரங்களையும் சிரத்தையோடு படித்துக் குறிப்புக்கள் எடுத்து, பிரித்துப் பகுத்து நன்றாகச் சிந்தித்து முடிவு காண்பதே அவர் வழக்கம். மாற்ற முடியாத முடிவு என்ற திருப்தி ஏற்படுகிறவரை அவரது முயற்சி நிற்காது.

ஆகவே, சொல் வன்மையில் அவர் மிகத் தேர்ந்தவராக விளங்கியதற்குத் திட்டமான பயிற்சியும் கட்டுப்பாடும் முக்கிய காரணங்களாக அமைந்தன.

**குரு பக்தி**

திரு சண்முகனார் 'குரு பக்தி' கொண்டவராக விளங்கினார். தாம் மாணவராகப் பயிற்சி பெற்ற காலத்தில் தமக்குக் கல்வி புகட்டியதுடன் நல்வாழ்வுக்கு வழி காட்டிய ஆசிரியர்களை அவர் மறந்ததில்லை. அது

மட்டுமோ? சிலரை உபசரித்துக் கௌரவித்துத் தமது குரு பக்தியைக் காட்டவும் அவர் தயங்கியதில்லை. இதற்கு மூன்று உதாரணங்களைக் காட்டலாம்:

திரு பி. ஜே. தேவசகாயம என்பார் திரு ஆர். கே. எஸ்., கல்வி கற்ற பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியராக இருந்தவர். அப் பதவியினின்று ஓய்வு பெற்ற பின்னர், அவர் அடிக்கடி நீலகிரி - கூனூரில் திரு ஆர். கே. எஸ்.ஸுடன் கோடை காலத்தைக் கழிப்பது வழக்கமாயிற்று. திரு சண்முகனார் அவரைத் தமது அதிதியாக ஏற்றுக் கௌரவித்து வந்தார். மற்றுமோர் உபாத்தியாயருக்கு அவரது முதுமைப் பருவத்தில் திரு சண்முகனார் மாதந்தோறும் பணம உதவி வந்தார். சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றிய திரு ஓ. கந்தசாமி செட்டியார் என்பாரும், திரு ஆர். கே. எஸ்.ஸின் மாளிகையில் மதிப்புக்குரிய விருந்தினராக அடிக்கடிக் காணப்படுவது வழக்கம.

திரு ஆர். கே. எஸ்.ஸின் இல்லம் கோவை நகரில் உள்ள அழகான கட்டடங்களில் ஒன்ருகும். அதற்கு 'ஹவார்டன்' என்று பெயர். திரு சண்முகனார் தமது மாளிகைக்கு அப் பெயர் சூட்டியதும் ஒரு விதத்தில் குரு பக்தியையே காட்டும். திரு ஆர். கே. எஸ்., இளம்பருவத்தி லிருந்தே தமது அரசியல் குருவாகக் கிளாட்ஸ்டன் என்பாரை வரித்திருந்தார். இங்கிலாந்தில் புகழ் பெற்றுத் திகழ்ந்த அவ் அரசியல் ஞானியின் மாளிகைக்கு 'ஹவார்டன் காஸில்' என்பதே பெயராகும்.

திரு ஆர். கே. எஸ்.ஸின் மாளிகையில் உள்ள 'ஹவார்டன் நூல் நிலையம்' மிகவும் சிறப்புடையதாகும். அங்குப் பொருள்துறை நூல்களும் அரசியல் நூல்களும் முக்கிய இடம் பெற்றிருந்தன. இலக்கிய நூல்களுக்கும், ஆராய்ச்சிக்கும் ஒப்புநோக்குவதற்கும் தேவையான நூல்களுக்கும் குறைவில்லை.

**நட்பும் உபசரணையும்**

அந்த நூல் நிலையம்தான் கோவையில் சண்முகனாரின் நண்பர் கூடிப் பொழுது போக்கும் இடமாக விளங்கியது. திரு ஆர். கே. எஸ்.ஸின் மனத்திற்குப் பிடித்த நண்பர் ஒருசிலர் இருந்தனர். அவர்கள் அடிக்கடி அங்குச் சந்தித்து உற்சாகமாகப் பேசி மகிழ்ந்து பொழுது போக்குவர். அங்குச் செவிக்கும் அறிவுக்கும் வயிற்றுக்கும் நல்ல உணவு கிடைத்து வந்தது. இரண்டு மூன்று வழக்கறிஞர், ஒன்றிரண்டு மிராசுதார், கல்லூரித் தலைவர் ஒருவர், சுகாதார அதிகாரி ஒருவர், அவரது உதவியாளர், டென்னிஸ் விளையாட்டுக்காரர் சிலர், பாங்கு உத்தியோகஸ்தர் ஒருவர், ஆர். கே. எஸ்.ஸின் சகோதரர், வேறு சில ரசிகர்—இப்படிப் பலரகமானவரும் அங்குக் கூடிப் பொழுது போக்கினர். புத்தகங்களைப் பற்றிய விஷயங்கள், அரிய கருத்துக்கள், விவாதங்கள், வேடிக்கைப் பேச்சுக்கள் எல்லாம் இனிய சம்பாஷணையில் ஒலிக்கும். சம்பாஷணைக் கலையிலும் ஆர்.கே. எஸ்., தேர்ந்து விளங்கினார். கவர்ச்சி தோன்றப் பேசுவதிலும், சிரிப்பூட்டும்படி நளினமாக விஷயங்களை எடுத்துச் சொல்வதிலும் அவருக்கு இணை அவரேதாம்.

இளம் வயதிலிருந்து பழகிய அன்பரிடமும், கல்லூரியில் உடன் கற்ற நண்பரிடமும் அவர் என்றும் அன்பு காட்டத் தவறியதில்லை. சிறிய நண்பர், பெரியவர், நீண்ட காலம் பழகியவர், புதிய நண்பர், ஏழை பணக்காரர் என்ற வேறுபாடு பாராட்டும் பண்பு ஆகியவை அவரிடம் இருந்ததில்லை. அவரைக் கண்டு பேசச் சென்ற எந்த நண்பரும் ஏமாற்றமோ வருத்தமோ கொள்ளார். நண்பர்களை எந்நேரத்திலும் இன முகத்தோடும் இன்சொல்லுடனும் வரவேற்று உரையாடி உபசரிக்கும் பண்பு திரு சண்முகனார் பெற்றிருந்தார்.

மனிதரைப் பார்த்த உடனே மதிப்பிடும் நுண்ணிய உணர்வு அவருக்கு இயல்பாகவே அமைந் திருந்தது. அதனால், யார் நண்பராக ஏற்றுக்கொள்ளத் தகுந்தவர் என்பதில் அவர் காட்டிய பண்பு உயர்ந்த தாகும். ஏற்பட்ட நட்பைப் போற்றி வளர்க்கும் நேர்மை வியத்தற்குரியதாக விளங்கியது.

திரு ஆர். கே. எஸ். அவர்களுடன் மிகவும் நெருங்கிப் பழகிய நண்பருள் திரு வி. பழனிச்சாமி நாயுடு முக்கியமானவர். இவர் கோவை நகரில் பிரபல மான பாங்கர் ஆவர்.

திரு சண்முகனாரின் நண்பர்களில் குறிப்பிடத் தகுந்தவருள் மற்றொருவர் திரு ஜி. டி. நாயுடு அவர்க ளாவர். தொழில் அதிபரான நாயுடு அவர்கள் தமது சொந்த முயற்சியினால் முன்னுக்கு வந்த பெரியார். விஞ்ஞானம், என்ஜினீரிங் போன்ற துறைகளில்

பலரும் போற்றத்தகுந்த வகையில் அரும்பெரும் சாதனைகளை அவர் புரிந்திருக்கிறார். உலகின் பல நாடுகளுக்கும் சென்று அறிவிலும் ஆராய்ச்சியிலும் தேர்ச்சி பெற்றுத் திரும்பி, நாட்டுக்கு நலம் தரும் ஆக்க வேலைகள் பல செய்துள்ள பெருமை அவருக்கு உண்டு. பழச் செடிகள், காய்கறிப் பயிர் முதலியவை அதிகமான பலன் தருவதற்குரிய வழிவகைகளையும் அவர் கண்டுபிடித்து, வெற்றிகரமாகக் கையாண்டும் வருகிறார். தாம் பெற்ற ஆராய்ச்சி உண்மைகளைப் பிறருக்கு எடுத்துச் சொல்வதில் திரு ஜி. டி. நாயுடு அவர்களுக்கு மிக்க ஆர்வம் உண்டு.

கோவை நகரம் பெரிதாக வளர்ச்சி பெற்று 'இந்தியாவின் மான்செஸ்டர்' எனும் புகழை அடைவதற்கு திரு ஆர். கே. எஸ்.ஸும், திரு ஜி. டி. நாயுடு, திரு வி. பழனிச்சாமி நாயுடு முதலிய பெரியாரும் முக்கியமானவர் ஆவர். அவர்களது இடையறு உழைப்பினால் தொழில் உலகமும், தமிழ் நாடும பெரும் பயன் பெற்றுள்ளன என்றே சொல்லலாம்.

திரு ஆர். கே. எஸ்., கோவையில் வழக்கறிஞராக இருந்த காலத்திலும், பின்னர் அரசியல் தலைவராக விளங்கியபோதும் நாட்டின் பெரியார் பலரும் கோவைக்கு வந்தால் அவர் வீட்டிலேயே விருந்தினராகத் தங்கிச் செல்வர். சித்தரஞ்சனதாசர், கவியரசர் தாகூர், மகாத்மா காந்தி அடிகள் போன்றவர் 'ஹவார்டன்' மாளிகையில் தங்கி உபசரணை பெற்றிருக்கின்றனர்.

**ஈகையும் இரக்கமும்**

அறிஞர் சண்முகம் செட்டியார் ஏழைகளிடம் இரக்கம் உடையவர். சிற்றுண்டி விருந்து முடிந்த பிறகு மேஜையில் உள்ள மிகுந்த பொருள்களை எடுத்துக்கொள்ள ஏழைகள் சிலர் வந்து நிற்பர். அவர்களை அடித்து விரட்ட யாராவது முன்வந்தால், திரு ஆர். கே. எஸ்., தடுத்து "அவர்களை அடியாதே. பண்டங்கள் இருந்தால் எடுத்துக் கொடுத்து அனுப்பு" என்று கூறுவதுண்டு.

"நம் நாடு அறிவிலும் நாகரிகத்திலும் முன்னணியில் இருப்பதென்று நாம் பெருமை பாராட்டிக் கொள்கிறோம். இலட்சக்கணக்கான மக்கள் உணவில்லாமல் பட்டினி கிடக்கும் ஒரு நாட்டில், எவ்வளவு சாஸ்திரங்களும் வேதாந்தங்களும் இருந்தபோதிலும் ஒன்றும் பயனே இல்லை. நாட்டில், பசியால் வருந்தும் ஒருவனாவது இல்லை என்று சொல்லக்கூடிய நிலைமைக்கு வந்தாலதான், நாமும் நாகரிக மக்கள் என்று சொல்லிக் கொள்ள உரிமை உண்டு" என்பது சண்முகனாரின் கருத்தாகும்.

புகழும் பெயரும் பெறுவதற்காக அவர் தான தருமம் செய்ய விரும்பியதில்லை. ஆனால், தகுதியும் தேவையும் உணர்ந்து தருமத்துக்கு உதவ அவர் பின்வாங்கியது மில்லை. கோவையில் அவிநாசிச் சாலையில் தமது தாயார் பெயரில் ஓர் உயர்நிலைப் பள்ளி அமைக்கத் திரு சண்முகனார் ஏற்பாடு செய்தார். அதற்காக எழுந்த கட்டடங்களின் நிர்மாணச் செலவை

மூன்று லட்ச ரூபாய் என்று கணக்கிடப்பட்டுள்ளது. பெருந்தொகை செலவு செய்து கோவையில் அவர் ஒரு கலியாண மண்டபம் நிறுவியுள்ளார். இக் கட்டடம் ஏழை எளியவர்க்கு மிகுதியும் பயன்பட்டு வருகிறது.

**சமயப் பற்று**

பொதுவாக ஆங்கிலக் கல்வி பெற்று, நாகரிக வாழ்வில் உயர்ந்து, அரசியலில் ஈடுபட்டுள்ளவர்கள் தெய்வ நம்பிக்கை, சமயப் பற்று முதலியவைகளில் மனம் செலுத்துவதில்லை. அவ்விதம் செய்வது தம் பெருமைக்கு இழுக்கு என்றும் சிலர் எண்ணுவர். ஆனால், அறிஞர் சண்முகனார் அத்தகையவர் அல்லர். வெளித் தோற்றத்தில் அவரும் அப்படித்தானோ என்றே எண்ணத் தோன்றினாலும், உண்மையில் அவருக்குத் தெய்வம், சமயம் ஆகியவற்றில் திடமான பற்று இருந்தது.

திரு ஆர். கே. எஸ்., சைவப் பற்றுள்ள குடும்பத்தில் வந்தவர். அவரது பாட்டனார் உப்பிலியபாளையம் ராமசாமிச் செட்டியார் சமயத் திருப்பணிகள் பல செய்துள்ளார். சண்முகனாரின் தாயார் சிரங்கம்மாள் சிவன்பால் மிக்க அன்பு கொண்டவர். கோவையை அடுத்துள்ள திருப்பேரூரில் சிவாலயத் திருப்பணிகள் பல அவ்வம்மையார் செய்திருக்கின்றார். மேலும், சிவன் பெருமைகளையும சிவனடியார் சிறப்புக்களையும் கேட்டு மகிழ்வதில் அவர் விருப்பமும் ஆர்வமும் உடையவர்.

அவ் அம்மையாரின் புதல்வரும் சிவ பக்தியும் சமயப் பற்றும் கொண்டு வாழ்ந்தது அதிசயம் இல்லை

அல்லவா? திரு ஆர். கே. எஸ்., சிவனடிமைத் திறத்திலும் திருமுறைகளிலும் மனமார்ந்த ஈடுபாடும் பக்தியும் உடையவராக இருந்தார். அவா, யுத்த காலத்தில் அமெரிக்கா செல்ல நேர்ந்தபோது, அவரது உறவினரும் நண்பரும் மனம் கலங்கினர். அக்காலத்தில் ஆபத்து எப்பொழுது வரும் என்று எதிர் பார்க்க முடியாது அன்றோ? கடமையின அழைப்பால் அமெரிககாவுக்குப் புறபபட்ட திரு சண்முகனார் கடவுளிடம் நம்பிக்கை வைத்து, திருப்பேரூர் போய் ஸ்ரீ பட்டிப்பெருமானையும் நாயன்மார்களையும் வணங்கி விடைபெற்றுச் சென்றார். திருவாசகமும் திருமுறைகளும் அவருக்குத் துணையா யிருந்தன.

சென்னையிலும் உதகையிலும் உள்ள சண்முகனாரின் விடுதிகள் 'முருக விலாஸ்' என்ற பெயர் பெற்றே விளங்கின. இதிலிருந்து அவருக்கு முருகக் கடவுளிட மிருந்த பக்தி விளங்கும். சமயததில் அதிக மான பற்றுள்ளவர்போல் வெளி வேடம் பூண்டு ஊரானரை ஏமாற்றும் போலி வேதாந்திகளைப் போன்றவர் அவர் அல்லர். 'சமயம எனபது மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையே உள்ள தனிப்பட்ட உறவு' என்று ஆங்கிலக் கவி பைரன சொலலியிருக்கிறார். அறிஞர் ஆர். கே. எஸ்.ஸின் சமயக் கொள்கையை அவர் கருத்துரையிலிருந்தே அறியலாம்.

"ஒழுக்கமும் தெய்வ பக்தியும் ஒருவனுக்கு ஒருங்கே அமைய வேண்டுவது அவசியம். ஒழுக்கமும் பக்தியும் உண்மையாக மேற்கொண்டு ஒழுகுவோர் பலர் இறைவன் திருவருளுககுப் பாத்திரராகாது

உலகிலே துன்பம் அடைய நேர்ந்தால், அதைக் கொண்டு ஒழுக்கமும் பக்தியும் வேண்டா என்று தள்ளிவிட முடியுமா? ஒழுக்கமும் பக்தியும் ஒருவனுக்கு அமைந்தால் அவையே சிறந்த பாக்கியமாகும். அவற்றால் வேறு பயன் அடைய வேண்டுவதில்லை" என்று அறிஞர் ஆர். கே. சண்முகம் செட்டியார் எழுதியுள்ளார்.

பிறர் மதிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு பக்தி வேடத்தை வெளியே காட்டித் திரிவது அவருக்குப் பிடிக்காது. திரு ஆர். கே. எஸ்., பகல் உணவு அருந்தப் போகுமுன் நீராடித் திருநீற்றை மூன்று வரையாக நெற்றியில் இட்டுச் சந்தனப் பொட்டு அணிந்து இறை வணக்கம் செலுத்திவிட்டே செல்வார். கோவையில் தமது மாளிகையின் முன்றிலில் சிறு பிள்ளையார் கோயில் ஒன்று அழகுற அமைத்து நாடோறும் பூசை நடக்க அவா ஏற்பாடு செய்திருந்தார். இது ஒன்றே அவருடைய பக்தித் திறனை அறிவதற்குப் போதிய சான்றாகும்.

**குடும்பத் தலைவர்**

பொதுவாழ்வில் சிறப்புற்று விளங்கிய திரு சண்முகனார் அவர்தம் குடும்ப வாழ்க்கையிலும் மாண்புற்று விளங்கினார். அவருக்குத் தம் தாயாரிடம் அளவிலா அன்பு உண்டு. பேரறிஞரும் பெரிய தலைவருமாய் வளர்ந்து உலகப் புகழுடன் விளங்கும் நிலைமையிலும், அவர் தாயின் முன் பணிவுள்ள மகனாகவே நடந்துகொண்டார்.

திரு சண்முகனருக்கு மூன்று இளைய சகோதரர் உளர். குடும்பத்தின் முதல்வர் திரு ஆர். கே. எஸ். அவர்கள் தாம். அவருக்கு அடுத்தவர் திரு ஆர். கே. வேங்கடாசலம் செட்டியார் ஆவர். பீ. ஏ., பீ. எல்., படித்துத் தேர்ந்துள்ள அன்னார் இப்போது இந்தியன் பாங்க் டைரக்டராகப் பணியாற்றி வருகிறார்.

திரு சண்முகனரின் இரண்டாவது தம்பியார் திரு ராமகிருஷ்ணன் செட்டியார் ஆவர். அவர் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இயற்கை சேர்ந்தார்.

மூன்ருவது சகோதரர் திரு ஆர். கே. கந்தசாமிச் செட்டியார் ஆவர். அவர் பீ. ஏ. பட்டம் பெற்றிருக்கிறார். அவர் இங்கிலாந்து சென்று அனுபவம் பெற்றவர். கோவையில் உள்ள வசந்தா மில்லின் நிர்வாகப் பொறுப்பைக் கவனித்து வருபவருள் அவரும் ஒருவர் ஆவர்.

திரு ஆர். கே. எஸ்.ஸுக்கு இரண்டு சகோதரிகள் இருந்தனர். ஆனல், அவ்விருவரும் முன்னரே இறந்து விட்டனர்.

திரு சண்முகம் செட்டியாருக்கு மூன்று புதல்வியர் உளர். மூவரும் தக்க கணவரைத் திருமணம் புரிந்து சிறப்பாக வாழ்க்கை நடத்துகின்றனர். முதல் புதல்வியார் திருமதி சாவித்திரியின் கணவர் திரு ஏ. சண்முகம் அவர்கள் பீ. ஏ. பட்டம் பெற்றவர். கோவை அசோஸியேடட் சிமெண்டு கம்பெனியின் முக்கிய அதிகாரியாகப் பதவி வகித்து வருகிருர்.

இரண்டாவது புதல்வியார் திருமதி சரஸ்வதி ஆவர். அவரது கணவர் திரு ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பர்மா ஷெல் ஏஜெண்டாகச் செயலாற்றுகிறார்.

மூன்றாவது புதல்வியார் திருமதி ஜானகியின் கணவர் திரு எம். ராமசாமி அவர்கள் பீ. எஸ்ஸி. கற்றுத் தேர்ந்தவர். அவர் வசந்தா மில்லின் மானேஜராகப் பணிபுரிந்து வருகிறார்.

திரு ஆர். கே. எஸ். அவர்கள் தமது குடும்பத்தைச் சேர்ந்த அனைவரிடமும் பரிவும் பாசமும் கொண்டிருந்தார். அவர்களும் திரு சண்முகனாரின் பொதுப் பணிகளிலும் சமூக சேவைகளிலும் ஆர்வமும் ஒத்துழைப்பும் காட்டிவந்தது குறிப்பிடத்தகுந்ததாகும்.

வாழ்க்கையைக் கலையாக மதிப்பவர் மிகக் குறைந்த அளவினரே. அவர்களுள்ளும் வாழும் வகையைக் கற்றவர் மிகச் சிலரேயாவர். 'நாம் வாழ்க்கையை எப்படி அமைக்கிறோம் என்பது முக்கியமன்று.

**வாழ்க்கைக் கலை**

வாழ்வில் நாம் எவ்வளவு அனுபவம் பெற்று மகிழ்கிறோம் என்பதே முக்கியம்'—இதுவே அவரது கருத்து. நன்றாக வாழவேண்டும்; வாழ்க்கை வசதிகள் அளிக்கக் கூடிய எல்லாச் சுகங்களையும் மனத் திருப்தியுடன் அனுபவிக்க வேண்டும்; குறைவின்றிச் சகல சௌகரியங்களோடும் வாழ வேண்டும்; நாவுக்குச் சுவையுள்ள உணவு வகைகளை உண்ண வேண்டும் எனும் எண்ணங்களை அவர் வளர்த்தார். ஆனால்,

நாகரிகச் சீமான்களில் பெரும்பான்மையினரைப் போல் அவர் மதுபான வகைகளை ஆதரிக்க ஆசைப்படவில்லை. ஒழுக்கத்தில் சிறந்த திரு ஆர். கே. எஸ்., தீய பழக்கங்களை அறவே வெறுத்தார்.

உயரமாய், பருமன் இன்றி, வசீகரத் தோற்றத்துடன் அவர் விளங்கினர். தன்னடக்கத்துடன் திகழ்ந்த அவர் முகத்தை மோகன முறுவல் எப்பொழுதும் அணி செய்யும். அப் புன்னகையே அவருக்கு அழகு; அதுவே அவருடைய ஆயுதம். அவரைக் கண்டவர் அம் முறுவலினுல் கவரப்பட்டனர். அவருடைய எதிரிகள் அவர் சிரிப்பைக் கண்டு பலமிழந்து திணறுவது வழக்கம். அவருடைய தோற்றத்தில் ஆடம்பரம் இல்லை. அவரது பண்பிலே 'உள்ளொன்று, புறமொன்று' என்ற ஏமாற்று கிடையாது. அவர் அவசரப்பட்டு வாக்குறுதி கொடுப்பதில்லை; பொய்யான நம்பிக்கைகளை விதைப்பதில்லை. ஆனுல், அவர் ஒரு காரியத்தைச் செய்வதாகச் சொன்னுல், சொன்ன சொல்லைச் செய்து முடிக்கும் ஆற்றலும் உறுதியும் கொண்டிருந்தார். பெரும் பேச்சால் பெயர்பெற விரும்பியவர் அல்லர் அவர்; செயல் துடிப்பு மிக்கவர். அவர் தொட்ட காரியம் தங்கமாய்த் துலங்கியது போலவே, அவருடைய சொல்லுக்கும் தங்கத்தின் மதிப்பு இருந்தது.

திரு ஆர். கே. எஸ்., ஒரு லட்சியவாதி; ஆயினும், அவர் செயலாக்க முடியாக் கனவுகளிலே சஞ்சரிக்கும் உள்ளம் பெற்றவர் அல்லர். அவர் உலகின் தன்மையை

உணர்ந்திருநதார்; மனிதரின் தன்மைகளேயும் தவறு களேயும் சக்தியையும் மதிப்பிடுவதில் சமர்த்தர். ஆகவே, அவர் உலகத்தில என்னென்னவற்றை எவ்வளவு தூரம் சாதிக்க முடியும் என்ற திட்டமான கருத்துக் கொண்டிருந்தார். சுவடுபட்டுப்போன பழைய பாதை அவருக்குப் பிடித்தமானதன்று. பொதுவாழ்விலே தமக்கெனத் தனி வழி காணத் துணிந்தவர் அவர். தமது உள்ளம் வழிகாட்டியபடி, தமது நேர்மைக் குணமும் உண்மைப் பண்பும சிந்தனைத் திறமும் அறிவுறுத்திய முறையில் செயல் புரிந்தார் திரு ஆர். கே. எஸ். பிறரைப் பின்பற்றிச் செயலாற்ற ஆசைப் பட்டதில்லே. அவர் பிறவித் தலேவர். பிற தலேவரால் ஆட்டிவைக்கப்படுவதறகாகப் பொதுவாழ்வில் புகுந் தவர் அல்லர். உரிமை உணர்வும், அதைவிட அதிகமான மெய்த்துணிவும் அவரிடம காணப்பட்டன. அதனு லேயே அவர் எந்தக் கட்சிக்கும் கட்டுப்பட்டுக் கிடக்க வில்லே.

அரசியலில் புகுந்த காலத்தில் திரு ஆர். கே. எஸ்., ஜஸ்டிஸ் கட்சியிலும், பிறகு சுயராஜ்யக் கட்சியிலும் அங்கம் வகித்தது உண்மைதான். ஆனுல், அக்காலங் களிலும் அவர் தமது கொள்கைகளேயும் நம்பிக்கை களேயும் விட்டுக் கொடுக்காத சுயேச்சைவாதியாகவே விளங்கினுர். இதனுல் கட்சிப் பிரமுகர் சிலரோடு வாதாடவேண்டிய அவசியமும் அவருக்கு ஏற்பட்ட துண்டு. அவருடைய அரசியல் வெற்றிகளுக்குக் கட்சிகள் காரணம் அல்ல. அவருடைய திறமையையும் புகழையும் பெற்றுப் புகழ் பெறவே கட்சிகள்

முன்வந்தன. ஆரம்பகாலத்திலும் பின்னரும் ஒவ்வொரு கட்சியும் அவரைத் தம்மைச் சேர்ந்தவராக ஆக்கிக் கொள்வதில் ஆர்வம் காட்டத் தவறியதில்லை. அவருடைய சொந்த முயற்சிகளும் திறமைகளும், ஒழுக்கமும் கட்டுப்பாடான திட்டங்களும் அவருக்கு வெற்றி பெற்றுத் தந்தன என்பதுதான் உண்மையாகும்.

அவருக்குப் பெரிய பெரிய பதவிகள் கிட்டின. எனினும், தன்னலத்துக்காகவோ, தமக்கு வேண்டியவர்களுக்கு லாபம் கருதியோ, தமது சமூகத்துக்கு லாபம் தேடித் தரவேண்டும் என்ற நோக்கிலோ, திரு ஆர். கே.எஸ்., தமது பொறுப்பையும் செல்வாக்கையும் துர்விநியோகப்படுத்தியது கிடையாது. நேர்மை நிறைந்த அவருடைய வாழ்வின் மாண்பு இது என்பதில் ஐயமில்லை.

## 11. இறுதிக் காலம்

அறிஞர் ஆர். கே. எஸ்., சோர்வுற்றுப் படுக்கும் காலம் வரை நாட்டுக்கும் மக்களுக்கும் தம்மால் இயன்றவரையில் பணிபுரிந்தே வந்தார்.

1952 ஜனவரியில் சென்னையில் கூடிய ஐந்தாவது அகில இந்திய வாணிப மகாநாட்டிற்கு அவர் தலைமை வகித்தார். நாட்டின் பொருளாதார நிலையை ஆராய்ந்து, ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்டம் பற்றி விரிவாகப் பேசி, முன்னேற்றத்திற்கான பல யோசனைகளையும் அவர் அப்போது கூறினார்.

1952 மார்ச் மாதம் சென்னைச் சட்டசபைக்கு அங்கத்தினராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவ் வருடம் மே மாதம் கோவையில் கூடிய சென்னை ராஜ்யக் கல்வி மகாநாட்டிற்குத் தலைமை வகித்தார். கல்வி முன்னேற்றத்திற்கான அரிய ஆலோசனைகளை அங்கு அவர் எடுத்துச் சொன்னார்.

சென்னையில், தமிழ் இசைச் சங்கததிற்காக 'அண்ணாமலை மன்றம்' எனும் அழகிய கட்டடததை நிறுவுவதில் அவர் தீவிர கவனம் செலுத்தி வந்தார்.

இவ்விதம் நாட்டுக்கும் மொழிக்கும் இசைக்கும் கலைக்கும் அரும்பணி ஆற்றிய அறிஞர் ஆர். கே. எஸ். அவர்களின் அறுபதாண்டு நிறைவை, 18 - 10 - 1952 அன்று தமிழ் நாடும் தமிழ் அ... ...ரும் உரிய வகையில் கொண்டாடி மகிழ்ந்தனர்.

ஓய்வே இல்லாது உழைத்தும் சிந்தித்தும் வாழ்ந்த திரு சணமுகனாருக்கு இரத்தக் கொதிப்பு உண்டாயிற்று. இதயக் கோளாறும் ஏற்பட்டிருந்தது. இரண்டு மாத காலம் அவர் துன்பம் அனுபவித்தார். அதனால் அவர் வீட்டிலேயே தங்கிவிடும்படி நேர்ந்தது. நோய் குணமடையவில்லை. 1953 மே மாதம் 5-ஆம் நாள் மாலை 6 மணிக்கு அறிஞர் ஆர். கே. எஸ்., மண்ணுலகு விடுத்து விண்ணுலகுக்கு விருந்தாயினர்.

எதிர்பாராத இத் துயரச் செய்தி கேட்டு அறிவுலகம் திடுக்கிட்டது. தமிழ் நாடு கண்ணீர் சிந்தியது. இந்தியாவே துயருற்றது. நாட்டின் தலைவரும் அறிஞரும் அனுதாபச் செய்திகள் மூலம் தங்கள் வருத்தத்தை அறிவித்தனர்.

1399
18 DEC 1957

திரு சண்முகனாரின் ஆவி பிரியும் வேளையில், அவரது வயோதிக அன்னையாரும், குடும்பத்தினரும், நண்பர் திரு சி. எஸ். இரத்தினசபாபதி முதலியாரும் படுக்கை அருகில் இருந்தனர். திரு ஆர். கே. எஸ்., கொச்சி திவானாக இருந்தபோது அணிந்திருந்த சரிகைத் தலைப்பாகை, நீண்ட கறுப்புக் கோட்டு, கறுப்புக் கால்சட்டை முதலியனவற்றை அணிவித்து அவர் உடலைப் பூப்பல்லக்கில் அமர்த்தி, ஒன்றரை மைல் தூரத்தில் உள்ள மயானத்திற்கு எடுத்துச் சென்றனர். வணிகரும் ஆலைமுதலாளிகளும் நண்பரும் சூழ்ந்து சென்று இறுதிச் சடங்குகளை நடத்தி முடித்தனர். அச் சடங்கு நிகழும் முன் திருவாசகத்தி லிருந்து சில பகுதிகள் படிக்கப்பட்டன. அறிஞர் பலர் திரு சண்முகனாரைப் பாராட்டிப் பேசினர்.

புகழோடு தோன்றி, தமக்கும் நாட்டுக்கும் நாட்டினருக்கும் பெருமை அளிக்கும் வகையில் செய லாற்றிய தமிழகத்தின் தலைவர் திரு ஆர். கே. எஸ். அவர்கள் சரித்திரத்தில் நிலையான இடம் பெற்றுவிட்ட உத்தமராவர். அறிஞர் ஆர். கே. எஸ்.ஸின் உடல் மறைந்தாலும் அவரது இணையில்லாச் சேவை என்றும் அன்று மலர்ந்த நறுமலர் போல் மணம் வீசும். மேதை சண்முகனாரைப் போன்ற நாட்டு நலங் கண்டவர், உண்மையில் மறைந்தொழியவே முடியாது. திரு சண்முகனார் மறையவில்லை; அவர் அழியாச் சுடர். அவர்தம் நற்பண்புகளும் வாழ்க்கை முறையும் பலருக்கும் நல்வழி காட்டுவனவாகுக.

---

UNIVERSITY LIBRARY
MAY 1957
UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI
1399.